ஜூன் 24, 2026 உண்மையை உரக்கச் சொல்லும் மக்கள் சார்பு நாளிதழ் பக்கம் - 12

# காலச்சக்கரம்

www. k24tamilnews.com தமிழகம் முழுவதும்... விலை ரூ. 4

## ரூ.40 கோடி எங்கே...? வேலூர் மாமன்றத்தில் திமுக கோஷ்டி மோதல் - உள்ளாட்சித் தேர்தலில் எதிரொலிக்குமா?



## அடுத்த 25 ஆண்டுகளுக்கு நான் தான் ராஜா! எம்எல்ஏ வினோத் கண்ணன் மிரட்டல் பேச்சு?

## வேலூர் மாநகராட்சியில் மெகா வரி மோசடி! வரி குறைப்பு ஊழலில் ஏஆர்ஓ-க்கள்?

## தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம் ஆண்டுக்கு ரூ.755.83 கோடி ஒதுக்கீடு

உடனுக்குடன் ஆன்லைனில் செய்திகளை படிக்க,

https://www.k24tamilnews.com/

RNI. No: TNTAM/2015/73620

உண்மையை உரக்கச் சொல்லும் மக்கள் சார்பு நாளிதழ்

பக்கம்-12



தவத்திரு க.இராமமூர்த்தி அகமுடைய முதலியார்
எங்களை காத்தருளும் என் தந்தைக்கு சமர்ப்பணம்
இரா.தாட்சாயிணி குமார்
காலச்சக்கரம் ஆசிரியர்-நிறுவனர்


# காலச்சக்கரம்

www.k24tamilnews.com தமிழகம் முழுவதும் KALASAKKARAM

Editor Dr.R.Dhakshayani Kumar, ICWA(Int), PGDHM, M.Com., M.B.A., M.Phil., Ph.D.,


WAY2DIAL
Your Gateway to Business and Consumer Opportunities
Your ultimate digital platform for seamless B2B and B2C promotion, connecting businesses and consumers for endless opportunities and growth
* Connecting Forever *
9360006677
www.way2dial.com

❖ காலம்-12 / Vol-12 ❖ சக்கரம்-134 / Issue No-134 ❖ ஜூன் 24, 2026 / June 24 2026 ❖ புதன் / Wednesday ❖ விலை ₹ 4.00 / Price ₹ 4.00

## ஆண்டுக்கு ரூ.755.83 கோடி ஒதுக்கீடு : ஜூன் 22 முதல் கணக்கீடு

# தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம் அறிவிப்பு



ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது சட்டப்பேரவையில் முதல்வர் விஜய் நேற்று உரையாற்றினார். அப்போது திமுக ஆட்சி மீது பல்வேறு குற்றச்சாட்டுகளை அவர் முன்வைத்ததால் அவையில் கடும் அமளி ஏற்பட்டது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் திமுக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்பு செய்தனர்.

## திமுகவினர் அவையிலிருந்து வெளிநடப்பு

# ஆதாரமின்றி திமுக மீது பழி; கேள்விக்கு பதில் சொல்லாமல் ஓடுகிறார் முதல்வர்

## சினிமா பாணியில் ஸ்கிரிப்ட் படிக்கிறார் என உதயநிதி காட்டம்!

**சென்னை, ஜூன் 24-**

"சட்டப்பேரவையில் முதல்வர் விஜய் நேற்று பேசிய 30 நிமிட பேச்சில் 10 ரீல்ஸ் தேறும்; அவையை சினிமா தியேட்டர் போல மாற்றிவிட்டனர்" என்று எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கடுமையாக விமர்சித்துள்ளார்.

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது நேற்று சட்டப்பேரவையில் முதல்வர் விஜய் உரையாற்றினார். அப்போது திமுக ஆட்சி மீது பல்வேறு குற்றச்சாட்டுகளை அவர் முன்வைத்ததால் அவையில் கடும் அமளி ஏற்பட்டது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் திமுக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்பு செய்தனர்.

### டயலாக் ஒப்பிக்கும் முதல்வர்

**பின்னர், செய்தியாளர்களிடம் உதயநிதி ஸ்டாலின் கூறியதாவது:**

சட்டப்பேரவையில் முதல்வர் விஜய் வழக்கம்போல சினிமா பாணியில் தனக்கு வழங்கப்பட்ட ஸ்கிரிப்டை பேசிக் கொண்டிருந்தார். உண்மைக்கு புறம்பான செய்திகளை அவையில் பதிய வைக்க முயன்றார். பத்திரிகையாளர்களுக்கும் அவர் பதில் சொல்வது கிடையாது; சட்டப்பேரவையில் எங்களுக்கும் பதில் அளிப்பதில்லை. மக்களின் கேள்விகளைத்தான் நாங்கள் எழுப்புகிறோம். ஆனால், எதற்கெடுத்தாலும் திமுக மீது பழி போடுவதையே அவர் வழக்கமாக வைத்துள்ளார்.

ஆளுநர் பேரவைக்கு வரும்போது முதலில் தமிழ்த்தாய் வாழ்த்தும், இறுதியில் தேசிய கீதமும் பாடப்பட வேண்டும் என்பதுதான் மரபு. ஆனால் இந்த முறை மரபு மீறப்பட்டுள்ளது. இது குறித்து ஆளுநருடன் என்ன சமரசம் செய்து கொண்டீர்கள் என்று கேட்டதற்கு முதல்வரிடம் எந்தப் பதிலும் இல்லை. ஒரு புரோட்டாகால் கூட முதல்வருக்குத் தெரியாதது வருத்தமளிக்கிறது.

### திட்டங்கள் முடக்கம், மின்வெட்டு

41 லட்சம் மாணவர்கள் பயனடைந்த

☛தொடர்ச்சி 2ம் பக்கம்

# செப்.15ம் தேதி முதலமைச்சர் விஜய் தொடங்கி வைக்கிறார்

**சென்னை, ஜூன் 24-**

தமிழக அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தைகள் பயன்பெறும் வகையில், ஒரு கிராம் தங்க மோதிரம் வழங்கும் 'தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தை' அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15 அன்று முதல்வர் விஜய் தொடங்கி வைப்பார் என்று தமிழக அரசு அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

**இது குறித்துத் தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:**

முதல்வர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், 'வெற்றித் தமிழகம் தொலைநோக்குத் திட்டங்களுக்கு' (Vetri Thamizhagam vision documenஸ்) தமிழக அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இதில் மிகவும் சிறப்பான மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த திட்டமாக 'தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம்' வடிவமைக்கப்பட்டுள்ளது. அரசு மருத்துவமனைகளில் பிரசவிக்கும் ஒவ்வொரு குழந்தையையும், பிரசவித்த தாயையும் கௌரவிக்கும் முகமாக இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தத் தற்போது அரசாணை (GO) வெளியிடப்பட்டுள்ளது.

### ஜூன் 22 முதல் கணக்கீடு:

இந்தத் திட்டத்தின் கீழ், கடந்த ஜூன் 22, 2026 முதல் அரசு மருத்துவமனைகளில்



பிறக்கும் குழந்தைகள் அனைவரும் பயன்பெறத் தகுதியுடையவர்கள் ஆவர். தமிழகத்தில் நிரந்தரமாக வசிக்கும் குடும்பங்களைச் சார்ந்த, அரசு மருத்துவமனைகளில் பிரசவிக்கும் தாய்மார்களின் குழந்தைகளுக்கு இத்திட்டத்தின் கீழ் ஒரு கிராம் தங்க மோதிரம் வழங்கப்படும். இதற்கான ஒப்பந்தப் புள்ளிகளை (Tenders) உடனடியாகக் கோருவதற்கு முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.

### தமிழர் பாரம்பரியத் தாய்மாமன் சீர்:

தமிழர் பாரம்பரியத்தில், 'தாய்மாமன் சீர்' என்ற ஒரு உன்னதமான மரபு உள்ளது. அதன்படி, தாயின் சகோதரர் புதிதாகப் பிறந்த குழந்தையை வரவேற்று வாழ்த்தும் விதமாகத் தங்கம் உள்ளிட்ட பரிசுகளை வழங்குவது வழக்கம். அந்தப் பண்பாட்டு மரபைப் பிரதிபலிக்கும் வகையில், தமிழக அரசே ஒவ்வொரு குழந்தைக்குமான தாய்மாமனின் பங்கை ஏற்று, அன்பும் அக்கறையும் நிறைந்த வரவேற்பின் அடையாளமாக இந்த ஒரு கிராம் தங்க மோதிரத்தை வழங்கவுள்ளது.

### ஆண்டுக்கு ரூ.755.83 கோடி நிதி:

தமிழக அரசு தாய் - சேய் நலனை மேம்படுத்துவதற்கு எப்போதும் மிகுந்த முன்னுரிமை அளித்து வருகிறது. ஏற்கனவே கர்ப்பிணிப் பெண்களுக்கான நிதியுதவி, இலவச பிரசவம், பிக்மி(PICME) மென்பொருள் கூட்டு கண்காணிப்பு உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகின்றன.

அதன் தொடர்ச்சியாக, தற்போது கொண்டு வரப்பட்டுள்ள இந்தத் 'தாய்மாமன் தங்க மோதிரத் திட்டத்திற்காக' மாநில அரசு ஆண்டுதோறும் ரூ.755.83 கோடி நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது.

அரசு சுகாதாரச் சேவைகளில் மக்களின் நம்பிக்கையை மேலும் வலுப்படுத்தும் நோக்கிலும், தாய்மையின் மகிழ்ச்சியைக் கொண்டாடும் வகையிலும் இத்திட்டம் செப்டம்பர் 15, 2026 அன்று முதல்வர் விஜய் அவர்களால் முறைப்படி தொடங்கி வைக்கப்படவுள்ளது என அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.







## இன்றைய ராசி பலன்கள்

### மேஷம்-நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும் நாள்

உத்தியோகத்தில் உங்களின் திறமைக்கேற்ற பாராட்டுக்கள் கிடைக்கும். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும். நீண்ட நாள் ஆசைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கான வாய்ப்புகள் அமையும். பேச்சு வன்மையால் காரிய சித்தி ஏற்படும். கணவன் மனைவிக்கு இடையே நெருக்கமும் புரிதலும் மேம்படும். தடைகளை வெற்றி கொள்வீர்கள்.

அதிர்ஷ்ட திசை: வடமேற்கு | எண்: 1 | நிறம்: பொன்னிறம். நட்சத்திர பலன்: அஸ்வினி: பாராட்டு | பரணி: வாய்ப்பு | கிருத்திகை: புரிதல்.

### ரிஷபம் - புதுவிதமான அனுபவம் கிடைக்கும் நாள்

தேவைக்கேற்ப வரவுகள் உண்டாகி மகிழ்ச்சி தரும். வெளியூர் பயணங்களால் புதுவிதமான அனுபவங்கள் ஏற்படும். வியாபாரப் பணிகளில் எதிர்ப்புகள் குறையும். நண்பர்களிடம் மனம் விட்டுப் பேசுவது நல்லது. உறவினர்கள் வழியில் ஆதாயம் உண்டாகும். போட்டிகளில் ஈடுபட்டு மனமகிழ்வீர்கள்.

அதிர்ஷ்ட திசை: மேற்கு | எண்: 6 | நிறம்: பொன்னிறம். நட்சத்திர பலன்: கிருத்திகை: வரவு | ரோகிணி: சாதகம் | மிருகசீரிஷம்: ஆதாயம்.

### மிதுனம் - பிரார்த்தனைகள் நிறைவேறும் நாள்

வருமான முன்னேற்றத்தைப் பற்றிய சிந்தனைகள் மேலோங்கும். நீண்ட நாள் பிரார்த்தனைகள் நிறைவேறும். சக ஊழியர்களிடத்தில் விட்டுக்கொடுத்துச் செயல்படவும். எதிலும் சிக்கனம் அவசியம். நண்பர்கள் வழியில் மகிழ்ச்சியான சூழல் ஏற்படும். வியாபாரத்தில் புதிய தொடர்புகள் உண்டாகும்.

அதிர்ஷ்ட திசை: தென்கிழக்கு | எண்: 2 | நிறம்: வெண்மை நிறம். நட்சத்திர பலன்: மிருகசீரிஷம்: பிரார்த்தனை | திருவாதிரை: அனுசரிப்பு | புனர்பூசம்: அறிமுகம்.

### கடகம்-குழப்பங்கள் நீங்கித் தெளிவு பிறக்கும் நாள்

உத்தியோக பணிகளில் எதிர்பாராத சில பொறுப்புகள் மூலம் உயர்வுகள் உண்டாகும். பயணங்களின் போது உடமைகளில் கவனம் தேவை. வழக்கு தொடர்பான விஷயங்களில் சாதகமான முடிவுகள் ஏற்படும். பெரியோர்களின் ஆலோசனைகள் மூலம் மனதில் இருந்த குழப்பங்கள் நீங்கித் தெளிவு பிறக்கும்.

அதிர்ஷ்ட திசை: வடகிழக்கு | எண்: 9 | நிறம்: இளம் சிவப்பு நிறம். நட்சத்திர பலன்: புனர்பூசம்: உயர்வு | பூசம்: அனுசரிப்பு | ஆயில்யம்: தெளிவு.

### சிம்மம் - தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள்

உடன் பிறந்தவர்கள் மிகவும் ஒத்துழைப்பாக இருப்பார்கள். வெளிவட்டாரத்தில் செல்வாக்கும் மதிப்பும் அதிகரிக்கும். வியாபாரத்தில் சில புதிய மாற்றங்களைச் செய்வீர்கள். வாழ்க்கைத் துணையுடனான நெருக்கம் அதிகரிக்கும். உயர் அதிகாரிகள் உதவியாக இருப்பதால் மனதில் தன்னம்பிக்கை கூடும்.

அதிர்ஷ்ட திசை: தென்மேற்கு | எண்: 1 | நிறம்: அடர் மஞ்சள் நிறம். நட்சத்திர பலன்: மகம்: செல்வாக்கு | பூரம்: அனுசரிப்பு | உத்திரம்: தன்னம்பிக்கை.

### கன்னி - கலகலப்பான சூழல் நிலவும் நாள்

பேச்சுக்களில் அனுபவ அறிவு வெளிப்படும். எதிர்காலம் தொடர்பான சேமிப்புகள் மேம்படும். பழைய பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும். விருப்பமான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். குடும்பத்தில் கலகலப்பான சூழல் ஏற்படும். வியாபாரத்தில் பொறுமையுடன் செயல்படுவது நல்லது.

அதிர்ஷ்ட திசை: தெற்கு | எண்: 3 | நிறம்: சிவப்பு நிறம். நட்சத்திர பலன்: உத்திரம்: சேமிப்பு | அஸ்தம்: தேடல் | சித்திரை: புரிதல்.

### துலாம்-இடமாற்றங்கள் சாதகமாகும் நாள்

வியாபார பணிகளில் புதுவிதமான யுக்திகளைக் கையாளுவீர்கள். அரசு சார்ந்த பணிகளில் ஆதாயம் உண்டாகும். மனதில் எதிர்காலம் நிமித்தமான புதிய சிந்தனைகள் பிறக்கும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த இடமாற்றங்கள் சாதகமாக அமையும். உணர்ச்சிவசப்படாமல் பொறுமையாக இருக்கவும்.

அதிர்ஷ்ட திசை: வடக்கு | எண்: 6 | நிறம்: ஆரஞ்சு நிறம். நட்சத்திர பலன்: சித்திரை: அனுபவம் | சுவாதி: சிந்தனை | விசாகம்: பொறுமை.

### விருச்சிகம்-பணிவான பேச்சால் நம்பிக்கை கூடும்

திட்டமிட்ட சில பணிகளில் அலைச்சல்கள் ஏற்படும். மற்றவர்களைப் பற்றிய தேவையற்ற கருத்துக்களைத் தவிர்க்கவும். குழந்தைகளை அரவணைத்துச் செல்வது நல்லது. பணிவான பேச்சுகள் உங்கள் மீதான நம்பிக்கையை மேம்படுத்தும். விலை உயர்ந்த பொருட்களில் கூடுதல் கவனம் வேண்டும்.

அதிர்ஷ்ட திசை: தெற்கு | எண்: 9 | நிறம்: ஆரஞ்சு நிறம். நட்சத்திர பலன்: விசாகம்: அலைச்சல் | அனுஷம்: நம்பிக்கை | கேட்டை: அனுசரிப்பு.

### தனுசு - நினைத்த காரியம் கைகூடும் நாள்

அணுகுமுறையில் நல்ல மாற்றங்கள் ஏற்படும். வித்தியாசமான ஆசைகள் பிறக்கும். உடன்பிறந்தவர்கள் ஒத்துழைப்பாக இருப்பார்கள். சுப காரியங்களில் கலந்து கொண்டு மகிழ்வீர்கள். வியாபாரத்தில் லாபங்கள் மேம்படும். உத்தியோகத்தில் பாராட்டுகள் கிடைக்க நினைத்த காரியம் கைகூடும்.

அதிர்ஷ்ட திசை: வடகிழக்கு | எண்: 3 | நிறம்: ரோஸ் நிறம். நட்சத்திர பலன்: மூலம்: மாற்றம் | பூராடம்: ஒத்துழைப்பு | உத்திராடம்: பாராட்டு.

### மகரம் - சுபசெய்திகள் தேடிவரும் நாள்

வியாபாரத்தில் சில புதிய நுணுக்கங்களைக் கற்றுக்கொள்வீர்கள். பிள்ளைகளின் மூலம் சுபசெய்திகள் கிடைக்கும். குலதெய்வ வழிபாட்டிற்கான பயணங்களை மேற்கொள்வீர்கள். செயல்பாடுகளில் இருந்துவந்த மந்தத்தன்மை குறையும். அரசு வழியில் எதிர்பார்த்த உதவிகள் சாதகமாகும்.

அதிர்ஷ்ட திசை: மேற்கு | எண்: 2 | நிறம்: பச்சை நிறம். நட்சத்திர பலன்: உத்திராடம்: நுணுக்கம் | திருவோணம்: மாற்றம் | அவிட்டம்: மேன்மை.

### கும்பம்-சோர்வுகள் நீங்கி உற்சாகம் பிறக்கும்

செயல்பாடுகளில் இருந்த சோர்வுகள் நீங்கி சுறுசுறுப்பாவீர்கள். குடும்ப உறுப்பினர்களுடன் மனம் விட்டுப் பேசுவீர்கள். வெளிவட்டாரத்தில் மதிப்புகள் அதிகரிக்கும். எதிர்பார்த்த சில உதவிகள் சாதகமாகும். தடைப்பட்ட பணிகளைச் செய்து முடிப்பீர்கள். ஆரோக்கியம் சீராகும்.

அதிர்ஷ்ட திசை: மேற்கு | எண்: 1 | நிறம்: இளம் பச்சை நிறம். நட்சத்திர பலன்: அவிட்டம்: உற்சாகம் | சதயம்: உதவி | பூரட்டாதி: நலம்.

### மீனம்-புதிய கண்ணோட்டம் பிறக்கும் நாள்

கணவன் மனைவிக்கிடையே மனம் விட்டுப் பேசுவதன் மூலம் தெளிவுகள் ஏற்படும். பலவிதமான சிந்தனைகளால் செயல்பாடுகளில் தாமதம் உண்டாகலாம். பயனற்ற விவாதங்களைத் தவிர்க்கவும். வெளி உலக வாழ்க்கை பற்றிய புதுவிதமான கண்ணோட்டங்கள் பிறக்கும். ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

அதிர்ஷ்ட திசை: தென்கிழக்கு | எண்: 9 | நிறம்: வெண் மஞ்சள் நிறம். நட்சத்திர பலன்: பூரட்டாதி: தெளிவு | உத்திரட்டாதி: கவனம் | ரேவதி: அலைச்சல்.

---

### நாம் யாருடைய 'பி' டீமும் அல்ல; மக்களின் தூய்மையான அணி

# ஒன்றிய அரசோடு கண்மூடித்தனமான மோதலை விரும்பவில்லை; தமிழக வளர்ச்சியே முக்கியம்!

### பேரவையில் முதல்வர் விஜய் அதிரடி பேசசு

**சென்னை, ஜூன் 24-**

"ஒன்றிய அரசு சார்ந்த கட்சியுடன் கொள்கை அளவில் நேரெதிராக நின்றாலும், எதற்கெடுத்தாலும் கண்ணை மூடிக்கொண்டு ஒன்றிய அரசோடு மோதல் போக்கைக் கடைப்பிடிக்க நாம் விரும்பவில்லை. நமக்கு எப்போதும் தமிழகத்தின் வளர்ச்சிதான் முக்கியம்" என்று முதல்வர் விஜய் சட்டப்பேரவையில் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

**சட்டப்பேரவையில் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது முதல்வர் விஜய் நேற்று ஆற்றிய பதில் உரை வருமாறு:**

நான் ஏதோ படப்பிடிப்பில் இருந்து நேராக வந்து முதல்வர் ஆனது போல எதிர்க்கட்சிகள் பேசி வருகின்றன. 1990-கள் முதல் பல்வேறு வழிகளில் நான் மக்களுக்குத் துணையாக நின்றுள்ளேன். எனது திரைப்படங்களில் முடிந்த அளவு ஊழல் ஒழிப்பு, சமூக நீதி, கல்வி, அரசியல் விழிப்புணர்வு பற்றிப் பேசினோம். அதற்காக எனது படங்கள் சந்தித்த பிரச்சினைகள் மிக அதிகம். மக்கள் நம்மைத் தெளிவாகப் புரிந்து கொண்டதால்தான் இன்று நம்மை ஆட்சியில் அமர்த்தியுள்ளனர்.

**40 நாட்களில் சாதனைகள்**

நாம் ஆட்சிப் பொறுப்பேற்ற இந்த 40 நாட்களில், சிங்கப்பெண் அதிரடிப் படை, 200 யூனிட் இலவச மின்சாரம், குறுவை சாகுபடி தொகுப்புத் திட்டம், தனி போதைப்பொருள் ஒழிப்புப் படை, 717 மதுபானக் கடைகள் மூடல், அம்மா உணவகங்கள் புதுப்பிப்பு, பத்திரப்பதிவுத்துறை பகல் கொள்ளைக்கு



முற்றுப்புள்ளி மற்றும் பயிர்க்கடன் தள்ளுபடி உள்ளிட்ட பல்வேறு அதிரடித் திட்டங்களைச் சாத்தியப்படுத்திக் காட்டியுள்ளோம்.

தமிழகத்தின் கருவூலத்தைத் தேய்த்து, ஒய்ந்து கிடக்கச் செய்துவிட்டு, தற்போது நமக்கு ஆட்சி செய்யத் தெரியாது என்கிறார்கள். எங்களுக்கு மக்கள் பணி மட்டும்தான் செய்யத் தெரியும்; மக்கள் பணத்தைச் சுரண்டத் தெரியாது. தமிழகம் மின்மிகை மாநிலமாக இருந்தாலும், கடந்த காலங்களில் ஏற்பட்ட நிர்வாகக் குளறுபடிகள் மற்றும் வேண்டுமென்றே சிலரின் திட்டமிட்ட நடவடிக்கைகளாலுமே ஆங்காங்கே மின்வெட்டு ஏற்படுகிறது.

**மாநில உரிமைகளை விட்டுக் கொடுக்க மாட்டோம்:**

"ஒன்றியத்தில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்ற கொள்கையைக் கொண்டவர்கள் நாம். தற்போதைய ஒன்றிய அரசு சார்ந்த கட்சியுடன் கொள்கை அளவில் நேரெதிராக நின்றாலும், எதெற்கெடுத்தாலும் கண்ணை மூடிக்கொண்டு ஒன்றிய அரசோடு மோதல் போக்கை விரும்புபவர்கள் நாம் அல்ல. நமக்கு எப்போதும் தமிழகத்தின் வளர்ச்சி தான் முக்கியம்.

அதற்காக அரசியல் ரீதியான கொள்கைகளையும், மாநில உரிமைகளையும் எப்போதும் விட்டுக்கொடுக்க மாட்டோம். இதில் பொதுமக்களுக்கும், சிறுபான்மை சகோதரர்களுக்கும், ஆதரவு இயக்கங்களுக்கும் எந்த சந்தேகமும் வேண்டாம்."

**அவதூறு அரசியலுக்கு முற்றுப்புள்ளி**

நாம் யாருடைய 'பி' டீமும் (B-Team) அல்ல; நாம் எப்போதும் தூய்மையான மக்களின் அணி. நீட் தேர்வு தமிழகத்திற்குத் தேவை இல்லை என்பதில் நாம் உறுதியாக உள்ளோம். அதேபோல், அரசு விழாக்களின் தொடக்கத்தில் 'தமிழ்த்தாய் வாழ்த்து' பாடுவதுதான் நம்முடைய மாறாத நிலைப்பாடு. சட்டம் ஒழுங்கு பிரச்சினையில் எதிர்க்கட்சிகள் அக்கறையோடு கேள்வி எழுப்புவதாகத் தெரியவில்லை; அவர்கள் செய்வது வெறும் அவதூறு அரசியல் மட்டுமே என்று முதல்வர் விஜய் தனது உரையில் குறிப்பிட்டார்.

---

# 'பார்ட்டி ஃபண்ட்' என்று சொன்னவுடன் திமுகவுக்கு ஏன் பயம்? அவையை விட்டு ஓடியது ஏன்?

### "நான் முதல்வன்" திட்டம் முடக்கப்படவில்லை-அமைச்சர் நிர்மல்குமார்

**சென்னை, ஜூன் 24-**

"சட்டப்பேரவையில் முதல்வர் விஜய் தனது உரையில் 'பார்ட்டி ஃபண்ட்' (Party fund) எனக் குறிப்பிட்டவுடன் திமுகவினருக்கு ஏன் பயம் வந்தது என்று தெரியவில்லை, உடனடியாக அவையிலிருந்து வெளிநடப்பு செய்துவிட்டனர்" என்று அமைச்சர் நிர்மல்குமார் விமர்சித்துள்ளார்.

சட்டப்பேரவை வெளிநடப்பு மற்றும் எதிர்க்கட்சித் தலைவரின் குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளித்து அமைச்சர் நிர்மல்குமார் நேற்று செய்தியாளர்களிடம் கூறியதாவது:

முதல்வர் உரை தொடங்கியதும் அவர் 'பார்ட்டி ஃபண்ட்' என்று சொன்னவுடன் திமுகவினர் பயந்து பேரவையில் இருந்து வெளியேறிவிட்டனர். எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் தனது அறையில் அமர்ந்து முதல்வரின் உரையை முழுமையாகக் கேட்டுவிட்டு, பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசியுள்ளார், அதற்கு என் நன்றி.

**எம்.ஜி.ஆர் காலத்து டெக்னிக்:**

சட்டப்பேரவையில் பேசுவதற்கு ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பாணி உள்ளது. எனக்கு ஒரு பாணி, மறைந்த கருணாநிதிக்கு ஒரு பாணி, முதல்வர் விஜய்க்கு ஒரு பாணி என தனித்தனி பாணிகள் உள்ளன. அன்றைய காலத்திலும் மக்கள் திலகம் எம்.ஜி.ஆரை இப்படித்தான் விமர்சித்துப் பேசினார்கள். அதே பழைய டெக்னிக்கைத்தான் இப்போதும் திமுகவினர் பின்பற்றுகிறார்கள். இவர்களது இந்த அணுகுமுறை எப்போதும் மாறப்போவதில்லை.

**புரோக்கர்களுக்கு முற்றுப்புள்ளி**



கடந்த திமுக ஆட்சியில் பணம் இல்லாமல் எந்தவொரு பணி மாறுதலும் (Transfer) நடக்கவில்லை. ஆனால், இப்போது நிலைமை முற்றிலும் மாறிவிட்டது. திமுக ஆட்சிக்காலத்தில் சாமானிய மற்றும் ஏழை, எளிய மக்கள் சட்டப்பேரவைக்குள் வந்ததே இல்லை; இடைத்தரகர்கள் மட்டுமே வந்து சென்றனர்.

ஆனால் இப்போது ஒவ்வொரு அமைச்சரையும் சாதாரண ஏழை மக்கள் நேரடியாகச் சந்திக்க முடிகிறது. இதை அவர்களால் சகித்துக் கொள்ள முடியவில்லை. கடந்த ஆட்சியில் ஒவ்வொரு துறைக்கும் பி.ஏ-க்களை நியமித்து வசூல் செய்யும் வேலைதான் நடந்தது.

**அதிமுக சந்திப்பு பின்னணி?**

அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியைச் சந்திக்க நாங்கள் நேரம் கேட்டது உண்மைதான். ஆனால், தற்போது அதிமுகவில் உட்கட்சிப் பிரச்சினை உச்சத்தில் இருப்பதால், இந்தச் சமயத்தில் சந்திப்பு நடந்தால் நன்றாக இருக்காது என அவர்கள் தரப்பில் சொல்லிவிட்டனர். எடப்பாடி பழனிசாமிக்கு நேரடியாக போன் கிடையாது, அவரைச் சுற்றியிருக்கும் 3, 4 பேரைத் தொடர்பு கொண்டுதான் பேசினோம். அதனால்தான் அதிமுகவின் அடுத்தகட்ட தலைவர்களைச் சந்தித்தோம். அந்தச் சந்திப்பு முழுக்க முழுக்க மரியாதை நிமித்தமாக மட்டுமே நடந்தது. அவர்களை வைத்து வாக்கெடுப்பிலா நாங்கள் வெற்றி பெற்றோம்?

**பிடிஆரிடம் கேளுங்கள்**

'நான் முதல்வன்' திட்டத்தை இந்த அரசு முடக்கவில்லை. ஒவ்வொரு திட்டத்தின் பெயரும் அதன் செயல்பாட்டைச் சார்ந்து இருக்க வேண்டும். பழைய பெயரில் பல்வேறு குழப்பங்கள் இருந்தன.

'பார்ட்டி ஃபண்ட்' உங்கள் கட்சியில் இல்லையா? திமுகவின் 30 ஆயிரம் கோடி ரூபாய் சொத்து மதிப்பு குறித்து அவர்களது முன்னாள் அமைச்சர் பி.டி.ஆரிடம் கேட்டுப் பாருங்கள். அது பார்ட்டி ஃபண்டா இல்லையா? இது குறித்து விசாரணை நடத்தலாமா வேண்டாமா என அவரிடம் கேளுங்கள்.

சட்டம் ஒழுங்கு குறித்து முதல்வர் பேரவையில் தெளிவாக விளக்கிவிட்டார். எங்கள் தரப்பு உறுப்பினர்கள் அவைக்குள் அமைதியாகவே இருந்தனர், திமுகவினர்தான் கத்திக் கொண்டிருந்தனர். தற்போது தமிழகத்தில் 'பார்ட்டி ஃபண்ட்' கலாச்சாரம் ஒழிக்கப்பட்டுவிட்டது என்று அமைச்சர் நிர்மல்குமார் தெரிவித்தார்.

---

# ஆதாரமின்றி திமுக மீது பழி..

(1-ம் பக்கம் தொடர்ச்சி)

'நான் முதல்வன்' திட்டத்தை ஏன் முடக்கினீர்கள் என்று கேட்டதற்கு, எந்த ஆதாரமும் இல்லாமல் முறையற்ற குற்றச்சாட்டுகளை வைக்கிறார்கள். மின்வெட்டு தொடர்பான கேள்விகளுக்கு மீண்டும் அவகாசம் கேட்டு, அதையும் திமுக மீது பழி போட்டுவிட்டனர். பயிர்க் கடன் தள்ளுபடி குறித்துக் கேட்டால், விவசாயிகளை திமுக தூண்டி விடுகிறது எனக்கூறி விவசாயிகளின் போராட்டத்தை முழுமையாகக் கொச்சைப் படுத்தியிருக்கிறார்.

யார் தயவும் இல்லாமல் ஆட்சி அமைக்கவில்லை என்று கூறும் முதல்வர், அதிமுகவின் ஒரு பிரிவை மட்டும் ஏன் பார்க்கச் சென்றார்? 'பீரோ புல்லிங்' போல அதிமுக எம்.எல்.ஏ-க்களை இந்த அரசு இழுத்துக் கொண்டிருக்கிறது.

**கேரவன் தான் பாக்கி:**

சினிமா ஸ்பாட்டுக்கு ஒருவர் வந்து எப்படி டயலாக்கை மனப்பாடம் செய்து நடித்துவிட்டுச் செல்வாரோ, அதேபோல முதல்வர் செய்திருக்கிறார். சட்டப்பேரவையில் விசில் எல்லாம் அடிக்கிறார்கள்.

இதையெல்லாம் இந்தச் சபை இதுவரை பார்த்ததே இல்லை. முதல்வர் செயற்கையாகப் பேசுகிறார், நடிக்க ஆரம்பித்துவிட்டார். சபாநாயகரிடம் ஆக்ஷன், கட் எல்லாம் கேட்பார் போல தெரிகிறது. இனி சட்டமன்ற வளாகத்திற்கு கேரவன் கூட வந்துவிடும் என்று நினைக்கிறேன்.

சபாநாயகர் இயக்குநராகவும், அமைச்சர்கள் உதவி இயக்குநர்களாகவும் செயல்பட்டு சபையை ஒரு காமெடி டைமாக நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

ஊழல் குற்றச்சாட்டுகள் இருந்தால் நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டும். அதை விடுத்துப் பொத்தாம் பொதுவாகப் பொதுக்கூட்ட மேடை போல பேசக்கூடாது.

**எதிர்கொள்ளத் தயார்**

முதல்வர் விஜய் 'பார்ட்டி ஃபண்ட்' (Party fund) என்று கூறுகிறார். அது எந்தப் பார்ட்டி என்று தைரியம் இருந்தால் சொல்லட்டும், அதை எதிர்கொள்ள நாங்கள் தயாராக இருக்கிறோம். எதையும் ஆதாரத்தோடு கூற வேண்டும். தவெகவின் தேர்தல் வாக்குறுதிகள் குறித்து அவர்கள் எதுவும் பேசவில்லை. திமுகவின் திட்டங்களான 'தமிழ் புதல்வன்', 'புதுமைப்பெண்' ஆகியவை மக்களின் மனதில் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. இந்த ஆட்சி ஒரு கேலிக்கூத்து ஆட்சியாக உள்ளது என்று உதயநிதி ஸ்டாலின் சாடினார்.

---

### மேகேதாட்டு விவகாரம்

# நடுவர் மன்றம் கோருவது நிலையை பேராபத்து!

### சீமான் கடும் எச்சரிக்கை

**சென்னை, ஜூன் 24-**

"காவிரியாற்றின் குறுக்கே மேகேதாட்டுவில் அணை கட்ட முயலும் கர்நாடக அரசை எதிர்க்கப் புதிய நடுவர் மன்றம் அமைக்கக் கோரும் தவெக அரசின் முடிவு, தற்போதிருக்கும் நிலையை இன்னும் மோசமாக்கும் பேராபத்தாக முடியும்" என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கடுமையாக எச்சரித்துள்ளார்.

**இது குறித்து அவர் வெளியிட்டுள்ள விரிவான அறிக்கை வருமாறு:**

மேகேதாட்டு அணைக்கு எதிராக நடுவர் மன்றம் அமைக்கக் கோரும் திருத்தத்தைச் சட்டப்பேரவை தீர்மானத்தில் எதிர்க்கட்சியான திமுக சேர்க்கக் கோரியதும், அதனை உடனடியாக ஏற்றுக்கொண்டு ஆளும் தவெக அரசு திருத்தித் தீர்மானம் இயற்றியிருப்பதும் அதிர்ச்சி அளிக்கிறது. இது ஆளும் தவெக அரசுக்கும், எதிர்க்கட்சியான திமுகவுக்கும் காவிரி நதிநீர் உரிமையில் எவ்வித அடிப்படைப் புரிதலும் இல்லை என்பதையே காட்டுகிறது.

கடந்த திமுக ஆட்சியிலேயே நடுவர் மன்றம் கோரிக் கடிதம் எழுதப்பட்டதாக உதயநிதி ஸ்டாலினும், அதற்காகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக முதல்வர் விஜய்யும் கூறியிருப்பது மேலும் அதிர்ச்சியளிக்கிறது. முன்வைக்கப்படும் இந்த நடுவர் மன்றக் கோரிக்கையை நாம் தமிழர் கட்சி மிகக் கடுமையாக எதிர்க்கிறது.

**புதிய நடுவர் மன்றத்தால் என்ன ஆபத்து?**

கீழ்ப்பாசன மாநிலங்களின் அனுமதியின்றி மேல்பாசன மாநிலங்கள் புதிய அணை கட்டக்கூடாது என்பது விதி. இதனை உச்ச நீதிமன்றத் தீர்ப்புகளும், காவிரி மேலாண்மை ஆணையத்தின் வழிகாட்டல்களும் உறுதிசெய்கின்றன. தமிழ்நாட்டின் அனுமதி இல்லாமல் மேகேதாட்டுவில் அணை கட்ட முயற்சிப்பதே சட்ட விரோதம்தான் என்னும்போது, புதிய நடுவர் மன்றம் என்பது தேவையில்லாத ஒன்றாகும்.

ஒருவேளை, புதிய நடுவர் மன்றம் அமைக்கப்பட்டால் அது சிக்கலை மேலும் பல காலம் இழுத்துக்கொண்டே போகவே வழிவகை செய்யும். ஒருவேளை, அந்நடுவர் மன்றத்தின் தீர்ப்பு மேகேதாட்டு அணை கட்ட ஒப்புதல் வழங்குமானால் சட்டப்பூர்வமாக இருக்கும் கடைசி வாய்ப்பையும் தமிழ்நாடு இழக்க நேரிடும்.

**வரலாற்றுத் துரோகம்**

முன்னாள் பிரதமர் வி.பி.சிங் ஆட்சியில் நடுவர் மன்றம் அமைக்கப்பட்டு இடைக்காலத் தீர்ப்பு, இறுதித்தீர்ப்பு, அரசிதழ் வெளியீடு, காவிரி மேலாண்மை வாரியம் எனப் பலகட்டப் படிநிலைகளைக் கடந்து வந்துள்ளோம். தற்போதைய நிலவரப்படி, 177.25 டி.எம்.சி. தண்ணீரைத் தமிழ்நாட்டுக்குக் கர்நாடகா தர வேண்டும். அதைத் தராமல் சண்டித்தனம் செய்யும் கர்நாடக அரசு, மழைக்கால வடிகாலாக மட்டுமே தமிழ்நாட்டைப் பயன்படுத்துகிறது. தமிழ்நாட்டை மாறி மாறி ஆண்ட திராவிடக் கட்சிகளின் ஆட்சிக்காலங்களில்தான் காவிரி உரிமை காவு கொடுக்கப்பட்டது.

**ஜூன் 27-ல் நகலெரிப்புப் போராட்டம்**

உண்மை இவ்வாறிருக்க, மேகேதாட்டுக்கு எதிராக நடுவர் மன்றம் அமைக்கக் கோரும் இத்தீர்மானம் முழுக்க முழுக்க தமிழின விரோதமாகும். அதனைக் கண்டித்து வரும் ஜூன் 27-ஆம் தேதி (27.06.2026) அன்று தஞ்சாவூரில் தமிழ்த்தேசியப் பேரியக்கத்தின் தலைவர் பெ.மணியரசன் தலைமையில் நடக்கவிருக்கும் 'சட்டமன்றத் தீர்மான நகலெரிப்புப் போராட்டத்தில்' நாம் தமிழர் கட்சியும் பெருந்திரளாகப் பங்கேற்கும்.

எனவே, நடுவர் மன்றம் அமைக்கக் கோரும் முடிவைக் கைவிட்டு, அத்தீர்மானத்தைத் தவெக அரசு உடனடியாகப் பின்வாங்க வேண்டும். அனைத்துக் கட்சிகளின் கூட்டத்தைக் கூட்டி விவாதித்து, தமிழ்நாட்டுக்குரிய காவிரி நதிநீர் பங்கீட்டு உரிமையை உறுதிசெய்வதற்கான ஆக்கப்பூர்வமான சட்டப்போராட்டங்களைத் தொடங்க வேண்டும் என்று சீமான் வலியுறுத்தியுள்ளார்.

இதழில் வெளியாகும் விளம்பரம் மற்றும் வாசகர் கருத்துக்களின் உண்மை தன்மைக்கு காலச்சக்கரம் நிர்வாகம் எந்த வகையிலும் பொறுப்பல்ல.
All Rights Reserved. Legal Jurisdiction Vellore District Court Only by News Editor. News e-mail: k24tamilnews@gmail.com; Admin e-mail : kalasakkaram@gmail.com

Owned, Published and printed by R.DHAKSHAYANI at KALASAKKARAM PRINTERS Printed and Published from No.54, 3rd Cross Street, Ganapathi Nagar, Vellore -632002, Vellore Dt, Tamil Nadu. Editor : R. DHAKSHAYANI


DK Films வழங்கும்
SOME CRIMES AREN'T RANDOM... THEY'RE PLANNED.
CRIME
SQUAD
TRUTH. JUSTICE. NO EXCUSES.
CRIME & THRILLERS
WEB SERIES
COMING SOON
YouTube @K24TamilTv
MISSING
HAVE YOU SEEN THIS PERSON?
EVIDENCE
DAILY NEWS
SERIAL KILLER STRIKES AGAIN
WHO'S NEXT?
CRIME SCENE DO NOT CROSS

திருவள்ளூர் மாவட்டத்தில்

# மாநில, மாவட்ட, வட்டார வள பயிற்றுநர்கள் வேலை

**திருவள்ளூர், ஜூன் 24-**

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், திருவள்ளூர் மாவட்ட இயக்க மேலாண்மை அலகின் கீழ், இரண்டாம் கட்டத் திட்டப் பணிகளை விரிவுபடுத்துவதற்காக மாநில, மாவட்ட மற்றும் வட்டார வள பயிற்றுநர்களுக்கான தற்காலிகப் பணியிடங்களுக்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கவிதா தெரிவித்துள்ளார்.

இப்பணியிடங்கள் அனைத்தும் 24 மாத காலவரையறை கொண்ட தற்காலிகப் பணியிடங்களாகும். பெண்களுக்கும் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும். இதற்கான தகுதி விவரங்கள் வருமாறு:

### 1. மாநில வள பயிற்றுநர்

**கல்வித்தகுதி**: சமூகக்கல்வி / சமூகஅறிவியல் / ஊரகவளர்ச்சி / பெண்கள் கல்வி அல்லது சமூகப் பணியில் (MSW) ஏதேனும் ஒரு முதுகலைப்பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

**வயது**: 01.06.2026 அன்று 30 முதல் 45 வயதிற்குள் இருக்க வேண்டும்.

**அனுபவம்**: சுய உதவிக்குழு, கூட்டமைப்புகள், சமூகப் பணி நிறுவனங்கள் அல்லது அரசு திட்டங்களில் ஊரகப் பணிகளில் 10 ஆண்டுகள் பணியாற்றிய அனுபவம் அவசியம்.

### 2. மாவட்ட வள பயிற்றுநர்

**கல்வித்தகுதி**: ஏதேனும் ஒரு துறையில் முழுநேரக் கல்வி முறையில் முதுகலைப் பட்டம் (Post Graduate) பெற்றிருக்க வேண்டும்.

**வயது**: 01.06.2026 அன்று 30 முதல் 45 வயதிற்குள் இருக்க வேண்டும்.

**அனுபவம்**: தொடர்புடைய ஊரகப் பணிகளில் 4 ஆண்டுகள் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

### 3. வட்டார வள பயிற்றுநர்

**கல்வித்தகுதி**: ஏதேனும் ஒரு துறையில் முழுநேரக் கல்வி முறையில் இளங்கலைப் பட்டம் (Under Graduate) பெற்றிருக்க வேண்டும்.

**வயது**: 01.06.2026 அன்று 25 முதல் 45 வயதிற்குள் இருக்க வேண்டும்.

**அனுபவம்**: தொடர்புடைய ஊரகப் பணிகளில் 3 ஆண்டுகள் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

### கூடுதல் தகுதிகள்:

விண்ணப்பதாரர்களுக்குத் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் எழுத, பேசத் தெரிந்திருக்க வேண்டும். சிறந்த தகவல் பரிமாற்றத் திறன், கணினியில் Word, Excel மற்றும் இணையத்தைப் பயன்படுத்துவதில் போதிய அறிவு இருக்க வேண்டியது அவசியமாகும்.

### விண்ணப்பிக்கும் முறை

தகுதியும் விருப்பமும் உள்ளவர்கள் தங்களின் விண்ணப்பங்களை, சுய சான்றொப்பமிட்ட சான்றிதழ்களின் நகல்களுடன் வரும் 29.06.2026 அன்று மாலை 5.45 மணிக்குள் கீழ்க்கண்ட முகவரிக்குத் தபால் மூலமாகவோ, நேரிலோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ சமர்ப்பிக்க வேண்டும். தகுதியான நபர்கள் எழுத்துத்தேர்வு மற்றும் நேர்காணல் மூலம் தேர்வு செய்யப்படுவர்.

### விண்ணப்பிக்க வேண்டிய முகவரி

திட்ட இயக்குநர் / இணை இயக்குநர், மாவட்ட இயக்க மேலாண்மை அலகு,தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், மாவட்ட ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்துறை அலுவலக வளாகம்,திருவள்ளூர் மாவட்டம்.

கூடுதல் விவரங்களுக்கு https://tncdw.org என்ற இணைய தளத்தை அணுகலாம் என மாவட்ட ஆட்சியர் ச.கவிதா விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தங்கும் விடுதியுடன் ஜவுளித்துறை இலவசப் பயிற்சி ரூ.50,000 வரை சம்பளத்தில் வேலைவாய்ப்பு!

**வேலூர், ஜூன் 24-**

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக்கழகம் (தாட்கோ) மற்றும் தனியார் நிறுவனம் இணைந்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு ஜவுளி சார்ந்த தொழில்முறைப் பயிற்சிகளை வழங்கவுள்ளதாக வேலூர் மாவட்ட ஆட்சியர் பி.எஸ்.லீலா அலக்ஸ் தெரிவித்துள்ளார்.

**இதற்கான தகுதிகள் மற்றும் நிபந்தனைகள் குறித்து அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில்,**



தாட்கோ சார்பில் இளைஞர்களின் சுய வேலைவாய்ப்பு மற்றும் திறன் மேம்பாட்டிற்காகப் பல்வேறு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதன் தொடர்ச்சியாக, தற்போது 'ஜவுளி வடிவமைப்பு உற்பத்தி' (Diploma in Textile Industry Course) மற்றும் 'துணிகளுக்கு சாயம், ஓவியம் மற்றும் அச்சிடுதல்' (Certificate in Textile Painting, Dyeing & Printing Course) ஆகிய பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

### தகுதி வரம்புகள்:

கல்வித்தகுதி: பிளஸ்-2 (12-ஆம் வகுப்பு) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

வயது வரம்பு: 18 வயது முதல் 35 வயதுக்குள் இருக்க வேண்டும்.

வருமான வரம்பு: குடும்ப ஆண்டு வருமானம் ரூ.3 லட்சத்திற்குள் இருக்க வேண்டும்.

### இலவச விடுதி வசதி:

இப்பயிற்சிக்கான கால அளவு 4 மாதங்கள் ஆகும். இப்பயிற்சிகள் கோயம்புத்தூர் மாவட்டத்தில் நடைபெறவுள்ளதால், தேர்வு செய்யப்படும் நபர்கள் அங்குள்ள விடுதியில் தங்கிப் படிப்பதற்கான ஒட்டுமொத்த செலவினத்தையும் தாட்கோ நிறுவனமே முழுமையாக ஏற்கும்.

### ரூ.50,000 வரை ஊதியம்:

பயிற்சியினை முழுமையாக முடிக்கும் இளைஞர்களுக்கு அரசு அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும். மேலும், பயிற்சி அளிக்கும் தனியார் நிறுவனத்தின் மூலமாகவே தகுதியான நபர்களுக்குத் தொடக்க கால மாத ஊதியமாக ரூ.25,000 முதல் ரூ.50,000 வரை வருவாய் ஈட்டக்கூடிய வேலைவாய்ப்புகளும் உறுதி செய்து தரப்படும்.

### விண்ணப்பிக்கும் முறை:

இப்பயிற்சியில் சேர விருப்பமுள்ள வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்கள் தாட்கோவின் அதிகாரப்பூர்வ இணையதளமான www.tahdco.com என்ற முகவரியில் உடனடியாகப் பதிவு செய்து கொள்ளலாம். இந்த அரிய வாய்ப்பினைப் பயன்படுத்தி இளைஞர்கள் தங்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொள்ளுமாறு ஆட்சியர் பி.எஸ்.லீலா அலக்ஸ் கேட்டுக்கொண்டுள்ளார்.

# வேலூர் மாவட்ட நலவாழ்வு சங்கத்தில் வேலைவாய்ப்பு ஜூன் 26-க்குள் விண்ணப்பிக்க ஆட்சியர் அழைப்பு!

**வேலூர், ஜூன் 24-**

பொதுசுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு மருந்துத்துறை சார்பில், வேலூர் மாவட்ட நலவாழ்வு சங்கம் (District Health Society) மூலமாகத் தொகுப்பூதிய அடிப்படையில் பல்வேறு காலிப்பணியிடங்களை நிரப்ப விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக மாவட்ட ஆட்சியர் பி.எஸ்.லீலா அலக்ஸ் தெரிவித்துள்ளார்.

தேசிய நலவாழ்வு குழும இயக்குநரின் அறிவுறுத்தலின்படி, இந்தக் காலிப்பணியிடங்கள் அனைத்தும் ஒப்பந்த அடிப்படையிலும், முற்றிலும் தற்காலிகமாகவும் நிரப்பப்படவுள்ளன.

### பணியிடங்களின் விவரம்

ஆயுஷ் மருத்துவ அலுவலர் (Siddha), மருந்தாளுநர் (Dispenser / Pharmacist), தெரபியூட்டிக் அசிஸ்டெண்ட் (Therapeutic Assistant), முதுநிலை காசநோய் ஆய்வக மேற்பார்வையாளர் (STLS), ஓட்டுநர் (Driver), மருத்துவ அலுவலர் (Medical Officer), நகர்ப்புற சுகாதார செவிலியர் (ANM / Staff Nurse), ரேடியோகிராஃபர், ஆய்வகத் தொழில்நுட்பவியலாளர் (Lab Technician Gr&II), பல்நோக்கு மருத்துவமனை பணியாளர் (Multipurpose Hospital Worker), பல் மருத்துவத் தொழில்நுட்பவியலாளர் (Dental Technician), தூய்மைப் பணியாளர் (Sanitary Worker), சுகாதார ஆய்வாளர் (Health Inspector) மற்றும் கிளினிக்கல் சைக்காலஜிஸ்ட் (Clinical Psychologist) உள்ளிட்ட பல்வேறு பணியிடங்கள் இதன் மூலம் நிரப்பப்படவுள்ளன.

### விண்ணப்பப் படிவம்

இப்பணிகளுக்கான தகுதி மற்றும் விண்ணப்பப் படிவங்களை வேலூர் மாவட்டத்தின் அதிகாரப்பூர்வ இணையதளமான https://vellore.nic.in என்ற முகவரியில் 'Recruitment' (வேலைவாய்ப்பு) பிரிவின் கீழ் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

### விண்ணப்பிக்க வேண்டிய முகவரி

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை உரிய சான்றுகளின் நகல்களுடன், வரும் ஜூன் 26-ஆம் தேதி (26.06.2026) மாலை 5.00 மணிக்குள் கீழ்க்கண்ட முகவரிக்கு நேரடியாகவோ அல்லது அஞ்சல் (தபால்) மூலமாகவோ சமர்ப்பிக்க வேண்டும்:

செயற்செயலாளர், மாவட்ட நலவாழ்வு சங்கம் மற்றும் மாவட்ட சுகாதார அலுவலகம், 'B' பிளாக், 2-வது தளம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், சத்துவாச்சாரி, வேலூர் - 632009.

குறிப்பிடப்பட்ட இறுதித் தேதி மற்றும் நேரத்திற்குப் பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என மாவட்ட ஆட்சியர் பி.எஸ்.லீலா அலக்ஸ் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் திட்டவட்டமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தேவாலய ஊழியர்களுக்கு அரசு நலத்திட்ட உதவிகள்

## இணையதளம் மூலம் விண்ணப்பிக்க ஆட்சியர் ச.கவிதா அழைப்பு!



**திருவள்ளூர், ஜூன் 24-**

கிறித்துவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியர்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு வரும் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளைப் பெறப் பிரத்யேக இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கவிதா தெரிவித்துள்ளார்.

**இதுகுறித்து அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:**

கிறித்துவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியர்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற உறுப்பினர்களுக்குக் கடந்த 2022-ஆம் ஆண்டு முதல் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

### வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள்

இவ்வாரியத்தின் கீழ் பதிவு செய்யும் உறுப்பினர்களுக்குப் பின்வரும் நிதியுதவிகள் மற்றும் சலுகைகள் வழங்கப்படுகின்றன:

விபத்து ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ் உதவித்தொகை.

இயற்கை மரணத்திற்கான உதவித்தொகை மற்றும் ஈமச்சடங்கு செலவிற்கான நிதியுதவி.

கல்வி உதவித்தொகை மற்றும் திருமண உதவித்தொகை.

மகப்பேறு உதவித்தொகை.

மூக்குக்கண்ணாடி செலவுத் தொகை ஈடுசெய்தல் (மறுசீரமைப்பு).

முதியோர் ஓய்வூதியம்.

### விண்ணப்பிக்கத் தகுதியானவர்கள்

கிறித்துவ மதத்தைச் சார்ந்த, 18 வயது முதல் 60 வயதிற்குட்பட்ட தேவாலயப் பணியாளர்கள் இத்திட்டத்திற்கு விண்ணப்பிக்கலாம். குறிப்பாக, நிலையான மாதாந்திர ஊதியம் இல்லாமல் தேவாலயங்களில் பணியாற்றும் உபதேசியர்கள், வேதியர்கள், சீஷப்பிள்ளைகள், பாடகர்கள், கல்லறைப் பணியாளர்கள், கிறித்துவ அனாதை இல்லங்கள் மற்றும் தொழுநோயாளிகள் மறுவாழ்வு இல்லங்களில் பணிபுரியும் ஊழியர்கள் இவ்வாரியத்தில் உறுப்பினராகப் பதிவு செய்து பயன் பெறத் தகுதி உடையவர்கள் ஆவர்.

### இணையதள முகவரி

மேற்படி நலவாரியத்தில் உறுப்பினராகப் பதிவு செய்தல் மற்றும் நலத்திட்ட உதவிகள் பெறுதலை எளிதாக்கும் வகையில் புதிய பிரத்யேக இணையதளம் உருவாக்கப்பட்டுள்ளது. தகுதியுடைய பணியாளர்கள் அனைவரும் இனி www.cwb.tn.gov.in என்ற இணையதள முகவரியின் மூலம் ஆன்லைனில் விண்ணப்பித்துப் பயன் பெறலாம்.

இதுகுறித்த கூடுதல் விவரங்களை அறிய விரும்புவோர், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இயங்கி வரும் 'மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரை' நேரில் தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கவிதா தெரிவித்துள்ளார்.

வேலூரில்

# எம்.எஸ்.எம்.இ. சிறப்புத் தொழில் கடன் முகாம் ஜூன் 30-க்குள் விண்ணப்பிக்கலாம்!

## ஆய்வுக் கட்டணத்தில் முழு விலக்கு; 35% வரை மானியத்துடன் கூடிய நிதியுதவி - மாவட்ட ஆட்சியர் லீலா அலக்ஸ் தகவல்

**வேலூர், ஜூன் 24-**

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் (TIIC) வேலூர் கிளை அலுவலகம் சார்பில், குறு, சிறு மற்றும் நடுத்தர (MSME) தொழில்களுக்கான சிறப்புத் தொழில் கடன் முகாம் வரும் ஜூன் 30-ஆம் தேதி வரை நடைபெறவுள்ளதாக வேலூர் மாவட்ட ஆட்சியர் பி.எஸ்.லீலா அலக்ஸ் தெரிவித்துள்ளார்.

மாநில அரசின் ஆதரவுடன் 1949-ஆம் ஆண்டு முதல் இயங்கி வரும் இக்கழகம், புதிய தொழிற்சாலைகளை நிறுவுவதற்கும், இயங்கி வரும் நிறுவனங்களை விரிவுபடுத்துவதற்கும் பல்வேறு சிறப்புத் திட்டங்களின் கீழ் கடனுதவி வழங்கி வருகிறது.

### முகாம் நடைபெறும் இடம்

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகக் கிளை அலுவலகம், எண். 73/ஏ, காட்பாடி மெயின் ரோடு, (வாசன் E.N.T. கிளினிக் மாடி), முதல் தளம், காந்தி நகர், வேலூர் - 632006.

### திட்டங்களின் சிறப்பம்சங்கள் மற்றும் மானியங்கள்

நீட்ஸ் (NEEDS) திட்டம்:

புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், திட்ட மதிப்பீட்டில் 95 சதவீதம் வரை காலக் கடனாக வழங்கப்படும். இதனுடன் 25% முதலீட்டு மானியமும், 3% வட்டி மானியமும் இணையப் பெறலாம்.

அண்ணல் அம்பேத்கர் திட்டம் (AABCS):

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின (SC/ST) தொழில் முனைவோருக்குத் திட்ட மதிப்பீட்டில் 35% முதலீட்டு மானியத்துடன் கடன் அனுமதி வழங்கப்படும்.

கலைஞர் பசுமை ஆற்றல் திட்டம்: சேவைத் துறையில் காற்றாலை மற்றும் சூரிய ஆற்றல் (Solar Plant) அமைப்பதற்கும், குறு, சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி நிறுவனங்களை அமைப்பதற்கும் இதன் கீழ் கடன் பெறலாம்.

### கூடுதல் மானிய விவரங்கள்:

தகுதி பெறும் உற்பத்தித் தொழில்களுக்குத் தமிழக அரசின் 25% முதலீட்டு மானியமாக அதிகபட்சம் ரூ.1.50 கோடி வரை வழங்கப்படுகிறது. உற்பத்தி சார்ந்த குறு தொழில்களுக்கு 25% மானியத்துடன், கூடுதலாக 10% மானியமும், மகளிர் தொழில் முனைவோருக்கு 5% சிறப்பு மானியமும் வழங்கப்படும். ஏற்கனவே இயங்கும் நிறுவனங்கள் நவீன இயந்திரங்களை நிறுவினால், சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு கூடுதலாக 5% வட்டி மானியம் கிடைக்கும். மேலும், மூலப்பொருட்கள் கொள்முதல் செய்ய நடைமுறை மூலதனக் கடனும் (Working Capital Term Loan) வழங்கப்படும்.

### ஆய்வுக் கட்டணம் முழு விலக்கு:

இந்த முகாம் காலத்தில் சமர்ப்பிக்கப்படும் கடன் விண்ணப்பங்களுக்குப் பரிசீலனை மற்றும் ஆய்வுக் கட்டணத்திலிருந்து (Investigation Fee) முழுமையாக விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழிலதிபர்கள் தங்களது தொழில் திட்டங்களுடன் இந்த முகாமில் பங்கேற்றுப் பயன் பெறலாம்.

கூடுதல் விவரங்களுக்கு 9003987773 / 9445023485 / 7708517295 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம் என ஆட்சியர் பி.எஸ்.லீலா அலக்ஸ் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அப்துல்லாபுரம் அரசு ஐ.டி.ஐ-யில் சேர்க்கை ஜூன் 30-க்குள் விண்ணப்பிக்கலாம்!

## மாதம் ரூ.750 உதவித்தொகை, இலவச உபகரணங்களுடன் வேலைவாய்ப்பு உறுதி - ஆட்சியர் லீலா அலக்ஸ் தகவல்

**வேலூர், ஜூன் 24-**

வேலூர் மாவட்டம் அப்துல்லாபுரத்தில் உள்ள அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் (ITI) நடப்பு கல்வியாண்டிற்கான பல்வேறு தொழிற்பிரிவுகளில் சேர்ந்து பயிற்சி பெறத் தகுதியான இருபாலரிடமிருந்தும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுவதாக மாவட்ட ஆட்சியர் பி.எஸ்.லீலா அலக்ஸ் தெரிவித்துள்ளார்.

மத்திய, மாநில அரசுகளின் 'இண்டஸ்ட்ரி 4.0' (Industry 4.0) தரநிலைக்கு ஏற்ப, அதிநவீன ரோபாட்டிக்ஸ் மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பப் பயிற்சிகள் இங்கு வழங்கப்படவுள்ளன.

### கல்வித்தகுதியும் தொழிற்பிரிவுகளும்:

1. பத்தாம் வகுப்பு (10-ஆம் வகுப்பு) தேர்ச்சி பெற்றவர்களுக்கான பிரிவுகள்:

ஃபிட்டர் (Fitter), எலக்ட்ரீஷியன் (Electrician), டர்னர் (Turner), மெஷினிஸ்ட் (Machinist), மெக்கானிக் மோட்டார் வெஹிக்கிள், டிராப்ட்ஸ்மேன் சிவில் (Draughtsman Civil), மேனுஃபேக்சரிங் பிராசஸ் கன்ட்ரோல் அண்ட் ஆட்டோமேஷன், இண்டஸ்ட்ரியல் ரோபாட்டிக்ஸ் அண்ட் டிஜிட்டல் மேனுஃபேக்சரிங், பேசிக் டிசைனர் அண்ட் விர்ச்சுவல் வெரிஃபையர் (மெக்கானிக்கல்) மற்றும் அட்வான்ஸ்டு சிஎன்சி மெஷினிங் டெக்னீசியன்.

2. எட்டாம் வகுப்பு (8-ஆம் வகுப்பு) தேர்ச்சி பெற்றவர்களுக்கான பிரிவுகள்:

வயர்மேன் (Wireman), வெல்டர் (Welder), ஷீட் மெட்டல் வொர்க்கர், வுட் வொர்க் டெக்னீசியன் மற்றும் லெதர் குட்ஸ் மேக்கர் (பொது, DST மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்புப் பிரிவுகள்).

### வயது வரம்பும் கட்டணமும்:

இப்பயிற்சிகளில் சேர 14 வயது முதல் 40 வயது வரையுள்ள இருபாலரும் விண்ணப்பிக்கலாம். பெண்களுக்கு எவ்வித வயது வரம்பும் இல்லை. விண்ணப்பக் கட்டணம் ரூ.50 மட்டும் ஆகும். இதனை டெபிட் கார்டு, கிரெடிட் கார்டு, நெட் பேங்கிங் அல்லது யுபிஐ (G-Pay, PhonePe) முறைகளில் ஆன்லைனில் செலுத்தலாம்.

### பல்வேறு சலுகைகள் மற்றும் உதவித்தொகை:

இப்பயிற்சிக்குக் கட்டணம் ஏதும் இல்லை. பயிற்சியில் சேரும் அனைவருக்கும் மாதம் ரூ.750 உதவித்தொகை வழங்கப்படும். இதுதவிர, விலையில்லா மிதிவண்டி, பாடப்புத்தகங்கள், சீருடைகள், காலணிகள், வரைபடக் கருவிகள் மற்றும் இலவசப் பேருந்து பயண அட்டை (Bus Pass) ஆகியவை வழங்கப்படும். அரசுப் பள்ளிகளில் தமிழ் வழியில் பயின்ற மாணவர்களுக்கு 'தமிழ்புதல்வன்' மற்றும் 'புதுமைப்பெண்' திட்டங்களின் கீழ் மாதம் ரூ.1,000 தனி உதவித்தொகையும் பெற்றுத்தரப்படும். பயிற்சிக் காலம் முடிந்ததும் 100% வேலைவாய்ப்பு உறுதி செய்யப்படும்.

### விண்ணப்பிக்கும் முறை:

விருப்பமுள்ளவர்கள் www.skilltraining.tn.gov.in என்ற இணையதளம் வழியாக வரும் ஜூன் 30-ஆம் தேதிக்குள் (30.06.2026) விண்ணப்பிக்க வேண்டும். மதிப்பெண் அடிப்படையில் நடைபெறும் இணையதளக் கலந்தாய்விற்கான தரவரிசைப் பட்டியலையும் இதே தளத்தில் அறியலாம்.

இணையவழியில் விண்ணப்பிக்கச் சிரமம் உள்ளவர்கள் வேலூர் அரசினர் தொழிற்பயிற்சி நிலைய உதவி மையங்களை 0416-2290848, 9499055676, 9698723464 ஆகிய எண்களிலோ, மாவட்ட திறன் பயிற்சி அலுவலகத்தை 9499055675 என்ற எண்ணிலோ தொடர்பு கொண்டு உதவி பெறலாம் என ஆட்சியர் பி.எஸ்.லீலா அலக்ஸ் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கண்ணிமைகளை காக்க டிப்ஸ்

கண்ணிமை அடர்த்தியாக இருந்தால் கண்களை மிக அழகாய் காண்பிக்கும். கண்ணிமை வளரவும் உதிராமல் பாதுகாக்கவும் நீங்கள் செய்ய வேண்டிய சில விஷயங்கள் இங்கே குறிப்பிடப்பட்டுள்ளன.

இமைகள் ஏன் சிலருக்கு வளர்வதில்லை. சரியான போஷாக்கு கிடைக்காமல் இருந்தால், அல்லது இயற்கையாகவே இமை வளர்ச்சி குறைதல், ஆகிய்வை காரணமாக இருக்கலாம்.

அடர்த்தியான இமை கிடைக்க நீங்கள் எப்படியெல்லாம் முயற்சி செய்யலாம் என பார்க்கலாமா?

### பயோடின் அல்லது கொலாஜன் சப்ளிமென்ட்ரி

இது ஒரு மேஜிக் சத்தாகும். கொலாஜன் என்ற நார் சத்து அதிகமாகும்போது கெராடின் உற்பத்தி தூண்டப்படும் . இதுதான் கூந்தல் மற்றும் இமை வளர்ச்சிக்கு முக்கிய தேவை. ஆகவே பயோடின் அல்லதுகொலாஜன் சத்து மாத்திரைகளை தினமும் உட்கொண்டால் உங்களுக்கு இமைகள் அடர்த்தியாக கிடைக்கும்.

கண்ணிமை சீரம் :

கண்ணிமைக்கான சீரம் அழகு சாதன பொருட்களில் கிடைக்கும். நல்ல தரமான சீரம் வாங்கி தினமும் இரு வேளை உபயோகித்தால் கண்ணிமை வளர்ச்சி தூண்டப்படும். அடர்த்தியான இமை மற்றும் புருவம் உங்களுக்கு கிடைக்கும்.

### மேக்கப் செய்யும் முன்

கண்ணிற்கு மேக்கப் போடுவதற்கு முன் மாய்ஸ்ரைஸர் போடுவது நல்லது. கண்களுக்கு போடும் மஸ்காரா தரமானதாக இல்லையென்றால் அவை கண்ணிமைகளை பாதிக்கும். ஐ லைனர், மஸ்காரா அடிக்கடி போடுவதையும் தவிர்க்கவும். இமை கண்ணிமைகளை மட்டுமல்ல கண்களையும் பாதிக்கும்.

கண் மேக்கப்பை அகற்றும் போது :

கண்களுக்கு போடும் மேக்கப்பை அழுத்தியோ, பரபரவெனவோ தேய்த்து அகற்றக் கூடாது. ரோஸ் வாட்டர் அல்லது எண்ணெய் கொண்டு மென்மையாக அகற்ற வேண்டும்.



### செயற்கை கண்ணிமை

செயற்கை கண்ணிமைகள் கண்களில் இமைகளை உதிர்த்து மேற்கொண்டு வளர விடாமல் தடுத்து விடும். சிலருக்கு அலர்ஜியும் உண்டாகும். ஆகவே செயற்கை இமைகளை தவிர்த்து விடுங்கள்.

## காளான் பார்லி சூப்

உடலுக்கு வலுசேர்க்க தினமும் ஏதாவது ஒரு சூப்பை குடிப்பது நல்லது. இன்று காளான், பார்லி சேர்த்து சூப் செய்வது எப்படி என்று பார்க்கலாம்.

தேவையான பொருட்கள் :

காளான் - 100 கிராம்

பார்லி - 50 கிராம்

பட்டர் / எண்ணெய் - தேவையான அளவு

பூண்டு - 4 பல்

தக்காளி - ஒன்று

ரசப்பொடி - அரை தேக்கரண்டி

மிளகுத் தூள் - அரை தேக்கரண்டி

உப்பு - சுவைக்கு

சத்து மாவு - 2 தேக்கரண்டி

ஃப்ரஷ் ஒரிகனோ - சிறிது

கொத்தமல்லித்தழை - சிறிது

செய்முறை :

வெங்காயம், பூண்டை பொடியாக நறுக்கிக் கொள்ளவும்.

தக்காளி, காளானை சிறுத் துண்டுகளாக நறுக்கவும்.

பார்லியை வேக வைத்து கொள்ளவும்.

ஒரு பாத்திரத்தில் பட்டர் போட்டு நறுக்கிய வெங்காயம், பூண்டு, ஒரிகனோ சேர்த்து வதக்கவும்.

வெங்காயம் சற்று வதங்கியதும் தக்காளி, காளான் சேர்த்து வதக்கவும்.

வெங்காயம் காளான் கலவையில் தேவையான அளவு தண்ணீர், உப்பு, வேக வைத்த பார்லி சேர்த்து கொதிக்க விடவும்.

கொதித்து வரும் பொழுது கால் டம்ளர் நீரில் சத்து மாவை கரைத்து ஊற்றி ரசப்பொடி தூசி இறக்கவும்.



கடைசியாக கொத்தமல்லித் தழை சேர்த்து சூடாக பரிமாறவும்..

சத்து நிறைந்த காளான் பார்லி சூப் ரெடி.

## கருவளையத்தை தடுக்கும் வழிமுறைகள்



தூக்கமின்மை, சத்துக்குறைவு, தோலில் உண்டாகும் மாற்றம் போன்ற காரணங்களால், நாளடைவில் கண்களுக்குக் கீழே கருவளையம் உண்டாகிறது. இதை ஆரம்பத்திலேயே கவனித்தால் சரி செய்துவிடலாம்.

தூக்கமின்மை, சத்துக்குறைவு, தோலில் உண்டாகும் மாற்றம் போன்ற காரணங்களால், நாளடைவில் கண்களுக்குக் கீழே கருவளையம் உண்டாகிறது. கருவளையம் வந்தபிறகு முகமே பொலிவிழந்து போவதாக உணர்கிறோம். தோலில் ஏற்படும் அதிக நிறமி காரணமாகவே இந்தக் கருவளையம் உண்டாகிறது.

இதனால் கண்ணுக்கு ஆபத்தோ, வேறு எந்தத் தொந்தரவோ வருவதில்லை. இது, வெறும் அழகுக் குறைபாடுதான். இதை ஆரம்பத்திலேயே கவனித்தால் சரி செய்துவிடலாம்.

கண்ணைச் சுற்றியுள்ள தோல் மிகவும் மெல்லியது. வெயிலில் சுற்றுவது, கண்களை அடிக்கடி கசக்குவது, தூங்காமல் இருப்பது, அதிக சிந்தனை, மன உளைச்சல் போன்றவற்றால் கருவளையம் உண்டாகிறது. வைட்டமின் குறைபாடுகள் மற்றும் கடும் காய்ச்சல், நிமோனியா, புற்றுநோய், காசநோய் போன்றவை தாக்கும்போதும் இந்தக் கருவளையம் உருவாகிறது.

கண்களுக்குப் போதிய ஓய்வு தருதல், வைட்டமின் ஏ,ஈ, உணவுகளை சரியாக எடுத்துக்கொள்ளுதல், இரவில் விளக்கொளியை சரியாகப் பயன்படுத்தல், கணினியில் பணிபுரியும்போது கவனமாக இடைவெளி கொடுத்தல், மன உளைச்சல் இல்லாமல் மகிழ்ச்சியாக இருத்தல் போன்றவையே இந்தக் கருவளையம் உருவாகாமல் காக்கும்.

அப்படியும் உங்கள் கண்களைக் கருவளையம் தாக்கினால், கவலைப்பட வேண்டாம். கவலையே அந்தப் பிரச்சனையைப் பெரிதாக்கி விடக்கூடும். உருளைக்கிழங்கு, வெள்ளரி, புதினா, கற்றாழை போன்ற இயற்கையான காய்கறிகள், பழங்களைக்கொண்டே கருவளையத்தை நீக்கிவிடலாம். அப்படியும் நீங்கவில்லை என்றால், இதற்கென இருக்கும் மருத்துவ ஆலோசகர்களை அணுகி, முகப்பூச்சுகளை எடுத்துக் கொள்ளலாம்.



## கண்களுக்கு அழகு தரும் டிப்ஸ்

கண்ணுக்கு மட்டும்தான் உள்ளத்தையும் சேர்த்துப் பிரதிபலிக்கும் குணம் இருக்கு. கண்களை அழகாக காட்ட எளிய முறையில் அலங்காரம் செய்வது எப்படி என்று பார்க்கலாம்.

இன்று, பெரும்பாலான இளம் பெண்கள் மொபைலையும், அலுவலகம் செல்லும் பெண்கள் கம்ப்யூட்டரையும், இல்லத்தரசிகள் டி.வி-யையும் பார்த்துட்டே இருக்காங்க. இதனால் கண்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் அதிகம்.

கண்களுக்கான ரிலாக்ஸிங் ட்ரீட்மென்ட் ப்ளஸ் கண் கருவளையத்துக்கான சிகிச்சை என டு இன் ஒன் பார்லர் சிகிச்சையான ‘ஐ ட்ரீட்மென்ட்’ பற்றி இங்கே பார்ப்போம்.

இதில், முதல்ல கண்களை க்ளென்ஸிங் மூலமா சுத்தப்படுத்தி, ஒரு பேக் போட்டுவிடுவார்கள். அதை அலசிய பிறகு, மசாஜ் க்ரீம் கொண்டு கண்களுக்கு நல்லா மசாஜ் கொடுப்பார்கள் இது முடிஞ்சதும், ஐ ஜெல் மூலம் மசாஜ் கொடுப்பார்கள். மீண்டும் ஒரு பேக் போட்டு விடுவார்கள். இந்த ட்ரீட்மென்ட் காரணமா கண்கள் புத்துணர்ச்சி பெறுவதோட, கருவளையமும் கொஞ்சம் கொஞ்சமா மறைஞ்சுடும். இப்போது தினமும் போடக்கூடிய கண் அலங்காரத்திற்கான டிப்ஸை பார்க்கலாம்.

ஐபுரோ பாலட்: கண், புருவத்துக்கு என ஐபுரோ பாலட்கள் காஸ்மெடிக் கடைகளில் கிடைக்கின்றன. இதில் மூன்று நிறங்கள் இருக்கும். இதில் உள்ள பிரஷ் மூலம், இந்த வண்ணங்களை தேவைக்கு ஏற்ப கலந்து, புருவ முடிகளின் மீது மட்டும் தடவலாம். இது புருவத்தை பளிச்சென்று காட்டும்.

ஐலாஷ்: மார்க்கெட்டில் பலவிதமான செயற்கை இமை முடிகள் கிடைக்கின்றன. இதனுடன் கொடுக் கப்படும் பசையின் உதவியால் இதை கண் இமைகளில் ஒட்டிக்கொண்டால், இமை முடிகள் நீண்டு, அடர்ந்து இருப்பது போன்ற அழகிய தோற்றத்தைக் கொடுக்கும். கவனம்ஞ் தரமான பிராண்ட் பார்த்து வாங்கவும்.

ஐ ஷேடோ: தரமான ஐ ஷேடோ உபயோகிப்பதால், கண்களில் அலர்ஜி ஏற்படுவதைத் தடுக்கலாம். ஐ ஷேடோக்களின் துகள்கள், கண்களின் உள்ளே போய், அலர்ஜி மற்றும் கட்டியை ஏற்படுத்திவிடும் வாய்ப்பு இருக்கிறது. எனவே, கண்களுக்கு ஐ ஷேடோ தடவும் முன்பாக, ஐ ப்ரைமர் தடவிவிட்டு அப்ளை செய்தால், கண் இமைகளை அலர்ஜியில் இருந்து காக்கலாம்.

## சருமத்தை மெருகேற்றும் அரோமா ஆயில்



சருமத்தை மெருகேற்ற பார்லரைவிட கூடுதல் பலன் கொடுக்கக்கூடியது, அரோமா ஆயில். அரோமா ஆயில் உதவியுடன் வீட்டிலேயே தேக வனப்பை மீட்கும் எளிய வழிமுறைகளை பார்க்கலாம்.

அரோமா ஆயில் என்பது நறுமண எண்ணெய்களைக் குறிக்கும். இது வாசம்மிக்க மலர்கள் மற்றும் தாவரங்களில் இருந்து எடுக்கப்படுகிறது. இது, மெடிக்கல் ஷாப், நாட்டு மருந்துக் கடை மற்றும் டிபார்ட்மென்ட் ஸ்டோர்களில் கிடைக்கும். ‘‘சருமத்தை மெருகேற்ற பார்லரைவிட கூடுதல் பலன் கொடுக்கக்கூடியது, அரோமா ஆயில்!’’. அரோமா ஆயில் உதவியுடன் வீட்டிலேயே தேக வனப்பை மீட்கும் எளிய வழிகள் இதோ!



### க்ளென்சிங் கவர்ச்சி!

தினமும் முகத்தைக் கழுவும்போது, சோப்பு அல்லது ஃபேஸ் வாஷ் சிறிதளவு எடுத்து நுரை வரும் அளவுக்கு கைகளில் தேய்த்துக்கொண்டதும் அந்த நுரையில் லெமன் கிராஸ் ஆயில் இரண்டு சொட்டு விட்டு முகத்தைக் கழுவவும்.

பலன்: சரும துவாரங்களில் அடைந்துள்ள அழுக்குகள் வெளியேறுவதுடன், அரோமா ஆயிலின் வாசனையானது, சோர்வை நீக்கி புத்துணர்ச்சி அளிக்கும்.

### நீராவி பியூட்டி!

எண்ணெய் வடியும் சருமம் உள்ளவர்களுக்கான குறிப்பு இது. ஒரு பாத்திரத்தில் நீர் எடுத்து அதில் பெப்பர் மின்ட் ஆயில், லாவெண்டர் ஆயில், மின்ட் ஆயில் தலா இரண்டு சொட்டுகள் விட்டு பாத்திரத்தை மூடி அடுப்பில் ஏற்றி கொதிக்கவிடவும். இதில் முகத்துக்கு நீராவி எடுக்கவும்.

பலன்: முகத்தில் சுரக்கும் அதிக எண்ணெய்ப் பசையை மட்டுப்படுத்துவதுடன், சருமத்தில் படிந்துள்ள அழுக்கை வெளியேற்றி பொலிவாக்கும்.

வறண்ட சருமத்தினருக்கும் இருக்கிறது அழகுக் குறிப்பு. ஒரு பாத்திரத்தில் நீரெடுத்து அதில் ஜெரேனியம் ஆயில், லாவெண்டர் ஆயில், யலாங் யலாங் ஆயில் தலா இரண்டு சொட்டுகள் விட்டு, மூடிக் கொதிக்க விடவும். கொதித்த பின் நீராவி பிடிக்கவும்.

பலன்: முகத்தின் இறந்த செல்களை நீக்குவதுடன், சருமம் வறண்டு போகாமல் ஈரப்பதத்துடன் இருக்க உதவும்.

### சரும அடுக்குகளில் ஊடுருவும் ஆயில்!



பொதுவாக பொலிவிழந்த சருமத்தை உடனடியாகப் பளிச்சென காட்டவும், அந்தப் பொலிவு அதிகபட்சம் மூன்று நாட்கள் நிலைக்கவும் ஃபேஸ்பேக் உதவி செய்யும். ஆனால் கரும்புள்ளி, பரு, மங்கு போன்ற சருமத்தின் இரண்டாவது அடுக்கின் பிரச்னைகளையும், சுருக்கம், கோடுகள், வயதான தோற்றம், சருமத் தளர்வு போன்ற சருமத்தின் மூன்றாவது அடுக்கின் பிரச்னைகளையும் சரிசெய்வது, அரோமா ஆயிலின் தனிச்சிறப்பு. இதற்கு, லாவெண்டர் ஆயில், லைம் ஆயில், பச்சோலி ஆயில், சீடர் வுட் ஆயில், யலாங் யலாங் ஆயில் இவற்றில் ஏதாவது இரண்டு ஆயில்களில் தலா இரண்டு சொட்டுகளை, ஃபேஸ்பேக் போடும் முன் அதில் கலந்து முகத்துக்கு அப்ளை செய்யவும்.



### பலன்

அரோமா ஆயிலின் மூலக்கூறுகள் சருமத்தின் துவாரங்களைவிட மிகச்சிறியது. அதனால் ஃபேஸ்பேக் போட்ட 2 முதல் 20 விநாடிகளுக்குள் இந்த ஆயில் சருமத்தின் மூன்றாவது அடுக்குவரை ஊடுருவி சருமப் பிரச்னைகளைத் தீர்க்கும்.

## முக சுருக்கங்களை போக்க சில பொருள்கள்

### முதுமையை தடுக்கும் ஆலிவ் ஆயில்

ஆலிவ் ஆயிலை தினமும் இரவில் படுக்கும் முன், முகத்தில் தடவி நன்கு மசாஜ் செய்து, மறுநாள் காலையில் முகத்தைக் கழுவினால், ஏராளமான நன்மைகளைப் பெறலாம்.

ஆலிவ் எண்ணெயில் வைட்டமின்கள், கனிமச்சத்துக்கள் மற்றும் நேச்சுரல் ஃபேட்டி ஆசிட்டுகள் அடங்கியுள்ளன. இந்த எண்ணெய் அனைத்து வகையான சருமத்தினருக்கும் ஏற்ற ஒன்று. இதில் ஆன்டி ஆக்ஸிடன்ட் பொருள் ஏராளமாக இருப்பதால் தான், இது சருமபராமரிப்பிற்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. இத்தகைய ஆலிவ் ஆயிலை தினமும் இரவில் படுக்கும் முன், முகத்தில் தடவி நன்கு மசாஜ் செய்து, மறுநாள் காலையில் முகத்தைக் கழுவினால், ஏராளமான நன்மைகளைப் பெறலாம்.



* ஆலிவ் ஆயிலில் சருமத்தின் ஆரோக்கியத்திற்கு தேவையான வைட்டமின் ஈ மற்றும் ஏ ஏராளமாக நிறைந்துள்ளது. எனவே தினமும் இரவில் ஆலிவ் ஆயில் கொண்டு முகத்தை மசாஜ் செய்து வந்தால், பாதிக்கப்பட்ட சரும செல்கள் புதுப்பிக்கப்பட்டு, முகம் புத்துணர்ச்சியுடன் அழகாக காணப்படும்.

* முகத்தில் ஏதேனும் தழும்புகள் இருந்தால் தினமும் இரவில் ஆலிவ் ஆயிலைக் கொண்டு மசாஜ் செய்து வாருங்கள். இதனால் அவ்விடத்தில் புதிய செல்கள் புதுப்பிக்கப்பட்டு, சருமத்தின் நெகிழ்வுத்தன்மை அதிகரிக்கும். மேலும் இச்செயல் மூலம் நாளடைவில் தழும்புகளும் மறையும்.

* உங்களுக்கு மிகுந்த வறட்சியான சருமம் என்றால், ஆலிவ் ஆயிலைக் கொண்டு தினமும் இரவில் சருமத்தை மசாஜ் செய்து வாருங்கள். இப்படி தினமும் செய்வதன் மூலம், சரும வறட்சி ஏற்படுவதைத் தடுக்கலாம்.

முகத்தில் ஏற்படுகிற சுருக்கங்கள் தான் இன்றைக்கு அழகு தொடர்பாக மிக முக்கியமான பிரச்சனையாக பார்க்கப்படுகிறது, பருக்களோ அல்லது வேறு ஏதேனும் மார்க் ஏற்பட்டால் சந்தையில் கிடைக்கிற சில க்ரீம்களை பயன்படுத்தி தற்காலிகமாக மறைத்துக் கொள்ள முடியும். ஆனால் சுருக்கங்களை எல்லாம் அப்படி மறைத்துக் கொள்ள முடியாது. என்ன தான் மேக்கப்-போட்டாலும் அந்த சுருக்கம் அப்படியே தனியாக தெரியும். நெற்றி, கண்கள், வாய்ப்பகுதிகளில் தான் முதலில் சுருக்கங்கள் தோன்றும். இப்போது வாய்ப்பகுதியில் ஏற்படுகிற சுருக்கங்களை தவிர்க்க நீங்கள் என்னென்ன செய்ய வேண்டும் என்பதை இப்போது பார்க்கலாம்.

நெற்றி மற்றும் கண்களுக்கு அருகே சுருக்கங்கள் ஏற்படுவது இயற்கையானது ஆனால் இந்த வாய்ப்பகுதியில் ஏற்படுகிற சுருக்கங்களுக்கு நம்முடைய பங்களிப்பு தான் முக்கிய காரணியாக இருக்கிறது. அதோடு அவற்றை நாம் எளிமையாக தவிர்க்கவும் முடியும். பேஸ்புக்கில் எங்களது செய்திகளை உடனுக்குடன் படிக்க க்ளிக் செய்யவும் காரணங்கள் :

சுருக்கங்கள் ஏற்படுவதற்கு பொதுவான காரணங்கள் என்னென்ன என்பதை முதலில் பார்க்கலாம்.

வயதானாலே சிலருக்கு முகத்தில் சுருக்கங்கள் ஏற்படும். சருமத்தில் இருக்கிற கொலாஜன், எலாஸ்டின் ஆகியவை குறைந்து விடுவதால் தசைகள் வலுவிழந்து காணப்படும். முகத்தில் குறிப்பாக வாய்ப்பகுதியில் சுருக்கங்கள் ஏற்பட்டால் அதனை சரி செய்ய நீங்கள் வீட்டிலேயே செய்ய வேண்டிய நடை முறை என்னென்ன என்று பார்க்கலாம்.

கற்றாழை ஜெல் :

இயற்கையாக கிடைக்கக்கூடிய இந்த ஜெல் மிகச்சிறந்த தீர்வாக அமையும். இதனை ஆரம்ப கட்டத்திலேயே பயன்படுத்தி வந்தால் சரும சுருக்கங்கள் ஏற்படாமல் தவிர்த்திடலாம். சிறிதளவு கற்றாழை ஜெல்லை எடுத்து அப்படியே பாதிக்கப்பட்ட இடங்களில் தடவிக் கொள்ளுங்கள். ட்ரை ஸ்கின்னாக இருப்பவர்களுக்கு உடனேயே ஜெல் உறிந்து கொண்டு விடும். இல்லையென்றால் பத்து நிமிடம் கழித்து கழுவிக் கொள்ளலாம்.

விட்டமின் இ ஆயில் :

விட்டமின் இ ஆயில் நம் சருமத்தை ஈரப்பதத்துடன் நீண்ட நேரம் வைத்திருக்க உதவிடும். ஒரு ஸ்பூன் விட்டமின் இ எண்ணெயை எடுத்துக் கொள்ளுங்கள். விட்டமின் ஈ ஆயில் கிடைக்க வில்லை என்றால், விட்டமின் இ கேப்சூல்கள் இரண்டு அல்லது மூன்று எடுத்து அந்த எண்ணெயை பயன்படுத்தலாம். அந்த எண்ணெயை வாய் அருகில் சுருக்கங்கள் இருக்கிற இடத்தில் தடவி லேசாக மசாஜ் செய்திட வேண்டும். ஒரு முறை மசாஜ் செய்த பின்னர் பத்து நிமிடம் கழித்து மீண்டும் மசாஜ் செய்திட வேண்டும் முதலில் மசாஜ் செய்த போது எண்ணெய் சருமத்தால் உறிந்து கொள்ளப்பட்டிருக்கும். இரண்டு முறை மசாஜ் செய்த பிறகு பத்து நிமிடம் கழித்து கழுவி விடலாம். தென் கொரியாவில் இதுக்கெல்லாம் தடை!

மாடலிங்கில் இப்படியும் சித்திரவதைக்கு ஆளாகும் அழகிகள்... டிஜிட்டல் துன்புறுத்தல்! தாம்பத்திய வாழ்க்கை இனிக்க, உலர் திராட்சை எப்படி சாப்பிடலாம்? நன்மைகளும், பயன்களும்!

முட்டை :

முட்டையின் வெள்ளைக்கரு இதற்கு பெரிதும் பயன்படுகிறது. முட்டையின் வெள்ளைக்கருவுடன் இரண்டு ஸ்பூன் தேங்காய் எண்ணெய் கலந்து சரியாக கலந்து கொள்ளுங்கள். பின்னர் அந்த கலவை அப்படியே பேஸ்ட் பதத்திற்கு வந்திடும். அதை எடுத்து சுருக்கங்கள் இருக்கிற பகுதிகளில் தேய்க்க வேண்டும்.பின்னர் 20 நிமிடங்கள் கழித்து கழுவி விடலாம். முட்டையின் வெள்ளைக்கரு சருமத்தை டயிட்டாக பிடித்துக் கொள்ள உதவிடுகிறது. அதே போல தேங்காய் எண்ணெய் சருமத்தின் வறட்சியை போக்க உதவிடும்.

தக்காளிச் சாறு : ஒரு தக்காளியை மைய அரைத்து பேஸ்ட்டாக்கிக் கொள்ளுங்கள். பின்னர் அதனைக் கொண்டு வாயின் ஓரங்களில் மசாஜ் செய்ய வேண்டும். மசாஜ் செய்து விட்டு மீதமிருப்பதை பேக்காக போட்டுக் கொள்ளலாம். இது ரத்த ஓட்டத்தை அதிகரிக்கும். சருமத்தில் புதிய செல்கள் உருவாவதை அதிகரிக்கும். அரை மணி நேரம் கழித்து தண்ணீரால் கழுவிடலாம். இது சருமத்தின் சுருக்கங்களை போக்கிடும். தக்காளியில் விட்டமின் ஏ, விட்டமின் பி6 , விட்டமின் சி, லைகோபின்,பீட்டா கரோட்டீன் ஆகியவை இருக்கின்றன.

அன்னாசிப்பழச் சாறு : சருமத்தில் இருக்கிற செல்களை மேம்படுத்த இது பெரிதும் உதவுகிறது. தக்காளி ஜூஸ் மட்டுமல்லாது அன்னாசிப் பழச்சாறினையும் நாம் இதற்கு பயன்படுத்தலாம். இதில் ப்ரோமெலைன் என்சைம் இருக்கிறது. இவை சரும சுருக்கங்களை போக்க பெரும் பங்காற்றுகிறது. அன்னாசிப்பழச்சாறினை எடுத்து சுருக்கம் உள்ள இடங்களில் தடவி பத்து நிமிடம் வரை காத்திருந்து கழுவிடலாம்.

சூரிய ஒளி : சருமத்திற்கு சூரிய ஒளி தேவை தான், ஆனால அவை அளவுக்கு மீறி செல்லும் போது அது நமக்கு தீங்கினை தான் ஏற்படுத்தும். சூரிய ஒளி சருமத்தின் எலாஸ்டிஸ்டியை போக்கிடும். இதனால் வெகு சீக்கரத்திலேயே சருமம் தொங்கி அசிங்கமாகத் தெரியும். இந்த நேரத்தில் நீங்கள் சருமத்தை சரியாக பராமரிக்கவில்லை, போதுமானாளவு தண்ணீர் குடிக்க வில்லை எனும் பட்சத்தில் அது விரைவில் அதன் வேலையை காட்டத் துவங்கிடும்.






### கமிஷன்.. பினாமி டெண்டர்.. ஒருமையில் மோதல்!

# வேலூர் மாமன்றத்தில் திமுக கோஷ்டி மோதல் : ‘பாகப்பிரிவினை’ சண்டை!

## 2027 உள்ளாட்சித் தேர்தலில் எதிரொலிக்குமா?




**வேலூர், ஜூன் 24-**

தமிழகத்தில் நகர்ப்புற உள்ளாட்சிப் பிரதிநிதிகளின் பதவிக்காலம் முடிவடைவதையொட்டி, வரும் 2027ம் ஆண்டு மார்ச் மாதத்தில் உள்ளாட்சித் தேர்தலை நடத்த மாநில தேர்தல் ஆணையம் திட்டமிட்டு, வார்டு மறுவரையறை பணிகளைத் தீவிரப்படுத்தியுள்ளது. இத்தகைய பரபரப்பான அரசியல் சூழ்நிலையில், வேலூர் மாநகராட்சியில் ஆளுங்கட்சியான தி.மு.கவுக்குள் வெடித்துள்ள கடுமையான உட்கட்சி மோதல்களும், கமிஷன் புகார்களும் தமிழக அரசியல் களத்தில் பெரும் பூகம்பத்தைக் கிளப்பியுள்ளன.

### மாமன்றக் கூட்டத்தில் வெடித்த திமுக மோதல்: ஒருமையில் வாக்குவாதம்!

வேலூர் மாநகராட்சியில் நிர்வாகக் குளறுபடிகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ள நிலையில், நேற்று நடைபெற்ற மாமன்றக் கூட்டம் ஆளுங்கட்சியினரின் அடுக்கடுக்கான புகார்களால் போர்க்களமாக மாறியது. தி.மு.கவைச் சேர்ந்த பெண் மேயர் சுஜாதா மீது, அதே கட்சியைச் சேர்ந்த துணை மேயர் சுனில்குமார், மண்டலக் குழுத் தலைவர்கள் மற்றும் கவுன்சிலர்கள் கடுமையான அதிருப்தியில் இருந்து வந்த நிலையில், அது அன்மையில் நடைபெற்ற மாமன்றத்தில் வெட்டவெளிச்சமானது.

### கமிஷன் கேட்கும் மேயர்

*மாமன்றக் கூட்டத்தில் பேசிய தி.மு.க துணை மேயர் சுனில்குமார்,*

"எனது வார்டில் கடந்த டிசம்பர் மாதமே டெண்டர் விடப்பட்டும் எந்தப் பணிகளும் நடக்கவில்லை. மாநகராட்சி நிர்வாகச் சீர்கேட்டிற்கு மேயர் தான் காரணம். பணிகளுக்கான ஆணை வழங்க மேயர் தரப்பில் கமிஷன் கேட்கப்படுகிறது" என்று சொந்தக் கட்சி மேயர் மீது பகிரங்கமாகக் கமிஷன் குற்றச்சாட்டைச் சுமத்தினார்.

### ரூ.40 கோடிக்கு ‘பினாமி’ பெயரில் டெண்டர்

*இதற்குப் பதிலடி கொடுத்த மேயர் சுஜாதா,*

காட்பாடி தொகுதியில் துணை மேயர் சுனில்குமார் தனது ‘பினாமி’ பெயரில் ரூ.40 கோடிக்கு டெண்டர் எடுத்துவிட்டு சாலை அமைக்காமல் இருப்பதாகக் குற்றம் சாட்டினார். இருவருக்குமிடையே 'நீ, வா, போ' என ஒருமையில் கடுமையான வாக்குவாதம் முற்றியது. இதில் உச்சக்கட்ட வேடிக்கை என்னவென்றால், சொந்தக் கட்சியைச் சேர்ந்த தி.மு.க கவுன்சிலர்கள் ஒருவர்கூட மேயர் சுஜாதாவுக்கு ஆதரவாகப் பேசாமல் தங்களது அதிருப்தியை வெளிப்படுத்தியதுதான்!

### முன்னாள் எம்.எல்.ஏவின் நிழல் ஆதிக்கம்?

மாநகராட்சிக்குள் நிலவும் இந்த மோதல் காட்பாடி மற்றும் வேலூர் தி.மு.க கோஷ்டிப் பூசலின் உச்சக்கட்டமாகும். கடந்த சட்டமன்றத் தேர்தலில் முன்னாள் தி.மு.க எம்.எல்.ஏ கார்த்திகேயன் தோல்வியடைந்த பிறகும், அவர் வெளியில் இருந்து கொண்டு மாநகராட்சி நிர்வாகத்தை ஆட்டிப்படைப்பதாகக் கூறப்படும் புகார்கள், அடிமட்டத் தொண்டர்களிடையே கடும் சோர்வையும் கோபத்தையும் ஏற்படுத்தியுள்ளது. தலைவர்களுக்கிடையேயான இந்த ஈகோ யுத்தம், தேர்தல் நேரத்தில் கட்சி வேலைகளைக் கடுமையாகப் பாதிக்கும் என உடன்பிறப்புகளே புலம்பத் தொடங்கியுள்ளனர்.

### த.வெ.க கண்டு பயப்படுகிறதா ஆளுங்கட்சி?

மறுபுறம், வேலூர் தொகுதி த.வெ.க (தமிழக வெற்றிக் கழகம்) எம்.எல்.ஏ வினோத் கண்ணன் மாமன்றக் கூட்டத்தில் கலந்துகொண்டு தங்களைக் கேள்வி கேட்பதைத் தவிர்க்கவே, சட்டமன்ற கூட்டத்தொடர் நடக்கும் நாளில் மேயர் அவசரமாக மாமன்றக் கூட்டத்தைக் கூட்டினார் என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

புதிய வரவான த.வெ.கவின் சட்டமன்ற வரவைக் கண்டு ஆளுங்கட்சி அஞ்சுகிறதா என்ற பிம்பத்தை இது மக்கள் மத்தியில் உருவாக்கியுள்ளது.

### அதிமுகவின் அதிரடி முழக்கம்!

இந்தச் சண்டைகளுக்கு நடுவே, அ.தி.மு.க கவுன்சிலர்கள் எடப்பாடி பழனிசாமியின் புகைப்படத்தைக் கையில் ஏந்தி, "சுவற்றில் மாட்டுங்கள்" என முழக்கமிட்டுத் தனியே கவனத்தை ஈர்த்தனர்.

தி.மு.கவின் இந்த நிர்வாகச் சொதப்பல்களும் கமிஷன் விவகாரங்களும் அ.தி.மு.க மற்றும் த.வெ.க ஆகிய எதிர்க்கட்சிகளுக்கு அல்வா சாப்பிடுவது போன்ற வலுவான அரசியல் ஆயுதமாக மாறியுள்ளது.

### 2027 உள்ளாட்சித் தேர்தலில் திமுகவுக்குப் பலத்த பின்னடைவு?

திரைமறைவில் இருந்த தி.மு.கவின் உட்கட்சி மோதல்கள் மற்றும் கமிஷன் விவகாரங்கள் இப்போது தெருவுக்கு வந்துவிட்டதால், ‘இந்தச் சாயம் வெளுத்த அரசியலை வைத்துக்கொண்டு தி.மு.க எவ்வாறு தேர்தலைச் சந்திக்கப் போகிறது?’ என்ற விவாதம் பலமாக எழுந்துள்ளது.

வார்டு மறுவரையறை பணிகள் 11 மாவட்ட ஊராட்சிகள், 40 ஊராட்சி ஒன்றியங்கள் என விறுவிறுப்பாக நடந்து வரும் வேளையில், ஒரே நேரத்தில் தேர்தல் வரும்போது ஆளுங்கட்சியின் சாதனைப் பட்டியலை விட, இந்த ‘கமிஷன்’ மற்றும் ‘பினாமி டெண்டர்’ புகார்களே மக்கள் மத்தியில் ஆட்சி எதிர்ப்பு (Anti-Incumbency) அலையை உருவாக்கும் என்பதில் ஐயமில்லை.

இந்த உட்கட்சிப் பூசலைத் தலைமை இப்போதே இரும்புக்கரம் கொண்டு ஒடுக்காவிட்டால், திமுகவின் கோட்டையா உள்ள வேலூர் மாநகராட்சி, தி.மு.கவின் கை நழுவிப் போகக் கூடும்! என்கின்றனர் அரசியல் ஆர்வலர்கள்.







# ஆவடி மாநகராட்சியில் தணிக்கை நிலுவைத் தொகை?

## நடவடிக்கை கோரி பா.ஜ.க மனு!

**ஆவடி, ஜூன் 24–**

ஆவடி மாநகராட்சியில் பல்வேறு திட்டங்களின் கீழ் உள்ள தணிக்கை நிலுவைத் தொகைகள் மற்றும் நிதி மேலாண்மைத் திட்டங்கள் குறித்து முறையான விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்கக் கோரி பாரதிய ஜனதா கட்சியின் திருவள்ளூர் மேற்கு மாவட்டப் பொறுப்பாளர் அஸ்வின், மாநகராட்சி ஆணையரிடம் புகார் மனு அளித்துள்ளார்.



இதுகுறித்து அவர் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்ததாவது:

தணிக்கை மற்றும் நிதி நிலுவை விவரங்கள்: ஆவடி மாநகராட்சியில் கடந்த 2024 முதல் 2025 வரையிலான காலகட்டத்தில், தணிக்கைத் துறையின் (Audit Department) ஆய்வின்படி சுமார் ரூ.19 கோடி வரை தணிக்கை நிலுவையில் உள்ளதாகக் கூறப்படுகிறது. இது தொடர்பான முக்கிய ஆவணங்கள் முறையாகப் பராமரிக்கப்படாமல் மறைக்கப்பட்டுள்ளதாகச் சந்தேகங்கள் எழுகின்றன. மேலும், மாநகராட்சியின் சேம நலநிதித் திட்டத்தின் கீழ் சுமார் ரூ.4 கோடி வரை இன்னும் வசூல் செய்யப்படாமல் நிலுவையில் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இதற்குப் பொறுப்பான அதிகாரிகள் மீது துறை ரீதியான விசாரணை நடத்தப்பட வேண்டும்.

கொரோனா காலகட்டப் புகார்கள்: கடந்த கொரோனா பேரிடர் காலகட்டத்தில் அவசரத் தேவைகளுக்காகச் செய்யப்பட்ட செலவினங்களில், போலியான ரசீதுகள் பயன்படுத்தப்பட்டு முறைகேடுகள் நடந்ததாகப் புகார்கள் எழுந்தன. இது தொடர்பாக நடுவர் நீதிமன்ற முறையீட்டு அமைப்பில் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டதாகக் கூறப்படும் நிலையிலும், சம்பந்தப்பட்ட நபர்கள் மீது இதுவரை உரிய மேல்நடவடிக்கை ஏன் எடுக்கப்படவில்லை என்ற கேள்வி எழுந்துள்ளது.

கண்டன ஆர்ப்பாட்ட எச்சரிக்கை: மாநகராட்சியின் நிதிப் பயன்பாடுகள் மற்றும் தணிக்கை அறிக்கைகளில் வெளிப்படைத்தன்மை இருக்க வேண்டும். தற்போது அளிக்கப்பட்டுள்ள இந்த விரிவான புகார் மனுவின் மீது மாநகராட்சி நிர்வாகம் உரிய விசாரணை மேற்கொண்டு, தணிக்கை நிலுவைகளைக் கண்டறிந்து தவறு செய்தவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். தவறும்பட்சத்தில், பா.ஜ.க சார்பில் ஆவடி மாநகராட்சி அலுவலகம் முன்பாகப் பொதுமக்களைத் திரட்டி மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்று அஸ்வின் தெரிவித்தார்.

மனு அளிப்பின்போது கட்சியின் மாவட்ட, மண்டலப் பொறுப்பாளர்கள் மற்றும் நிர்வாகிகள் உடனிருந்தனர்.



அணைக்கட்டு வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்று வரும் 1435 ஆம் பசலி ஆண்டிற்கான வருவாய் தீர்வாயம் (ஜமாபந்தி) 2026 நான்காம் நாளில் மாவட்ட ஆட்சித்தலைவர்/வருவாய் தீர்வாய அலுவலர் பி.எஸ்.லீலா அலக்ஸ் நேற்று (23.06.2026) மனு அளித்த மாற்றுத்திறனாளியின் மனுவினை உடனடியாக பரிசீலனை செய்து ஊன்றுக்கோல் மற்றும் கண்கண்ணாடியினை வழங்கினார். இந்நிகழ்வின்போது தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) சி.மாறன், மாவட்ட ஆதிதிராவிடர் நலத்துறை அலுவலர் சரவணன், மாவட்ட வழங்கல் அலுவலர் சரவணன், துணை ஆட்சியர் (பயிற்சி) கணேஷ், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை அலுவலர் பாபு, வட்டாட்சியர் சுகுமாரன் உட்பட பலர் உடனிருந்தனர்.

### கத்தார் தீ விபத்தில் உயிரிழந்த

# 3 தமிழர்கள் குடும்பத்தினருக்கு ரூ.10 லட்சம் நிவாரணம் அறிவிப்பு

**சென்னை, ஜூன் 24–**

கத்தாரில் ராஸ் லஃபான் தொழிற்பேட்டையில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி தமிழ்நாட்டைச் சேர்ந்த 3 இளைஞர்கள் பரிதாபமாக உயிரிழந்தனர். இந்தத் துயரச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்குத் தலா ரூ10 லட்சம் நிவாரணம் வழங்க முதல்வர் விஜய் உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்து அரசு சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், "கத்தார் நாட்டில் ராஸ் லஃபான் தொழிற்பேட்டைப் பகுதியில் உள்ள தொழிற்சாலையில் கடந்த 21.06.2026 அன்று இரவு ஏற்பட்ட தீ விபத்தில், திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், சிதம்பராபுரம் யாக்கோபுரத்தைச் சேர்ந்த பபித் , பணகுடி பகுதி சிவகாமிபுரத்தைச் சேர்ந்த சஜித்குமார் மற்றும் அழகியநம்பியாபுரத்தைச் சேர்ந்த சுவின் ஆகியோர் உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வருத்தமும், வேதனையும் அடைந்தேன்.

உயிரிழந்தவர்களின் உடல்களை விரைவில் தமிழ்நாட்டிற்குக் கொண்டுவருவதற்கு, இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகத்துடனும் கத்தாரில் உள்ள இந்தியத் தூதரகம் மூலமும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் க.தென்னரசு இப்பணியில் துரித நடவடிக்கை மேற்கொள்ளவும் அறிவுறுத்தியுள்ளேன்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா பத்து லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

மேலும், இந்த விபத்து தொடர்பான விவரங்களை அறிந்து கொள்வதற்கு அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறையின் கீழ்க்காணும் தொலைபேசி எண்களைத் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு அரசின் உதவி எண்கள், இந்தியாவிற்குள் +91 1800 309 3793, வெளிநாட்டு தொடர்புக்கு +91 80 6900 9900, +91 80 6900 9901" இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

### பூந்தமல்லி அருகே

# விதிகளையெல்லாம் காற்றில் பறக்கவிட்ட ரியல் எஸ்டேட் நிறுவனம்

## ஆயில்சேரி கிராம மக்கள் வேதனை!

**பூந்தமல்லி, ஜூன் 24–**

திருவள்ளூர் மாவட்டம் பூந்தமல்லி வட்டத்திற்கு உட்பட்ட ஆயில்சேரி கிராமத்தில், விதிமுறைகளை மீறிக் கால்வாயை ஆக்கிரமித்துப் பாலம் மற்றும் சாலை அமைத்துள்ள தனியார் ரியல் எஸ்டேட் நிறுவனம் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் மாவட்ட ஆட்சியருக்குக் கோரிக்கை விடுத்துள்ளனர்.




இதுகுறித்து சமூக ஆர்வலர்கள் தரப்பில் கூறப்படுவதாவது:

கால்வாய் மூடல் - பொதுமக்கள் ஏமாற்றம்: ஆயில்சேரி கிராமத்தில் தனியார் நிறுவனம் மூலமாக 80 பிளாட்டுகளுக்கு மேல் கொண்ட பிரம்மாண்ட நில விற்பனை நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த விற்பனை நிலையத்திற்குச் செல்ல வேண்டும் என்றால் அங்குள்ள பொதுப்பணித்துறைக்குச் சொந்தமான கால்வாயைக் கடந்துதான் செல்ல வேண்டும். விதிகளின்படி, பொதுப்பணித்துறையிடம் முறையான அனுமதி பெற்றுத்தான் அங்குப் பாலம் அமைக்க வேண்டும்.

ஆனால், இந்த நிறுவனம் கால்வாயின் குறுக்கே இரண்டு சிமெண்ட் பைப்லைன்களை மட்டும் வைத்து, அதன் மேல் தார்ச்சாலை அமைத்துப் பொதுமக்களை ஏமாற்றி நில விற்பனை செய்து வந்துள்ளது. இதுகுறித்து சமூக ஆர்வலர்கள் புகார் அளித்ததைத் தொடர்ந்து, ஒருபுறம் மட்டும் அரைகுறையாகப் பாலம் அமைக்கப்பட்டது. மறுபுறம் இன்னும் பைப்லைன்கள் மூலமாகவே சாலை ஆக்கிரமிப்பு நீடிக்கிறது. இதனால் வரும் மழைக்காலங்களில் கால்வாயில் நீர்வரத்துத் தடைப்பட்டு, தண்ணீர் முழுவதும் ஊருக்குள் புகுந்து பொதுமக்களுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் அபாயம் உருவாகியுள்ளது.

விதிமீறல்களுக்குத் துணைபோகும் அதிகாரிகள்? சட்டப்படி ஏரி, ஆறு மற்றும் கால்வாய்களின் அருகில் நிலங்களை லே-அவுட்களாகப் பிரிக்கும்போது சுமார் 15 மீட்டர் இடைவெளி விட வேண்டும் என்பது விதியாகும். இத்தகவல் தகவல் அறியும் உரிமைச் சட்டம் மூலமும் உறுதி செய்யப்பட்டுள்ளது. இதுகுறித்து கடந்த 5 மாதங்களுக்கு முன்பே ஊராட்சி ஒன்றிய அலுவலகம், சிஎம்டிஏ அலுவலகம் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆதாரங்களுடன் புகார் அளிக்கப்பட்டுள்ளது. ஆனால், இதுவரை எந்தவொரு அதிகாரியும் சம்பவ இடத்திற்கு நேரில் வந்து ஆய்வு செய்யவில்லை எனக் குற்றம் சாட்டப்படுகிறது.

பத்திரப்பதிவுத் துறையிலும் முறைகேடு? இப்பகுதியில் உள்ள விதிமீறல்களை முன்வைத்து பத்திரப்பதிவுத் துறையில் தடை மனு தாக்கல் செய்யப்பட்டது. ஆனால், அந்த மனுவைப் பெற்றுக் கொண்ட அதிகாரிகள், முறைகேடாகப் பணத்தைப் பெற்றுக் கொண்டு ஒரே வாரத்தில் தடை மனுவை நீக்கிப் பத்திரப்பதிவுக்கு வழிவகை செய்துள்ளனர் என்று சமூக ஆர்வலர்கள் அடுக்கடுக்கான புகார்களை முன்வைக்கின்றனர்.

அரசுத் துறைகளின் இந்த அலட்சியத்தால் அரசுக்குப் பல கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும், அதிகாரிகளின் பாக்கெட்டுகள் நிரம்பியுள்ளதாகவும் பொதுமக்கள் கொந்தளிக்கின்றனர். சமூக ஆர்வலர்கள் அளிக்கும் மனுக்கள் குப்பைத் தொட்டிக்குச் செல்கின்றனவா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

### முதல்வர் சாட்டை சுழற்றுவாரா?

விதிமுறைகளை மீறிச் செயல்படும் இந்தத் தனியார் ரியல் எஸ்டேட் நிறுவனத்தின் மீதும், அதற்குத் துணைபோகும் பொதுப்பணித்துறை, வட்டாட்சியர் அலுவலகம், ஊராட்சி ஒன்றியம் மற்றும் சிஎம்டிஏ அதிகாரிகள் மீதும் தமிழக முதல்வர் ஜோசப் விஜய் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், நீர்நிலை ஆக்கிரமிப்பை அகற்ற மாவட்ட ஆட்சியர் உடனடியாக உத்தரவிட வேண்டும் என்றும் சமூக ஆர்வலர்களும் அப்பகுதி பொதுமக்களும் ஆவலோடு எதிர்பார்த்துக் காத்துள்ளனர்.



# திருவேற்காட்டில் 3.5கிலோ கஞ்சா பறிமுதல்

## வாலிபர்கள் இருவர் கைது!

**திருவேற்காடு, ஜூன் 24–**

திருவள்ளூர் மாவட்டம் திருவேற்காடு பகுதியில் சட்டவிரோதமாகக் கஞ்சா விற்பனையில் ஈடுபட்டிருந்த வாலிபர்கள் இருவரைக் காவல் துறையினர் அதிரடியாகக் கைது செய்து, அவர்களிடமிருந்து சுமார் 3.5 கிலோ கஞ்சாவைப் பறிமுதல் செய்துள்ளனர்.

இதுகுறித்து காவல் துறை தரப்பில் கூறப்படுவதாவது:

ரகசியத் தகவல் - போலீஸ் கண்காணிப்பு: திருவேற்காடு டி-5 (T-5) காவல் நிலைய போலீசாருக்கு, அப்பகுதியில் உள்ள குடியிருப்பு வளாகங்கள் மற்றும் முக்கியச் சாலைகளில் கஞ்சா விற்பனை நடைபெற்று வருவதாகப் பலமுறை ரகசியத் தகவல் கிடைத்தது. இதனடிப்படையில், காவல் உதவி ஆய்வாளர் தலைமையிலான தனிப்படை போலீசார் காடுவெட்டி, சமிரா அப்பார்ட்மெண்ட் கார்டன் டவுன் பகுதியில் தீவிரக் கண்காணிப்பு மற்றும் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

### விசாரணையில் சிக்கிய வாலிபர்கள்

அப்போது, அந்த அப்பார்ட்மெண்ட் பகுதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் சுற்றித் திரிந்த இரு வாலிபர்களைப் போலீசார் மடக்கிப் பிடித்து விசாரணை நடத்தினர். அவர்கள் முன்னுக்குப் பின் முரணாகப் பதிலளித்ததைத் தொடர்ந்து, இருவரிடமும் போலீசார் அதிரடிச் சோதனை மேற்கொண்டனர். அப்போது, அவர்கள் மறைத்து வைத்திருந்த பைகளில் சுமார் 3.5 கிலோ எடையுள்ள கஞ்சா இருப்பது கண்டறியப்பட்டு, அது உடனடியாகப் பறிமுதல் செய்யப்பட்டது.

### நீதிமன்றக் காவலில் சிறை

மேலும் நடத்திய விசாரணையில், கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட அந்த நபர்கள் சுந்தர் (24), மற்றும் சஞ்சய் என்கிற சஞ்சீவி (23) என்பது தெரியவந்தது. இதையடுத்து, திருவேற்காடு போலீசார் அவர்கள் இருவர் மீதும் போதைப்பொருள் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்து கைது செய்தனர். பின்னர், அவர்கள் இருவரும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்டுப் புழல் சிறையில் அடைக்கப்பட்டனர். இப்பகுதியில் கஞ்சா சப்ளை செய்யும் முக்கியப் புள்ளிகள் குறித்து போலீசார் தொடர்ந்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# மத்திய இணை அமைச்சர் ஜார்ஜ் குரியன் ராஜினாமா

**புதுடெல்லி, ஜூன் 24–**

மத்திய சிறுபான்மையினர் நலத் துறை இணை அமைச்சர் ஜார்ஜ் குரியன் தனது அமைச்சர் பதவியை நேற்று ராஜினாமா செய்தார். அவரது ராஜினாமாவை குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு உடனடியாக ஏற்றுக்கொண்டார்.

பிரதமர் மோடியின் ஆலோசனையின்பேரில், ஜார்ஜ் குரியன் அளித்த ராஜினாமாவை குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு உடனடியாக அமலுக்கு வரும் வகையில் ஏற்றுக்கொண்டதாக அறிவித்துள்ளார்.

ஜார்ஜ் குரியனின் மாநிலங்களவை உறுப்பினர் பதவிக் காலம் ஜூன் 21-ஆம் தேதியுடன் நிறைவடைந்தது. சமீபத்தில் நடைபெற்ற மாநிலங்களவைத் தேர்தலில் குரியனை மீண்டும் வேட்பாளராக நிறுத்த வேண்டாம் என்று பாஜக முடிவு செய்திருந்தது. இதனைத் தொடர்ந்து அவர் தனது மத்திய இணை அமைச்சர் பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

ஜார்ஜ் குரியன் ஆகஸ்ட் 2024-ல் மாநிலங்களவை உறுப்பினரானார். அவர் ஜூன் 9, 2024 அன்று மத்திய இணை அமைச்சராகப் பதவியேற்றார். பின்னர் ஜூன் 11, 2024 அன்று சிறுபான்மையினர் நலத் துறை, மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை ஆகியவற்றின் மத்திய இணை அமைச்சராகப் பொறுப்பேற்றார். மத்திய அமைச்சரவையில் கிறிஸ்தவ சமூகத்தைச் சேர்ந்த ஒரே அமைச்சராக ஜார்ஜ் குரியன் இருந்தார்.

ஜார்ஜ் குரியன் இதற்கு முன்பு தேசிய சிறுபான்மையினர் நல ஆணையத்தின் துணைத் தலைவராகவும், அப்போதைய ரயில்வே துறை மத்திய இணை அமைச்சரான ஓ.ராஜகோபாலின் சிறப்புப் பணி அதிகாரியாகவும் பணியாற்றியுள்ளார். கேரள மாநிலம் கோட்டயம் மாவட்டத்தில் பிறந்த ஜார்ஜ் குரியன், உச்ச நீதிமன்றத்தில் வழக்கறிஞராகப் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மம்தா பானர்ஜி அதிரடி நீக்கம்:



**கொல்கத்தா, ஜூன் 24–**

மே.வங்க முன்னாள் முதல்வரும், திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் நிறுவனருமான மம்தா பானர்ஜியை கட்சித் தலைவர் பதவியிலிருந்து நீக்கியுள்ளதாக ரிதப்ரதா பானர்ஜி தலைமையிலான அதிருப்தி குழுவினர் அறிவித்தனர்.

கொல்கத்தாவில் உள்ள ஒரு தனியார் விடுதியில், ரிதப்ரதா பானர்ஜி தலைமையில் திரிணமூல் காங்கிரஸின் அதிருப்தி எம்.எல்.ஏக்கள் மற்றும் நகராட்சி மாமன்ற உறுப்பினர்களின் (கவுன்சிலர்கள்) அவசர ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. மாலை 4 மணியளவில் நடைபெற்ற இந்தச் சிறப்பு கூட்டத்தில் கொல்கத்தா, பஹரம்பூர், உத்தர்பாரா, ஸ்ரீராம்பூர், டம் டம் உள்ளிட்ட பல்வேறு நகராட்சிகளைச் சேர்ந்த சுமார் 40-க்கும் மேற்பட்ட கவுன்சிலர்கள் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தின் முடிவில், அகில இந்திய திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் 10 பேர் கொண்ட புதிய தேசிய செயற்குழு ஒருமனதாக உருவாக்கப்பட்டுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இக்கூட்டத்தில் ரிதப்ரதா பானர்ஜி, சந்திபன் சஹா மற்றும் கொல்கத்தாவின் முன்னாள் மேயர் ஃபிர்ஹாத் ஹக்கீம் உள்ளிட்ட முக்கியத் தலைவர்கள் பங்கேற்றனர்.

இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி, கட்சியின் தலைவர் பதவியிலிருந்து மம்தா நீக்கப்பட்டுள்ளார். புதிய தலைவராக அருப் ராய் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இக்குழுவில் உள்ள மற்ற தலைவர்களுக்கும் முக்கியப் பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

# டி.என்.பி.எஸ்.சி. குரூப்–1 தேர்வு அறிவிப்பு வெளியீடு

**சென்னை, ஜூன் 24–**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (TNPSC) துணை ஆட்சியர், மாவட்டப் பதிவாளர் உள்ளிட்ட மிக உயரிய குரூப்-1 பதவிகளுக்கான புதிய தேர்வு அறிவிப்பை நேற்று அதிகாரப்பூர்வமாக வெளியிட்டுள்ளது. அரசு உயர் பதவிகளில் சேரத் தயாராகி வரும் தமிழக இளைஞர்களுக்கு இந்த அறிவிப்பு ஒரு நல்வாய்ப்பாக அமைந்துள்ளது.

**தேர்வு குறித்த முக்கிய விவரங்கள் வருமாறு:**

விண்ணப்பிக்கத் தொடங்கும் நாள்: ஜூன் 30, 2026

விண்ணப்பிக்கக் கடைசி நாள்: ஜூலை 29, 2026

விண்ணப்பத் திருத்தக் காலம்: ஆகஸ்ட் 2, 2026

முதல்நிலைத் தேர்வு நடைபெறும் நாள்: செப்டம்பர் 6, 2026

காலிப்பணியிடங்கள் மற்றும் பதவிகளின் விவரம்:

இம்முறை மொத்தம் 26 காலிப்பணியிடங்களுக்கு இந்தத் தேர்வு நடத்தப்படவுள்ளது. அதன் விவரம்:

துணை ஆட்சியர் 12 இடங்கள்

மாவட்டப் பதிவாளர் - 8 இடங்கள்

கூட்டுறவுச் சங்கங்களின் துணைப் பதிவாளர் - 3 இடங்கள்

உதவி ஆணையர் (வணிக வரித் துறை) - 2 இடங்கள்

உதவி ஆணையர் (தொழிலாளர் துறை) - 1 இடம்

### கல்வித் தகுதியும் வயது வரம்பும்

அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு பல்கலைக்கழகத்தில் ஏதேனும் ஓர் இளங்கலைப் பட்டம் (Any Degree) பெற்றவர்கள் இத்தேர்வுக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் ஆவர். விண்ணப்பிக்கும் அனைவருக்கும் குறைந்தபட்ச வயது 21 பூர்த்தியாகி இருக்க வேண்டும்.

அதிகபட்ச வயது வரம்பைப் பொறுத்தவரை, பொதுப்பிரிவினர் (OC) 34 வயதிற்குள்ளும்; இதர பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினத் தேர்வர்கள் (BC, BCM, MBC/DNC, SC, SCA, ST) 39 வயதிற்குள்ளும் இருக்க வேண்டும். மாற்றுத்திறனாளித் தேர்வர்களுக்கு அவர்கள் சார்ந்த சமுதாயப் பிரிவின் அதிகபட்ச வயதிலிருந்து கூடுதலாக 10 ஆண்டுகள் வயதுச் சலுகை வழங்கப்படும்.

விண்ணப்பிக்கும் முறை: தகுதியும் ஆர்வமும் உள்ள விண்ணப்பதாரர்கள் டிஎன்பிஎஸ்சியின் அதிகாரப்பூர்வ இணையதளமான https://www.tnpsc.gov.in என்ற முகவரியின் மூலம் ஆன்லைனில் மட்டுமே விண்ணப்பிக்க முடியும். மேலும் முழு விவரங்களை அறிவிப்பாணை இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் எனத் தேர்வாணையம் தெரிவித்துள்ளது.

# மின்சாரத் துறையின் வெள்ளை அறிக்கை நாளை வெளியீடு!

## அமைச்சர் நிர்மல்குமார் தகவல்

**சென்னை, ஜூன், 24–**

17வது தமிழ்நாடு சட்டமன்றத்தின் முதல் கூட்டத்தொடர் ஜூன்.18ம் தேதி தொடங்கி, நேற்றுடன் நிறைவுப்பெற்றது. முதல் கூட்டத்தொடரின் கடைசிநாளான நேற்று முதலமைச்சர் விஜய், ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீதான கேள்விகளுக்கு பதிலுரை ஆற்றினார். அவரது பதிலுரையைத் தொடர்ந்து சட்டப்பேரவை நிகழ்வுகளை முடிவடைந்தன. இதனைத்தொடர்ந்து சட்டமன்றப் பேரவை வளாகத்தில் செய்தியாளர்களை சந்தித்தார் எரிசக்தி மற்றும் சட்டத்துறை அமைச்சர் சிடிஆர். நிர்மல்குமார். அப்போது செய்தியாளர்களின் பல்வேறு கேள்விகளுக்கு பதிலளித்த அவர், நாளை (ஜுன்.25) காலை எரிசக்தித் துறைக்கு புதிதாக நியமனம் செய்யவுள்ளவர்களுக்கு முதலமைச்சர் பணிநியமன ஆணை வழங்குவார். அதனைத்தொடர்ந்து மின்சாரத் துறையின் வெள்ளை அறிக்கை வெளியிடப்படும் என தெரிவித்தார்.

கடந்த வாரம் நிதியமைச்சர் மரிய வில்சன் தமிழ்நாட்டின் நிதி நிலைமை தொடர்பான வெள்ளை அறிக்கையை வெளியிட்டிருந்தார்.

## அடுத்த 25 ஆண்டுகளுக்கு நான் தான் வேலூருக்கே ராஜா!

# தவெக எம்.எல்.ஏ வினோத் கண்ணன் மிரட்டல் பேச்சு

## கொதிக்கும் விசுவாசத் தொண்டர்கள்! - ஆரம்பமாகும் உட்கட்சி பூசல்?

**வேலூர், ஜூன் 24-**

தமிழக அரசியலில் ஒரு தூய்மையான மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற ஒற்றை நோக்கத்தோடு, மக்கள் மத்தியில் பெரும் எழுச்சியை உருவாக்கியுள்ளார் தமிழக வெற்றிக் கழகத்தின் (தவெக) தலைவர் தளபதி விஜய். ஆனால், தலைவரின் உன்னத எண்ணங்களுக்கும், கழகத்தின் அடிப்படை கொள்கைகளுக்கும் முற்றிலும் மாறாக, வேலூர் சட்டமன்றத் தொகுதி தவெக எம்.எல்.ஏ வினோத் கண்ணன் தார்மீக நெறிகளைத் தூக்கி எறிந்து விட்டு, ரவுடி பாணியில் சொந்தக் கட்சியினரையே மிரட்டி வருவதாக, தவெக அடிமட்டத் தொண்டர்கள் மற்றும் உடன்பிறப்புகள் மத்தியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.




**"நான்தான் ராஜா..!" - வேலூரில் அரங்கேறும் தவெக எம்.எல்.ஏ-வின் மிரட்டல் அரசியல்:**

வேலூர் தொகுதியில் தவெக பெற்ற மாபெரும் வெற்றி என்பது, வேட்பாளரின் தனிப்பட்ட தகுதியால் கிடைத்தது அல்ல; ஒட்டுமொத்தப் பொதுமக்களும், ரசிகர்களும் தலைவர் விஜய் மீது வைத்த விசுவாசத்தால் மட்டுமே சாத்தியமானது.

ஆனால், மக்கள் கொடுத்த அங்கீகாரத்தை வைத்துக் கொண்டு வினோத் கண்ணன் தற்பொழுது ஆடியன்ஸ் மற்றும் தொண்டர்களிடம் காட்டி வரும் மிரட்டல் தோரணை உள்கட்சிக்குள்ளேயே பெரும் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

### விரைவில் அமைச்சர்!

“அடுத்த 25 ஆண்டுகளுக்கு நான் தான் வேலூருக்கே ராஜா! விரைவில் நான் அமைச்சராகவும் போகிறேன், கட்சியின் மாவட்டச் செயலாளர் பொறுப்பும் எனக்குத்தான் வரப்போகிறது. அதனால், வேலூர் மாவட்டத்தில் உள்ள அனைவரும் எனக்குக் கட்டுப்பட்டுத்தான் இருக்க வேண்டும்; இல்லையென்றால் அடையாளம் தெரியாமல் ஒழித்துக் கட்டிவிடுவேன்” என்று வினோத் கண்ணன் கொக்கரித்துப் பேசியதாகத் தகவல்கள் கசிந்துள்ளன.

கட்சியில் இணைந்து வெறும் ஒரே ஒரு ஆண்டு மட்டுமே ஆன ஒரு நபர், அதற்குள்ளாக வேலூர் மாவட்டத்தில் உள்ள ஒட்டுமொத்தக் கட்சியினரையும், நிர்வாகிகளையும் தன் அதிகாரத்தின் கீழ் அடக்கி ஆள நினைக்கும் இந்த சர்வாதிகார மனப்போக்கு தவெகவின் மூத்த நிர்வாகிகளை மிரளச் செய்துள்ளது. ஒரு சட்டமன்ற உறுப்பினரே, எவ்வித ஜனநாயகப் பண்புகளுமற்று சகக் கட்சியினரை நோக்கி இத்தகைய ரவுடி பாணியில் மிரட்டல் தொனியில் பேசியிருப்பது வேலூர் தவெக வட்டாரத்தில் பெரும் அதிர்ச்சியையும், உள்கட்சிப் பூசலையும் ஏற்படுத்தியுள்ளது.

### பல ஆண்டுகால உழைப்பு பலியா? தொண்டர்கள் குமுறல்!

இந்த விவகாரத்தில் வேலூர் மாவட்டத் தவெக விசுவாசிகள் எழுப்பும் மிக நியாயமான கேள்வி என்னவென்றால், வினோத் கண்ணன் கட்சியில் இணைந்து வெறும் ஒரு ஆண்டு காலம் தான் ஆகிறது. ஆனால், தவெக தலைவர் தளபதி விஜய் அவர்களின் மீதுள்ள ஈர்ப்பால், கடந்த 20 முதல் 25 ஆண்டுகளுக்கும் மேலாகத் தங்களது குடும்பம், தொழில் என அனைத்தையும் பாராமல், ரசிகர் மன்றக் காலத்திலிருந்தே உழைத்து, இன்று கட்சி வரை பாடுபட்ட எத்தனையோ விசுவாசமான தொண்டர்கள் வேலூரில் இருக்கிறார்கள்.

"கட்சியில் இணைந்து ஒரு வருடமே ஆன ஒரு நபர், எம்.எல்.ஏ என்ற மிரட்டல் பதவியைப் பயன்படுத்தி, பல ஆண்டுகளாக ரத்தமும் வியர்வையும் சிந்தி உழைத்த மூத்த தொண்டர்களைப் புறந்தள்ளிவிட்டு, 'அடையாளம் தெரியாமல் ஒழித்துவிடுவேன்' என்று ரவுடி பாணியில் மிரட்டுவது எந்த விதத்தில் நியாயம்?" என்று உண்மையான உடன்பிறப்புகள் ஆவேசத்தோடு கேள்வி எழுப்புகின்றனர்.

வேலூரில் ஸ்ரீ நாராயணி அம்மா அவர்களின் பின்புலத்தைத் பலமாக கொண்டு, தனக்குச் சாதகமாகக் காட்டி, உள்கட்சி ஒற்றுமையைக் குலைக்கும் இத்தகைய செயல்பாடுகள், தூய்மையான அரசியல் செய்ய நினைக்கும் தலைவர் முதல்வர் விஜயின் எண்ணத்திற்குப் பின்னால் இருந்து குத்தப்படும் முதுகெலும்பு முறிவாகவே பார்க்கப்படுகிறது.

### ‘களை’ எடுக்குமா தலைமை?

தொண்டர்களை மதிக்காமல், தானே வேலூரின் ஏகபோக ராஜா என்று வலம் வரும் எம்எல்ஏ வினோத் கண்ணன் மீது வேலூர் பொதுமக்கள் மற்றும் தவெக தொண்டர்கள் மத்தியில் நாளுக்கு நாள் கடுமையான எதிர்ப்பு அலை உருவாகி வருகிறது. இந்த நிலை நீடித்தால், உள்கட்சிப் பூசலால் வீழ்ந்த பிற கட்சிகளின் கதி தான் தவெக-விற்கும் ஏற்படும் என அரசியல் விமர்சகர்கள் எச்சரிக்கின்றனர்.

எனவே, கழகத் தலைவர் முதல்வர் விஜய் அவர்களும், கட்சியின் பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்த் அவர்களும், வினோத் கண்ணனின் இந்த அதிகார துஷ்பிரயோகங்கள் மற்றும் ரவுடித்தனமான மிரட்டல் லீலைகளை ஆரம்ப நிலையிலேயே விசாரணை செய்து இரும்புக்கரம் கொண்டு அடக்க வேண்டும் என்றும், விசுவாசத் தொண்டர்களின் உரிமைகளைப் பாதுகாத்து, தவறிழைக்கும் இத்தகைய நபர்களை உடனடியாகக் களை எடுக்க வேண்டும் என்றும் வேலூர் மாவட்டத் தவெக விசுவாசிகள் ஆவேசத்துடன் கோரிக்கை விடுத்துள்ளனர்.



## த.வெ.க தவிர்க்க வேண்டிய வரலாற்றுப் பிழை!
## சட்டமன்ற உறுப்பினர்களின் எல்லையை மீறும் ஆதிக்கம்

தமிழக அரசியல் வரலாற்றில், பண நாயகத்தைத் தவிடுபொடியாக்கி விட்டு, மக்கள் எவ்வித எதிர்பார்ப்பும் இல்லாமல் மிக நேர்மையான முறையில் வாக்களித்துத் தவெக-விற்கு ஒரு பிரம்மாண்ட வெற்றியைத் தேடித்தந்தனர். இந்த வெற்றி என்பது, ஒவ்வொரு தொகுதியிலும் நின்ற வேட்பாளர்களைப் பார்த்துப் பெற்ற வெற்றியல்ல; மாறாக, ஒட்டுமொத்தப் பொதுமக்களும் ஒவ்வொரு வேட்பாளரையும் கழகத் தலைவர் தளபதி விஜய் அவர்களாகவே கருதி, மாற்றத்தை நோக்கிப் போட்ட ஒற்றை ஓட்டு தான் இந்த மாபெரும் வெற்றிக்குக் காரணம்.

ஆனால், தற்போதைய சூழலில் சில சட்டமன்ற உறுப்பினர்கள், தங்களுக்குக் கிடைத்த மக்கள் அங்கீகாரத்தைத் தவறாகப் புரிந்து கொண்டு, பாரம்பரிய திராவிடக் கட்சிகளின் பாணியில் அதிகாரத் துஷ்பிரயோகத்தில் ஈடுபடத் தொடங்கியுள்ளது, அடிமட்டத் தொண்டர்கள் மற்றும் பொதுமக்களிடையே பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

### அதிமுக-வின் வீழ்ச்சி உணர்த்தும் பாடம்: தவெக தவிர்க்க வேண்டிய தவறுகள்!

ஒரு காலத்தில் அசைக்க முடியாத சக்தியாக விளங்கிய அதிமுக, இன்றைய அவல நிலைக்குச் சென்றதற்கு இரண்டு மிக முக்கியக் காரணங்களை நாம் உற்று நோக்க வேண்டும்:

ஆரம்பக் காலகட்டத்திலிருந்து கட்சிக்காகத் தங்களது வியர்வையையும் ரத்தத்தையும் சிந்தி உழைத்த உண்மையான தொண்டர்களைத் தூக்கி எறிந்தது முதல் தவறு. கட்சியின் மாவட்டப் பொறுப்புகளைத் தகுதியற்ற, தவறான நபர்களிடம் ஒப்படைத்ததும், பதவிகளைச் சாதியின் அடிப்படையில் வாரி வழங்கியதும், கட்சிக்காக உண்மையாக உழைத்தவர்களை உதாசீனம் செய்ததும் அடுத்தடுத்த வீழ்ச்சிகளுக்குக் காரணமாயின.

மேலும், தங்களுக்குச் சாதகமாக இருக்கும் ஆதரவாளர்கள் மற்றும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களிடமே (MLAs) கட்சியின் முக்கியப் பொறுப்புகளையும் அதிகாரப் பதவிகளையும் வாரி வழங்கியது அக்கட்சியின் அழிவிற்கே வழிவகுத்தது.

இந்த வரலாற்றுப் பிழையைத் தமிழக வெற்றிக் கழகம் (தவெக) முற்றிலும் தவிர்க்க வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கட்சிப் பதவிகளை வழங்குவது, ஒரு கட்சிக்குள்ளேயே அதிகாரக் குவியலை உருவாக்கி, அக்கட்சியின் அழிவிற்கு வழிவகுக்கும்.

### கட்டுப்பாடான இயக்கத்திற்கு இரு கண்கள்: கட்சிப் பதவியும் - மக்கள் பணியும்!

நம் நாட்டின் அரசியல் அமைப்புச் சட்டமே "ஒருவரின் அதிகாரத்தை மற்றொருவர் கண்காணிப்பது" (Checks and Balances) என்ற உன்னதக் கோட்பாட்டின் கீழ் தான் இயங்குகிறது. அதே போன்று, கழகமும் கட்டுக்கோப்புடன் செயல்பட வேண்டுமெனில், கட்சிப் பொறுப்பாளர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் நாணயத்தின் இரு பக்கங்களைப் போலத் தனித்தனியாகச் செயலாற்ற வேண்டும்.

சட்டமன்ற உறுப்பினர்களின் பணி: மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், தங்களது முழு நேரத்தையும் தத்தமது தொகுதி மக்களின் நலப் பணிகளுக்காக மட்டுமே செலவிட வேண்டும். அரசு அலுவலகங்களில் தங்களது அதிகாரத்தை நிலைநிறுத்துவதையோ, பினாமி பெயர்களில் டெண்டர் எடுப்பதையோ விடுத்து, மக்கள் குறைகளைத் தீர்ப்பதில் கவனம் செலுத்த வேண்டும்.

கட்சிப் பொறுப்பாளர்களின் பணி: ஆரம்பக் காலகட்டத்திலிருந்து, எவ்வித பிரதிபலனும் பாராமல், ரசிகர் மன்றக் காலத்திலிருந்தே தவெக-விற்காகக் களத்தில் நின்று உழைத்த விசுவாசமிக்கத் தொண்டர்களைப் போற்றும் வகையில் அவர்களுக்கு மட்டுமே மாவட்டச் செயலாளர் உள்ளிட்ட முதன்மையான கட்சிப் பதவிகளை வழங்க வேண்டும்.

"சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கட்சிப் பதவிகளை வழங்கக் கூடாது! அவர்களிடம் கட்சிப் பொறுப்புகள் சென்றடைந்தால், அவர்கள் மாவட்டச் செயலாளர் பதவிகளையும் கைப்பற்ற முயல்வார்கள். இது நீண்ட காலம் உழைத்தவர்களைப் புறந்தள்ளி, அதிகாரத் துஷ்பிரயோகத்திற்கே வழிவகுக்கும்."

இப்படி இரு பிரிவினரும் தங்களது எல்லைகளை உணர்ந்து செயல்படும் போது தான், ஒருவர் தவறு செய்வதை மற்றொருவர் கண்காணித்துத் தட்டிக் கேட்க முடியும். இதுவே கழகத்தைக் கட்டுப்பாட்டுடனும், தூய்மையாகவும் வைத்திருக்கும்.

### தலைமையும். பொதுச்செயலாளரும் எடுக்க வேண்டிய உடனடி நடவடிக்கை

"நோயை ஆரம்பத்திலேயே கிள்ளி எறிய வேண்டும்" என்பார்கள். எனவே, கழகத் தலைவர் தளபதி விஜய் அவர்களும், கட்சியைத் திறம்படக் கையாண்டு வரும் பொதுச்செயலாளர் புசி ஆனந்த் அவர்களும், இதுபோன்ற சுயநலப் போக்குடைய சட்டமன்ற உறுப்பினர்களின் செயல்களை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து உடனடியாகக் களை எடுக்க வேண்டும்.

எம்.எல்.ஏ-க்கள் தங்களது மக்கள் பணியை மட்டும் கவனிக்கும் படியும், உண்மையான விசுவாசத் தொண்டர்களுக்குக் கட்சிப் பதவிகள் கிடைப்பதையும் உறுதி செய்ய வேண்டும். அப்போது தான் தமிழக வெற்றிக் கழகம் மக்கள் மனதில் நீங்கா இடம்பிடித்து, எள்ளளவும் தொய்வின்றித் தொடர்ந்து சாதனைப் பயணத்தைத் தொடரும்.

# வேலூர் மாநகராட்சியில் மெகா ‘வரி’ மோசடி!

## கோடிகளில் புரளும் உதவி வருவாய் அலவலர்கள்-விசாரணை குழு அமைக்க கோரிக்கை!

**வேலூர், ஜூன் 24-**

வேலூர் மாநகராட்சிக்கு உட்பட்ட 4 மண்டலப் பகுதிகளிலும் சொத்து வரி விதிப்பில் பல கோடி ரூபாய் முறைகேடு நடந்து வருவது தகவல் அறியும் உரிமைச் சட்டம் (RTI) மூலம் பெறப்பட்ட தரவுகள் வாயிலாக அதிரடியாக அம்பலமாகியுள்ளது. மாநகராட்சி வருவாய்த் துறை மற்றும் கட்டிடத் துறை அதிகாரிகள் சிலர் தங்களது அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தி, பெரும் புள்ளிகளுக்கும் வணிக நிறுவனங்களுக்கும் சாதகமாக வரியைக் கணிசமாகக் குறைத்து விதிப்பதாகப் பொதுமக்கள் மத்தியில் பலத்த குற்றச்சாட்டு எழுந்துள்ளது.




அதிகாரிகளின் இந்தத் தான்தோன்றித்தனமான போக்கால், வேலூர் மாநகராட்சிக்குக் கோடிக்கணக்கான ரூபாய் வருவாய் இழப்பு ஏற்பட்டு, ஒட்டுமொத்த மாநகர வளர்ச்சியும் முடங்கும் அவலம் நீடிக்கிறது.

### பெரும் வரி ஏய்ப்பு: பின்னணியில் அதிகாரிகள்!

மாநகராட்சி விதிகளின்படி வணிக வளாகங்கள், மற்றும் தொழிற்சாலைகளுக்கு அவற்றின் உண்மையான பரப்பளவு (Square Feet) மற்றும் வணிகப் பயன்பாட்டின் அடிப்படையில் துல்லியமாக வரி விதிக்கப்பட வேண்டும். ஆனால், வேலூர் மாநகராட்சியின் 4 மண்டலங்களிலும் உள்ள பல பெரும் புள்ளிகளின் வணிகக் கட்டிடங்களுக்கு, உண்மையான பரப்பளவை மறைத்து, மிகக் குறைந்த சதுர அடிகளுக்கு மட்டுமே வரி விதிக்கப்பட்டுள்ளது RTI தரவுகள் மூலம் உறுதியாகியுள்ளது.

இதன் பின்னணியில் உள்ள சில வருவாய் அலுவலர்களும், கட்டிட அனுமதி வழங்கும் கட்டிடத் துறை அதிகாரிகளும் கூட்டுச் சதியில் ஈடுபட்டதாகச் சமூக ஆர்வலர்கள் குற்றம் சாட்டுகின்றனர். சட்ட விரோத ஆதாயங்களைப் பெற்றுக் கொண்டு, அரசுக்குச் சேர வேண்டிய வரிப் பணத்தைக் கொள்ளையடிக்கத் துணை போயுள்ளனர் என்பது பொதுமக்களின் அடுக்கடுக்கான குற்றச்சாட்டாகும்.

### சாமானிய மக்களின் மீது வரி சுமை அதிகரிப்பு

இவ்வாறு பெரும் நிறுவனங்களுக்குக் சட்டவிரோதமாகக் குறைவான வரி விதிப்பதால் ஏற்படும் நிதிப் பற்றாக்குறையைச் சமாளிக்க, சாமானிய மக்களின் அடிப்படைத் தேவையான வீட்டு வரியைக் கடுமையாக உயர்த்தும் அவல நிலைக்கு மாநகராட்சி தள்ளப்பட்டுள்ளது. அதிகாரிகளின் சுயநலத்தால் ஏற்படும் நிதி இழப்பை, பாமர மக்கள் மீது வரியாகச் சுமத்துவது எந்த விதத்தில் நியாயம் எனப் பொதுமக்கள் கொந்தளிக்கின்றனர்.

### தவறிழைக்கும் அதிகாரிகள் மீது பாயும் சட்டப் பிரிவுகள்!

அரசு ஊழியர்கள் தங்களது அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்து, அரசுக்கு வருவாய் இழப்பை ஏற்படுத்தினால் அவர்கள் மீது ஊழல் தடுப்புச் சட்டம், 1988 (Prevention of Corruption Act), வருவாய்த் துறை மற்றும் கட்டிடத் துறை அதிகாரிகள் கூட்டுச் சதியில் ஈடுபட்டு, சட்ட விரோதமாக ஆதாயம் அடைந்ததற்காக இந்தச் சட்டத்தின் கீழ் (DVAC) வழக்குப் பதிவு செய்து கைது நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மேலும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் (TN Urban Local Bodies Act)-ன்படி, கடமை தவறிய அதிகாரிகள் மீது துறை ரீதியான கடுமையான ஒழுங்கு நடவடிக்கை (Departmental Action) எடுத்து, அவர்களை உடனடியாகப் பணியிடை நீக்கம் (Suspension) அல்லது நிரந்தரப் பணிநீக்கம் (Dismissal) செய்ய வேண்டும் என்று பொதுமக்கள் கொந்தளிக்கின்றனர்.

### நிதி இழப்பீடு-அதிகாரிகளின் சொத்துக்களைப் பறிமுதல் செய்யக் கோரிக்கை!

“ஊழல் செய்த அதிகாரிகள் தப்பிவிடக் கூடாது. அவர்களால் அரசுக்கு ஏற்பட்ட பல கோடி ரூபாய் வருவாய் இழப்பை, சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் மாதச் சம்பளத்திலிருந்தோ அல்லது அவர்களின் சுய சொத்துக்களைப் பறிமுதல் செய்தோ முழுமையாகப் பிடித்தம் செய்ய வேண்டும். அப்போதுதான் எதிர்காலத்தில் எந்தவொரு அதிகாரியும் லஞ்சம் வாங்க அஞ்சுவார்கள்” எனப் பொதுமக்கள் ஆவேசமாகத் தெரிவிக்கின்றனர்.

### முடங்கும் மாநகர உள்கட்டமைப்பு

பொதுமக்களிடம் வசூலிக்கப்படும் சொத்து வரி மற்றும் வணிக வரி மூலமே சாலைகள், குடிநீர் விநியோகம், பாதாளச் சாக்கடை மற்றும் தெருவிளக்கு போன்ற அடிப்படை உள்கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால், அதிகாரிகளின் சுயநலத்தால் மாநகராட்சிக்குக் கோடிக்கணக்கான ரூபாய் வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளதால், நிதிப் பற்றாக்குறை ஏற்பட்டு ஒட்டுமொத்த வேலூர் மாநகரத்தின் வளர்ச்சியும் முடங்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

சாதாரண நடுத்தர மக்கள் தங்களது வீட்டு வரியைச் செலுத்த சில நாட்கள் தாமதமானாலும் அபராதம் விதிக்கும் மாநகராட்சி நிர்வாகம், 4 மண்டலங்களிலும் நடக்கும் பல கோடி ரூபாய் வரி ஏய்ப்பு செய்யும் பெரும் புள்ளிகளுக்கும், அதற்குத் துணை போகும் அதிகாரிகள் மீதும் இதுவரை நடவடிக்கை எடுக்காமல் மௌனம் காப்பது ஏன்? என்ற கேள்வி எழுந்துள்ளது.

இந்த வணிகக் கட்டிடங்களை முறையாக ஆய்வு செய்து வரியை வசூலித்திருந்தால், இன்று அப்பாவி மக்கள் தலையில் வீட்டு வரி உயர்வோ, குடிதண்ணீருக்கான வரியோ விதித்து சுமையேற்ற வேண்டிய அவசியம் இருந்திருக்காது.

உடனடியாக தமிழக அரசோ, லஞ்ச ஒழிப்புத் துறையோ மற்றும் மாவட்ட ஆட்சியரோ தலையிட்டு, இந்த மெகா வரி ஏய்ப்பு முறைகேடு குறித்து விரிவான விசாரணை நடத்தி, தவறிழைத்த அதிகாரிகளுக்குக் கடுமையான தண்டனை பெற்றுத்தர வேண்டும் என்பதே சமூக ஆர்வலர்களின் ஓங்கி ஒலிக்கும் கோரிக்கையாக உள்ளது.

இனியாவது வேலூர் மாநகராட்சி ஆணையர் விழித்துக் கொள்வாரா? இல்லை, மக்களின் வரிப்பணம் கொள்ளை போவதைத் தடுத்து நிறுத்த, உங்களது ‘காலச்சக்கரம்’ நாளிதழ் இந்த மெகா ஊழலைத் தொடர்ந்து ஆதாரங்களுடன் அம்பலப்படுத்துமா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்!

### ஊழல் புகார்களின் உச்சம்

## ஏ.ஆர்.ஓ தனசேகர் மீது நடவடிக்கை பாயுமா?

வேலூர் மாநகராட்சியில் உதவி வருவாய் அலுவலராக (ARO) பணியாற்றி வரும் தனசேகர் வரி விதித்த பல்வேறு வணிகக் கட்டிடங்கள் பெரும் முறைகேட்டில் சிக்கியிருப்பதாக நீண்ட காலமாகப் பலத்த குற்றச்சாட்டு எழுந்து வருகிறது. குடியிருப்புப் பயன்பாட்டிற்கான அனுமதியில் வணிக நிறுவனங்கள் இயங்கத் துணை போவது, பெரும் புள்ளிகளுக்குச் சாதகமாகச் சொத்து வரியை 75% வரை சட்டவிரோதமாகக் குறைத்து விதிப்பது போன்ற அதிரடி முறைகேடுகளில் இவர் தொடர்ந்து ஈடுபட்டு வருவதாகச் சமூக ஆர்வலர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

இவர் மீது மாநகராட்சி ஆணையரிடம் பலமுறை புகார்கள் அளிக்கப்பட்டும், இதுவரை எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படாததால், இவர் எவ்வித பயமுமின்றித் தொடர்ந்து வரி ஏய்ப்பு ஊழல்களில் ஈடுபட்டு வருவதாகப் பொதுமக்கள் கொந்தளிக்கின்றனர். இத்தகைய தான்தோன்றித்தனமான போக்கினால், பல ஆண்டுகளாக வேலூர் மாநகராட்சிக்குக் பல கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ள நிலையில், சம்பந்தப்பட்ட அதிகாரி மட்டும் கோடிகளில் புரளுவதாகப் புகார்கள் எழுந்துள்ளன.

எனவே, இவர் இதுவரை வரி விதிப்புச் செய்த அனைத்துக் கட்டிடங்களையும் உயர் அதிகாரிகள் முன்னிலையில் மறுஆய்வு (Re-verification) செய்து, துறைரீதியான விசாரணை நடத்த வேண்டும் என்பதே ஒட்டுமொத்த வேலூர் மக்களின் தற்போதைய பிரதான கோரிக்கையாகும்.

**சந்தை நிலவரம்**

| இந்திய ரூபாய் | பங்கு விலை | தங்கம் விலை 22 கேரட் | வெள்ளி விலை |
|---|---|---|---|
| யு.எஸ்.டாலர்-94.72 | பிஎஸ்இ - 76,200.68 | 1 கிராம் - 13,560 | 1 கிராம் - 250.00 |
| யூரோ - 108.089 | என்எஸ்இ - 23,824.10 | சவரன் - 1,08,480 | 1 கிலோ - 2,50,000 |

## வேலூரில் ஜூன் 26-ல்
# பிரம்மாண்ட 'ஆன்டி-டிரக்' மாரத்தான் ஓட்டம்
## போதையில்லா தமிழகத்தை உருவாக்குவோம் - ஆட்சியர் அழைப்பு

**வேலூர், ஜூன் 24-**

முதலமைச்சரின் போதையில்லா தமிழகத்தை உருவாக்கும் திட்டத்தின் கீழ், வேலூர் மாவட்டத்தில் பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்கும் 5 கிலோ மீட்டர் தூர விழிப்புணர்வு மாரத்தான் ஓட்டம் வரும் ஜூன் 26-ஆம் தேதி நடைபெறவுள்ளதாக மாவட்ட ஆட்சியர் பி.எஸ்.லீலா அலக்ஸ் தெரிவித்துள்ளார்.




**ஸ்டார்ட் RUN, ஸ்டாப் DRUGS:**

இளைஞர்கள் மற்றும் பொதுமக்களிடையே போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில், 'ஸ்டார்ட் RUN, ஸ்டாப் DRUGS' (Anti-Drug Run 2026) என்ற தலைப்பில் இந்த மாரத்தான் ஓட்டம் மாவட்ட நிர்வாகம் மற்றும் காவல் துறை மூலம் பாதுகாப்பான வழித்தடங்களில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் சுமார் 500 பேர் வரை பங்கேற்க உள்ளனர்.

**மாரத்தான் வழித்தடம்-நேரம்:**

நாள்: 26.06.2026 (வெள்ளிக்கிழமை)

நேரம்:காலை 6.30 மணி

தொடங்கும் இடம்: வேலூர் டவுன் ஹால் (பழைய பேருந்து நிலையம் அருகில்)

முடியும் இடம்: பாகாயம் சி.எம்.சி. விளையாட்டு அரங்கம்

**பங்கேற்பதற்கான வழிமுறைகள்**

இவ்விழிப்புணர்வு ஓட்டத்தில் 14 வயது முதல் 18 வயது வரை உள்ளவர்கள் தங்களது பெற்றோருடனும், 18 வயதிற்கு மேற்பட்டவர்கள் தாங்களாகவோ அல்லது பெற்றோருடனோ இணைந்து கலந்து கொள்ளலாம். மாரத்தானில் பங்கேற்கும் அனைவரும் தாங்கள் உடல் ஆரோக்கியத்துடன் இருப்பதை உறுதி செய்யும் 'உறுதிமொழிப் படிவத்தைப்' பூர்த்தி செய்து கையொப்பமிட வேண்டியது கட்டாயமாகும்.

மாவட்டத்திலுள்ள அனைத்துப் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள், இளைஞர்கள், விளையாட்டு வீரர், வீராங்கனைகள், அரசு அலுவலர்கள், என்.சி.சி, என்.எஸ்.எஸ், ஸ்கவுட்ஸ் மற்றும் கைட்ஸ் அமைப்பினர் மற்றும் பொதுமக்கள் அனைவரும் இதில் தாராளமாகப் பங்கேற்கலாம்.

**சிறப்பு ஏற்பாடுகள்**

மாரத்தான் ஓட்டத்தில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் பிரத்யேக 'டி-சர்ட்டுகள்' (T-Shirts) விலையில்லாமல் வழங்கப்படும். ஓட்டப்பந்தயம் நடைபெறும் வழித்தடங்களில் ஒவ்வொரு கிலோ மீட்டர் தூரத்திலும், ஓட்டம் முடியும் இடத்திலும் குடிநீர் மற்றும் சிற்றுண்டிகள் தங்குதடையின்றிக் கிடைக்க மாவட்ட நிர்வாகம் ஏற்பாடு செய்துள்ளது. அவசர மருத்துவத் தேவைகளுக்காக முதலுதவிக் குழுவினருடன் கூடிய ஆம்புலன்ஸ் (Ambulance) வாகனங்கள் தயார் நிலையில் நிறுத்தப்படும். போக்குவரத்து விதிகளுக்கு எவ்வித இடையூறும் இல்லாத வகையில் இதற்கான ஒட்டுமொத்த ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

இம்மாரத்தான் குறித்த கூடுதல் விவரங்களை அறிய விரும்புவோர், மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலரை 7401703483 என்ற அலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என ஆட்சியர் பி.எஸ். லீலா அலக்ஸ் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வேலூர் மாநகராட்சி 4வது மண்டலத்தில்
# அனுமதியுமின்றி இயங்கும் 'அல்-சஃபா ஸ்டீல்ஸ்' நிறுவனம்!
## சுமார் ரூ.46 லட்சம் வரி நோட்டீஸ் என்னவானது?

**வேலூர், ஜூன் 24-**

வேலூர் மாநகராட்சி 4-வது மண்டலத்திற்கு உட்பட்ட கொணவட்டம் பகுதியில், அரசு கஜானாவிற்குப் பல லட்சம் ரூபாய் வருவாய் இழப்பை ஏற்படுத்தி வரும் 'Al-Safa Steels' நிறுவனத்தின் மீதான மாநகராட்சி அதிகாரிகளின் கூட்டுச் சதி தற்போது ஆதாரங்களுடன் அம்பலமாகியுள்ளது. எவ்வித கட்டிட அனுமதியும் (Building Approval) இன்றி, முற்றிலும் சட்டவிரோதமாகக் கட்டப்பட்டு, தங்கு தடையின்றி இந்த அனுமதியற்ற கட்டிடம் ஏகபோகமாக இயங்கி வருகிறது. இதுமட்டுமின்றி, பல ஆண்டுகளாக லட்சக்கணக்கில் இமாலய வரி ஏய்ப்பிலும் இந்த நிறுவனம் ஈடுபட்டு வந்துள்ளது பொதுமக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

**ரூ.46 லட்சம் வரி ஏய்ப்பு நோட்டீஸ் நாடகம்!**

இந்த நிறுவனத்தின் அப்பட்டமான விதிமீறல்கள் மற்றும் அனுமதியற்ற கட்டிடம் குறித்துச் சமூக ஆர்வலர்கள் தொடர்ந்து புகார் எழுப்பியதன் அடிப்படையில், கடந்த ஓராண்டிற்கு முன்பே மாநகராட்சி நிர்வாகம் அங்கு அதிரடி ஆய்வு நடத்தியது. அந்த ஆய்வில், இந்த நிறுவனம் வரி ஏய்ப்பு செய்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டு, அதற்கான அபராத வரி செலுத்த சுமார் ரூ. 46 லட்சம் வரையிலான நோட்டீஸ் வழங்க உள்ளதாக மாநகராட்சி தரப்பில் தகவல தெரிவிக்கப்பட்டது.

ஆனால், தகவல் தெரிவிக்கப்பட்டு ஓராண்டிற்கு மேலாகியும் இன்று நாள் வரை அந்த ரூ.46 லட்சத்திற்கான வரி விதிப்பு நோட்டீஸ் Al-Safa Steels நிறுவனத்திற்கு வழங்கப்படாமல் ரகசியமாக முடக்கி வைக்கப்பட்டுள்ளது.

அனுமதியற்ற கட்டிடமாக இருந்தும், அதன் மீது எவ்வித சீல் வைக்கும் நடவடிக்கையும் எடுக்காமல், வரி நோட்டீஸையும் வழங்காமல் இழுத்தடிப்பதற்குப் பின்னணியில் மாநகராட்சி அதிகாரிகளுக்குப் பலத்த 'கவனிப்பு' நடந்துள்ளதா என்ற பலத்த சந்தேகம் எழுந்துள்ளது.

**உதவி நகர திட்டமிடுநர் அலட்சியம்!**

மாநகராட்சி பகுதியில் எவ்வித அனுமதியுமின்றி சட்டவிரோதமாகக் கட்டிடங்கள் கட்டப்படுவதைக் கண்காணித்து, ஆரம்பக்கட்டத்திலேயே அவற்றின் மீது இடிப்பு நடவடிக்கை அல்லது சீல் வைக்கும் அதிரடி நடவடிக்கை எடுக்க வேண்டிய உச்சக்கட்ட பொறுப்பில் இருக்கும் உதவி நகர திட்டமிடுநர் (Asst. City Planner) இந்த விவகாரத்தில் முற்றிலும் கண்டும் காணாமல் வேடிக்கை பார்த்து வருவது ஏன்?

அதேபோல், கீழ்மட்டத்தில் கட்டிட ஆய்வாளர் (Building Inspector) முறையாகப் பணியாற்றுகிறாரா என்பதைத் தொடர்ந்து கண்காணித்து, அனுமதியற்ற கட்டிடங்களைக் கண்டறிந்து நடவடிக்கை எடுக்க வலியுறுத்தவேண்டிய மாநகராட்சி உதவி ஆணையர் (Assistant commissioner) தன் கடமையிலிருந்து தவறி கும்பகர்ண தூக்கத்தில் ஆழ்ந்துள்ளார். மாநகராட்சி உதவி ஆணையர் (AC), கட்டிட ஆய்வாளர், உதவி வருவாய் அலுவலர் (ARO), உதவி நகர திட்டமிடுநர் என ஒட்டுமொத்த அதிகார வர்க்கமும் இந்த நிறுவனத்திற்குச் சாதகமாகச் சாமரம் வீசி வருவதாகப் பொதுமக்கள் பகிரங்கமாகக் குற்றஞ் சாட்டுகின்றனர்.

**ஆணையர் அதிரடி நடவடிக்கை என்ன?**

அப்பாவி மக்கள் தங்களது சிறிய வீடுகளுக்கு வரி செலுத்தத் தவறினால் ஜப்தி நடவடிக்கை என்று மிரட்டும் இதே அதிகாரிகள், எவ்வித கட்டிட அனுமதியும் இல்லாமல் ஏகபோகமாக இயங்கி வரும் இந்த நிறுவனத்தின் கோடிக்கணக்கான முறைகேடுகளைக் கண்டு அஞ்சுவது ஏன்?

உடனடியாக வேலூர் மாநகராட்சி ஆணையர் இந்த கொணவட்டம் 'Al&Safa Steels' விவகாரத்தில் நேரடியாகத் தலையிட்டு, அந்த அனுமதியற்ற கட்டிடத்திற்கு உடனடியாகச் சீல் வைக்க வேண்டும். மேலும், முடக்கி வைக்கப்பட்டுள்ள ரூ.46 லட்சம் வரி நோட்டீஸை வழங்க உத்தரவிடுவதோடு, இந்த சட்டவிரோத நிறுவனத்திற்குத் துணையாக இருக்கும் மாநகராட்சி அலவலர்கள் மீது துறை விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என்று 'காலச்சக்கரம்' நாளிதழ் வாயிலாகப் பொதுமக்கள் கொந்தளிப்புடன் கோரிக்கை விடுத்துள்ளனர் !.

“இதே நிலை நீடித்தால் வேலூர் மாநகராட்சி நிர்வாக முறைகேடு மற்றும் அதிகாரிகளின் கூட்டு ஊழல் குறித்து, அறக்கட்டளை சார்பில் நீதிமன்றத்தில் பொதுநல வழக்குத் தொடரப்படும்'' என்று சமூக ஆர்வலர்கள் மற்றும் அறக்கட்டளை நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

# ரேஷன் கார்டில் பயோமெட்ரிக் பதிவு கட்டாயம்
## வேலூர் மாவட்ட ஆட்சியர் முக்கிய அறிவிப்பு!

**வேலூர், ஜூன் 24-**

வேலூர் மாவட்டத்திலுள்ள அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களும் தங்களது குடும்ப அட்டையில் இடம்பெற்றுள்ள உறுப்பினர்கள் அனைவரது கைவிரல் ரேகையினையும் (மீ-ரிசீசி) வரும் ஜூன் 30-ஆம் தேதிக்குள் கட்டாயம் பதிவு செய்ய வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர் பி.எஸ்.லீலா அலக்ஸ் தெரிவித்துள்ளார்.




இதுகுறித்து அவர் விடுத்துள்ள அவசர பொது அறிவிப்புச் செய்திக்குறிப்பு வருமாறு:

**ஜூன் 30 கடைசி நாள்:**

வேலூர் மாவட்டத்தில் உள்ள குடும்ப அட்டைகளில் இடம்பெற்றுள்ள உறுப்பினர்களில், இதுவரை தங்களது கைவிரல் ரேகையை நியாயவிலைக் கடைகளில் பதிவு செய்யாதவர்கள் வரும் 30.06.2026-க்குள் தங்களுக்குரிய நியாயவிலைக் கடைகளுக்குச் சென்று அதனைப் பதிவு செய்துகொள்ளக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**வெளிவட்டாரங்களில் வசிப்பவர்கள் கவனத்திற்கு**

குடும்ப அட்டையில் இடம்பெற்றுள்ள உறுப்பினர்களில் சிலர் பணி நிமித்தமாகவோ அல்லது இதர காரணங்களுக்காகவோ வேலூர் மாவட்டத்தின் பிற பகுதிகளிலோ அல்லது வெளி மாவட்டங்களிலோ தற்காலிகமாக வசித்து வரலாம். அவர்கள் தங்களுடைய ரேஷன் உரிமையினை உறுதி செய்துகொள்ள ஏதுவாக, தற்போது தாங்கள் வசிக்கும் பகுதிக்கு அருகில் உள்ள எந்தவொரு நியாயவிலைக் கடைக்கும் (Ration Shop) நேரில் சென்று தங்களது கைவிரல் ரேகையினை வரும் ஜூன் 30-ஆம் தேதிக்குள் பதிவு செய்துகொள்ளலாம்.

**இறந்தவர்கள் பெயர் நீக்கம்**

இதேபோல், குடும்ப அட்டைகளில் இடம்பெற்றுள்ள உறுப்பினர்களில் யாரேனும் இறந்திருந்தால், அவர்களது பெயர்களை வரும் 30.06.2026-க்குள் அந்தந்த வட்ட வழங்கல் அலுவலகத்தை (Taloof Supply Office) அணுகி, உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து உடனடியாக நீக்கம் செய்துகொள்ள வேண்டும்.

**இல்லம் தேடி வரும் பயோமெட்ரிக் சேவை**

நியாயவிலைக் கடைகளுக்கு நேரில் சென்று கைவிரல் ரேகையைப் பதிவு செய்ய இயலாத நிலையில் உள்ள முதியவர்கள் மற்றும் குழந்தைகள் ஆகியோர் நலன் கருதிச் சிறப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அவர்கள் தங்களது பகுதியிலுள்ள ரேஷன் கடை விற்பனையாளரைத் (Salesman) தொலைபேசியில் தொடர்பு கொண்டால், விற்பனையாளரே நேரடியாக அவர்களின் இல்லத்திற்கே வந்து கைவிரல் ரேகையினைப் பதிவு செய்துகொள்வார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, வேலூர் மாவட்டப் பொதுமக்கள் அனைவரும் இந்த இறுதி வாய்ப்பினைப் பயன்படுத்தி, வரும் ஜூன் 30-ஆம் தேதிக்குள் தங்களது குடும்ப அட்டைகளைப் புதுப்பித்துக் கொள்ளுமாறு ஆட்சியர் பி.எஸ்.லீலா அலக்ஸ் கேட்டுக்கொண்டுள்ளார்.

## வேலூர் மாவட்டத்தில் ஜூன் 30-ல்
# விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்

**வேலூர், ஜூன் 24-**

வேலூர் மாவட்டத்தில் ஜூன் மாதத்திற்கான விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வரும் 30-ஆம் தேதி மாவட்ட ஆட்சியர் பி.எஸ்.லீலா அலக்ஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதுகுறித்து மாவட்ட நிர்வாகம் தரப்பில் விடுக்கப்பட்டுள்ள செய்திக் குறிப்பில்,

வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகளின் வாழ்வாதார மேம்பாடு மற்றும் விவசாயம் சார்ந்த பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் பொருட்டு, ஜூன் மாதத்திற்கான விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வரும் 30.06.2026 (செவ்வாய்க்கிழமை) காலை 10.00 மணியளவில் நடைபெறவுள்ளது. வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தின் 5-ஆவது தளத்தில் அமைந்துள்ள முதன்மைக் கூட்ட அரங்கில் இக்கூட்டம் நடத்தப்படவுள்ளது.

எனவே, வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் தங்களின் பொதுவான விவசாயப் பிரச்சினைகளைக் கோரிக்கைகள் வாயிலாகவும், தனிநபர் சார்ந்த தேவைகளை மனுக்கள் வாயிலாகவும் இக்கூட்டத்தில் சமர்ப்பித்துத் தீர்வு காணலாம். மாவட்டத்தின் அனைத்துப் பகுதி விவசாயிகளும் இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு ஆட்சியர் பி.எஸ்.லீலா அலக்ஸ் கேட்டுக்கொண்டுள்ளார்.




# நீங்கள் பிறந்த தமிழ் மாதமும் உங்கள் குணங்களும் பலன்களும்

நீங்கள் பிறந்த தமிழ் மாதத்துக்கான உங்கள் குணங்களும் பலன்களும்! தமிழ் மாதம் என்பது ஆங்கில மாதத்தின் நடுப்பகுதியில் ஆரம்பமாகும்.

## தை (ஜனவரி 15- பிப். 15)

தை மாதத்தில் பிறந்தவர்கள் கஞ்சத்தனம் உடையவர்கள். ஒருவருக்கு பத்து காசு செலவழித்தால் தனக்கு பத்து ரூபாய் வருமானம் வருமா என பார்த்து செலவு செய்வார்கள். கடமையில் கெட்டிக்காரர்கள். உயர் அதிகாரிகளை கைக்குள் வைத்துக்கொண்டு பணம் கொடுத்தாவது காரியத்தை சாதித்துக் கொண்டு விடுவார்கள். இதன்மூலம் ஏராளமான வருமானம் பெறுவார்கள். தை மாதத்தில் பிறந்தவர்களை நம்பி மற்றவர்கள் எந்தக் காரியத்திலும் இறங்கக்கூடாது. இவர்களுக்கு விவசாயம் மற்றும் மனைகள் வாங்கி விற்பது ஏற்ற தொழிலாக இருக்கும். இந்த மாதமே விவசாய மாதம் என்பதால் இவர்கள் முழுமையாக விவசாயத்தில் ஈடுபடுவது பெரும் லாபம் தரும். அதே நேரம் இவர்கள் எதிலும் அவசரப்படாமல் நிதானமாக செயல்பட்டால் வெற்றிகள் பெருகும். இவர்கள் ஒரு அழகிய அல்லது பயனுள்ள பொருளைப் பார்த்தால் அந்தப் பொருளைவிட அதை செய்தவரையே பாராட்டுவார்கள்.

அப்படிப்பட்டவர்களை சென்று பார்த்து தாங்களும் அந்த தொழிலில் இறங்கினால் என்ன என்று நினைப்பவர்கள். தை மாதத்தில் பிறந்த பெண்கள் அழகாக இருப்பார்கள். வயதான காலத்தில் கூட மேக்கப் போட விருப்பப்படுவர். மற்ற பெண்களுடன் நெருங்கிப் பழகமாட்டார்கள். இவர்களுக்கு உடன் பிறந்தவர்கள் இருப்பது அபூர்வமான விஷயம். திருமணமான பிறகு கணவர் கணக்கில் எவ்வளவு பணம் இருக்கிறது என்று யோசிப்பதைவிட தனது பொறுப்பில் எவ்வளவு உள்ளது என்று கணக்குப்போடும் குணம் இவர்களிடம் உண்டு. காதல் விஷயத்தில் இவர்கள் மிகவும் கவனமாக இருப்பது நல்லது. காதல் திருமணம் இவர்களுக்கு ஒத்துவராது. குழந்தைகளை வளர்க்க தை மாதத்தில் பிறந்தவர்கள் மிகுந்த சிரத்தை எடுத்துக் கொள்வார்கள். அவர்களது முன்னேற்றத்தில் மிக மிக கவனமாக இருப்பார்கள். குழந்தைகளுக்கு செல்லம் கொடுப்பதில்லை. இந்த மாதத்தில் பிறந்த குழந்தைகளுக்கு திரும்பத் திரும்ப விஷயங்களை சொல்ல வேண்டும். இல்லாவிட்டால் இவர்கள் என்ன சொன்னாலும் தங்கள் இஷ்டம் போலவே நடந்து கொள்வார்கள். அதே நேரம் படிப்பிலும் விளையாட்டிலும் குழந்தைகள் அதிக கவனம் செலுத்துவார்கள்.

## மாசி (பிப்ரவரி 15 – மார்ச் 15)

மாசி மாதத்தில் பிறந்தவர்கள் முன்கோபக்காரர்கள். குழந்தைகள் அதிகம் பிறக்காது. இவர்களிடம் யாராவது உண்மையை மறைத்தால் அதை அறிந்துகொள்ளும் வல்லமை உடையவர்கள். விஞ்ஞானத்தில் ஆர்வம் உண்டு. எதை எந்த வேளையில் செய்தால் பலன் கிடைக்கும் என்பதை அறிந்து திட்டமிட்டு காரியம் செய்யக்கூடியவர்கள்.

இவர்களில் சிலர் பிறந்த ஊரில் சிலகாலம் தான் இருப்பார்கள். பின்பு பிழைப்புக்காக பல்வேறு இடங்களுக்கும் சென்று விடுவார்கள். கஷ்டப்பட்டு பொருள் சம்பாதிப்பார்கள். இவர்கள் தங்களைத் தாங்களே அழகில் சிறந்தவர்களாக எண்ணிக்கொண்டு கர்வத்துடன் நடப்பார்கள். இந்த எண்ணத்தை மாற்றிக்கொண்டால் வாழ்வில் வெற்றி பெறலாம். இந்த மாதத்தில் பிறந்த பெண்கள் காதல் திருமணத்தில் ஆர்வம் உள்ளவர்கள். புகுந்த வீட்டில் இவர்கள் செல்வ செழிப்புடன் வாழ்வார்கள். கணவனை கைக்குள் வைத்திருப்பார்கள். இவர்கள் அனைவருடனும் சகஜமாக பழகும் தன்மை கொண்டவர்கள். எனவே ஏராளமான நண்பர்கள் கிடைப்பார்கள். உறவினர்களை நேசிப்பார்கள். அடிக்கடி வீட்டிற்கு உறவினர்களும் நண்பர்களும் வருவார்கள் என்பதால் வீட்டை சுத்தமாக வைத்திருப்பதும் ஆடம்பர பொருட்களை வாங்கவும் ஆசைப்படுவார்கள். இதனால் அதிகச் செலவுகள் ஏற்படும். இதைத் தவிர்த்து தங்கள் வருமானத்திற்கு ஏற்றவகையில் பொருட்களை வாங்கிக் கொள்வது எதிர்கால சேமிப்புக்கு உதவும். தங்கள் இஷ்டப்படிதான் எதுவும் நடக்க வேண்டும் என்ற கொள்கையிலிருந்து இவர்கள் மாறுபட்டவர்கள். அடுத்தவர்களை அனுசரித்து செல்வார்கள். தொழிலில் அதிக அக்கறை காட்டும் குணம் இவர்களிடம் உண்டு. இந்த மாதத்தில் பிறந்தவர்கள் வெங்கடாசலபதியையும், பத்ரகாளியையும் வணங்கிவந்தால் இவர்களுக்கு ஏற்படும் இன்னல்கள் விலகும். இந்த மாதத்தில் பிறந்த குழந்தைகளிடமும் புத்திசாலித்தனமும் ஆரோக்கியமும் உண்டு. கல்வியில் ஆர்வம் இருக்கும். தங்களுக்கு சம அந்தஸ்தில் உள்ள குழந்தைகளிடமே பழகுவர்.

## பங்குனி (மார்ச் 15 – ஏப்ரல் 15)

பங்குனி மாதத்தில் பிறந்தவர்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டியவர்கள். இவர்கள் விரைவில் போதைப் பழக்கத்திற்கு ஆளாகிவிடுவார்கள். அதிகமான மனக்கஷ்டங்கள் ஏற்படும் என்பதால் இந்த பழக்கம் உருவாக வாய்ப்புண்டு. எனவே போதைக்கு அடிமையாகாமல் தங்களை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். இவர்கள் திரைப்படத் தொழிலுக்கு ஏற்றவர்கள். சிற்பக்கலையிலும் ஆர்வம் உண்டு. இயற்கைக் காட்சிகளை ரசிப்பார்கள். கலையை தெய்வமாக கருதி வழிபடுவார்கள். முன்கோபம் அதிகமாக வரும். தெய்வத்தின் மீது பாரத்தைப் போட்டுவிட்டு உழைப்பை மறந்துவிடும் குணமுண்டு. தெய்வ பக்தி அவசியமே எனினும் செய்யும் தொழிலே தெய்வம் என்பதையும் இவர்கள் மனதில் கொள்ள வேண்டும். இந்த மாதத்தில் பிறந்த பெண்கள் படபடப்புடன் பேசுவார்கள். நாகரீகமாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் உண்டு. சினிமா கவர்ச்சி அதிகம். எனவே இவர்கள் ஏமாந்து போகும் நிலையும் வரலாம். கலைத்துறைக்கு செல்பவர்கள் மிக கவனமாக இருக்க வேண்டும். இந்த பெண்களில் சிலர் இளவயதில் வறுமையில் வாடும் வாய்ப்பு உண்டு. இவர்களில் பலருக்கு பெண்குழந்தைகளே பிறக்கும். எழுத்து தொழிலுக்கு இவர்கள் ஏற்றவர்கள். எப்போதும் கற்பனை உலகில் சஞ்சரித்துக் கொண்டிருப்பார்கள். சுற்றிவளைத்துப் பேசும் குணமுடையவர்கள். எதிலும் முன்ஜாக்கிரதையாக இருப்பார்கள். மற்றவர்கள் இவர்களை பாராட்டி பேசினால் அதில் மயங்கி விடுவார்கள். ஆன்மிகத் துறையில் ஈடுபட்டால் இவர்களுக்கு நல்ல எதிர்காலம் உண்டு. பசிதாங்கும் சக்தி இவர்களிடம் அதிகம். பங்குனியில் பிறந்த குழந்தைகளிடம் பொய்சொல்லும் வழக்கம் அதிகமாக இருக்கும். பெற்றோருக்கு கட்டுப்படாமல் தங்கள் இஷ்டப்படி நடப்பார்கள். இந்த குழந்தைகளை வளர்ப்பதில் அதிக அக்கறையுடன் செயல்பட வேண்டும். இவர்களுக்கு சிறு வயதிலேயே தன்னம்பிக்கையை ஊட்டி வளர்ப்பது நல்லது.

## சித்திரை (ஏப்ரல் 15- மே 15)

சித்திரை மாதம் தமிழ் புத்தாண்டின் துவக்க மாதம். இந்த மாதத்தை எந்த அளவு மகிழ்வுடன் வரவேற்கிறோமோ அதே போல இந்த மாதத்தில் பிறந்தவர்களையும், அனைவரும் விரும்புவது உண்டு. இந்த மாதத்தில் பிறந்தவர்கள் காரியம் சாதிப்பதில் வல்லவர்கள். ஏதாவது ஒரு லட்சியத்தை மனதில் கொண்டு அதை நிறைவேற்ற வேண்டும் என்பதில் முழு மூச்சுடன் ஈடுபடுவார்கள். எந்த துறையில் இருந்தாலும் அந்த துறையில் பிரகாசிக்கும் வாய்ப்பு உண்டு. குறிப்பாக அறிவியல் மற்றும் காவல் துறைகள் இந்த மாதத்தில் பிறந்தவர்களுக்கு ஏற்றவை. உங்கள் முயற்சியில் மின்னல் வேகம் இருக்கும். எதற்கும் கலங்காத மனம் உண்டு. இந்த வேகத்தை செயல்படுத்தும்போது மற்றவர்களை பகைத்துக்கொள்ள வேண்டி வரும். நீங்கள் ஒரு தொழிலதிபராக இருந்தால் சக தொழிலாளர்களை விரட்டி வேலை வாங்க வேண்டியிருக்கும். அப்போது அவர்கள் உங்களை அக்னி போல நனைத்து ஒதுங்கிப் போவார்கள். உங்களை திட்டுவார்கள். இதையெல்லாம் தாங்கிக்கொள்ளும் பக்குவம் உங்களுக்கு இருக்க வேண்டும். வேலை செய்யாமல் ஏதாவது ஒரு மூலையில் முடங்கி இருப்போம் என்ற எண்ணமே உங்களுக்கு பிடிக்காது. சூரியனின் பலத்தால் உங்களிடம் ஆற்றல் அதிகம். செவ்வாய் உங்கள் சக்தியை வெளிப்படுத்தும். சுக்கிரன் உங்களை எதிர்ப்பவர்களை விரட்டியடிக்கும் தன்மையைக் கொடுப்பார். இன்னும் கொஞ்சநாள் கழித்து ஒரு காரியத்தை செய்வோமே என்று ஒதுக்கிவைக்கும் பழக்கம் உங்களிடம் இல்லை. பெரிய துணிவைப் பெற்றுள்ள நீங்கள், உங்கள் மனதிற்குள் கோழை என்றே உகளை எண்ணிக்கொள்வீர்கள். இதற்கு காரணம் அவசரமாக முடிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் பரபரப்புடனும், ஆத்திர உணர்வுடனும், உணர்ச்சி கிளர்ந்தெழுவதாலும் ஏற்படும் நிரம்புத்தளர்ச்சியால் யாரைப் பார்த்தாலும் கத்தத் தொடங்கிவிடுவீர்கள். இந்த கோபத்தை அடக்க நீங்கள்பழகிக்கொண்டால் உங்கள் வாழ்க்கை சித்திரை சூரியன் போல பிரகாசமாக அமையும். பொதுவாகவே சித்திரை மாதத்தில் பிறந்தவர்களுக்கு கோபம் மிக அதிகமாக இருக்கும். சூரியனின் வெப்ப சூழலில் பிறந்ததால் ஏற்படும் ஆத்திரமே இது. இதற்கு உடல் நிலத்தையும் பேணிக்கொள்வதன் முலம் ஆத்திரத்தை அடக்கலாம். இந்த மாதத்தில் பிறந்தவர்கள் எண்ணெய் தேய்த்துக் குளிப்பதை வழக்கமாக வைத்திருக்க வேண்டும். வாரம் ஒரு முறையாவது குளிர்ந்த நீரில் எண்ணெய் தேய்த்து நீராட வேண்டும். திருத்தலங்களுக்கு சென்று அங்கு ஓடும் ஆறுகளில் மூழ்கி நீராடவேண்டும். சித்திரை மாதத்தில் பிறந்த பெண்கள் நடை, உடை, பாவனைகளில்கூட கவர்ச்சி அதிகமாக இருக்க வேண்டும் என விரும்புவார்கள். இந்த கவர்ச்சியின் காரணமாக மற்ற மாதங்களில் பிறந்தவர்கள் உங்களிடம் பொறாமை கொள்வார்கள். ஆனால் உங்கள் உள்மனதை புரிந்துகொண்டால் அவர்கள் உங்களிடம் ஆயுள் முழுவதும் நிட்புடனும் உறவுடனும் இருப்பார்கள். மொத்தத்தில் உங்கள் முன்கோபத்தை மட்டும் தவிர்த்துவிட்டால் உங்களை வெல்ல யாராலும் முடியாது. உங்கள் இளம் வயதில் நீங்கள் கோபக்காரராக இருப்பதால் யாருக்கும் பாதிப்பு இல்லை. ஆனால் திருமணமான பிறகு இந்த கோபத்தை அடியோடு ஒழிக்க வேண்டும்.

## வைகாசி (மே 15 – ஜூன் 15)

வைகாசியில் பிறந்தவர்கள் எதையும் அவ்வளவு எளிதில் மறந்துவிட மாட்டார்கள். காலம்தான் இவர்களுக்கு மறதியைக் கொடுக்க வேண்டும். இவர்கள் வாழ்க்கையில் பல அனுபவங்களை பெறுவார்கள். இதை மற்றவர்களிடம் சொல்லி, எனது அனுபவத்தில் நான் இன்னின்ன துன்பங்களையும் இன்பங்களையும் சந்தித்திருக்கிறேன். என்னை முன் உதாரணமாகக் கொண்டு நடந்துகொள்ளுங்கள் என கூறுவர். இதனால் துன்பத்தையும் இன்பத்தையும் சமமாக பாவிக்கும் பழக்கம் இவர்களிடம் உண்டு. இவர்கள் திடகாத்திரமான உடலமைப்பு கொண்டவர்கள். இவர்களுக்கு நோய் ஏற்பட்டாலும், அதை பெரிதாக எடுத்துக் கொள்ளாமல் டாக்டரிடம் போகக்கூட வேண்டாம் என நினைத்து தங்கள் பணியை பார்த்துக் கொண்டிருப்பார்கள். அதேநேரம் இவர்களிடம் பொறுமை அதிகம் என்பதால் வேலையை முடிக்க அதிகநேரம் எடுத்துக் கொள்வார்கள். இன்பத்தையும் துன்பத்தையும் சமமாக பாவிப்பதுபோல் இந்த மாதத்தில் பிறந்த தொழிலதிபர்களாக இருந்தாலும் சாதாரண தொழிலாளியாக இருந்தாலும் அவரவர் துறையில் கீழ்மட்டம் முதல் மேல்மட்டம் வரை வேலைகளை தெரிந்து வைத்திருப்பார்கள். இந்த மாதத்தில் பிறந்தவர்களுக்கு படிப்பு வராவிட்டாலும் அதைப் பற்றி கவலை கொள்ள மாட்டார்கள். தங்கள் அனுபவ அறிவால் படித்தவர்களை விட சிறப்பாக செயல்படுவார்கள். இவர்கள் மற்றவர்கள் விஷயத்தில் தலையிட மாட்டார்கள். ஆனால் யாராவது இவர்களிடம் சண்டை போட்டால் கடைசிவரை விடாப்பிடியாக நின்று அதில் வெற்றி பெறும்வரை போராடுவார்கள். ஆனால் இந்த மாதத்தில் பிறந்தவர்களுக்கு என்னதான் பொருள் வந்தாலும் அது கையில் நிற்காத அளவிற்கு செலவழிந்து போவதுண்டு. செலவுகளை கட்டுப்படுத்த முயன்றாலும், வீட்டில் உள்ள மற்றவர்களால் நிர்ப்பந்திக்கப்பட்டு செலவழிக்க வேண்டிய அவசியம் வந்துவிடும். இவர்கள் வீட்டை சுத்தமாக வைக்க வேண்டும் என்பதில் ஆர்வம் கொண்டவர்கள். சிறு குடிசையாக இருந்தாலும் கூட அதனுள் நுழைந்தால் பெரிய மாளிகைக்குள்ளோ அல்லது புனிதமான கோயிலுக்குள்ளோ வந்ததுபோன்ற உணர்வு ஏற்படும். இந்த மாதத்தில் பிறந்தவர்கள் யாரிடமும் லேசாக பழக மாட்டார்கள். பழகியவர்கள் இவர்களுக்கு துரோகம் நினைத்தால் காலம் முழுவதும் அவர்கள் முகத்தில் விழிக்க மாட்டார்கள். இந்த மாதத்தில் பிறந்தவர்களுக்கு சோம்பல் அதிகம். வேகமாக வேலை செய்துகொண்டிருக்கும் போதே திடீரென சோம்பல் தலைதூக்கி அப்படியே உட்கார்ந்துவிடுவார்கள். பணம் இவர்களிடம் சேராமல் போவதற்கு இதுவும் ஒரு காரணம். இந்த மாதத்தில் பிறந்த பெண்களுக்கு நல்ல கணவன் அமைவான். இவர்களுக்கு லேசில் கோபம் வராது. கோபம் வந்தால் சாது மிரண்டால் காடு கொள்ளாது என்பதுபோல கடுமையான கோபம் வரும். இந்த குணத்தை மட்டும் நீங்கள் மாற்றிக்கொண்டால் உங்களை யாராலும் வெல்ல முடியாது. இதுபோல சோம்பல் ஏற்படும் நேரங்களில் மட்டும் அதை எப்படியாவது விடுத்து பணியில் தீவிரம் காட்டினால் வாழ்வில் வருத்தம் என்பதே இருக்காது.

## ஆனி (ஜூன் 15 – ஜூலை 15)

ஆனி மாதத்தில் பிறந்தவர்கள் மிகுந்த புத்திசாலிகள். இவர்களிடம் மற்றவர்களை அடக்கி ஆளும் சக்தி உண்டு. இதை பயன்படுத்திக்கொண்டு இவர்கள் வாழ்க்கையில் மிகவும் முன்னேறத் துடிப்பார்கள். இவர்களைப் பொறுத்தவரை, தானும் சிரித்து மற்றவர்களையும் மகிழ்ச்சியாக வைத்துக்கொள்ள வேண்டும் என எண்ணுபவர்கள். இவர்களிடம் சிந்திக்கும் சக்தி அதிகம். சிந்தித்ததை செயல்படுத்த வேண்டும் என்றும் கருதுவார்கள். அதேநேரம் இவர்களுக்கு குணம் அடிக்கடி மாறுபடும். ஒரு வேலையை துவங்கி அதை செய்து கொண்டிருக்கும்போதே இன்னொரு வேலையில் கால் வைப்பார்கள். இதனால் பழைய வேலை கெட்டுப்போகும் வாய்ப்பு உண்டு. எனவே இந்த மாதத்தில் பிறந்தவர்கள் எடுத்த வேலையை முடித்துவிட்டு, அடுத்த வேலைக்கு செல்வது நலம் பயக்கும். இவர்கள் மற்றவர்களை மயக்கும் வகையில் பேசுவார்கள். இந்த பேச்சைக்கொண்டு இவர்கள் எழுத்து மற்றும் மேடைப்பேச்சில் ஈடுபட்டால் எதிர்காலம் சிறக்கும். இவர்கள் எந்த விஷயத்தை எடுத்தாலும் சந்தேகப்படுவதும் உண்டு. இதை தவிர்க்க முயல வேண்டும். ஆரம்பிக்கும் முன்பே தீர ஆலோசித்து ஒரு வேலையை தொடங்கினால் இந்த பிரச்னைக்கு இடம் இருக்காது. இந்த மாதத்தில் பிறந்தவர்கள் ஞாபகசக்தி மிக்கவர்கள். ஆனியில் பிறந்தவர்கள் நகைச்சுவை பிரியர்கள். இவர்கள் ரோஷக்காரர்கள். மற்றவர்கள் ஏதாவது தங்களுக்கு இடையூறு செய்தால் அதற்காக வருத்தப்படவும் செய்வார்கள். எரிந்தும் விழுவார்கள். இவர்கள் மனைவி மற்றும் குழந்தைகள் மீது மிகுந்த பாசம் உள்ளவர்களாக இருப்பார்கள். இவர்களில் யாரையாவது தொழில் காரணமாகவோ பிற காரணங்களாலோ பிரிய வேண்டி வந்தால் அதனால் ஏற்படும் கஷ்டத்தை தாங்கிக்கொள்ளும் சக்தி அற்றவர்கள். இவர்கள் கட்டட வேலை, வண்டி இழுத்தல் போன்ற வேலைகளை செய்ய தயங்குவார்கள். இவர்களைப் பொறுத்த வரை கிளார்க் தொழில் செய்யவே அதிகமாக விரும்புவார்கள். இந்த மாதத்தில் பிறந்த பணக்காரர்கள் தொழிலதிபர்களாக இருக்கவே விரும்புவார்கள். சிறு சிறு வேலைகளை செய்ய விரும்புவதில்லை. ஆனி மாதத்தில் பிறந்தவர்களுக்கு பைனான்ஸ் தொழில் சரியாக வராது. இவர்கள் வட்டி வாங்கும் குணம் உடையவர்கள் அல்ல. அதே போல பிறரிடம் கடன் வாங்கினாலும் உடனே திருப்பி கொடுத்துவிட வேண்டும் என்ற எண்ணத்தில் அரக்கப் பரக்க வேலை பார்ப்பார்கள். இவர்களில் சிலர் கெட்டவர்களுடன் சகவாசம் வைத்து அதனால் வாழ்க்கையையே தொலைத்து விடுவார்கள். அப்படிப்பட்டவர்கள் தீயவற்றில் இருந்து மீண்டு நல்லதையே செய்து பழகினால் மீண்டும் தீமைகள் இவர்களை அணுகாது. இந்த மாதத்தில் பிறந்த பெண்கள் தீர்க்க ஆயுளுடன் வாழ்வார்கள். இவர்களுக்கு அதிகமான குழந்தைகள் பிறப்பதற்கு வாய்ப்பு உண்டு. அதே நேரம் குழந்தைகளால் சிறிது காலம்வரை கஷ்டப்படுவார்கள்.

## ஆடி (ஜூலை 15 – ஆகஸ்ட் 15)

ஆடி மாதத்தில் பிறந்தவர்கள் கற்பனை உலகில் சஞ் சரித்துக் கொண்டிருப்பார்கள். எதிர்காலத்தை திட்டமிடுவதில் இவர்களை மிஞ்ச யாராலும் முடியாது. அந்த கற்பனைகளை செயல்படுத்துவதற்காக என்னென்ன வித்தைகளை செய்ய முடியுமோ அத்தனையும் செய்வார்கள். இந்த மாதத்தில் பிறந்த ஆணோ, பெண்ணோ யாராகஇருந்தாலும் திருமணமாகி குழந்தை பெற்றுவிட்டால் இவர்கள் காட்டும் பாசத்தை வேறு யாராலும் காட்ட இயலாது. குடும்பத்தின் மீதுள்ள பாசத்தை மனதிற்குள் வைத்துக்கொண்டு, பெற்றவர்களிடமோ மற்றவர்களிடமோ காட்ட மாட்டார்கள். இந்த மாதத்தில் பிறந்தவர்களுக்கு தமிழ் மொழி மீது அதிக விருப்பம் இருக்கும். தமிழில் அதிக மார்க் வாங்குவார்கள். இந்த மாதத்தை கடக மாதம் என சொல்வதுண்டு. கடகத்திற்குரிய சின்னமான நண்டைப்போல இவர்கள் மற்றவர்களை பேச்சில் கடித்தும் விடுவார்கள். அதே நேரம் முன்னெச்சரிக்கையாக ஒதுங்க வேண்டிய நேரத்தில் நண்டு ஓடி ஒளிந்துகொள்வது போல மறைந்தும் கொள்வார்கள். இந்த மாதத்தில் பிறந்தவர்கள் பணம் ஈட்ட வேண்டுமென்று திட்டமிட்டு அதை மட்டும் செயல்படுத்துவதில் இறங்கிவிட்டால் இவர்களை மிஞ்ச யாராலும் முடியாது. அதேநேரம் பணம் நம்மைத் தேடி வரட்டும் என இருந்துவிட்டால் பிற்காலத்தில் மிகவும் நொந்துகொள்ள வேண்டி வரும். இவர்கள் அரசியலில் ஈடுபட்டால் பழைய தலைவர்களுக்கு சிலை எடுத்தே சம்பாதித்து விடுவார்கள். இவர்களை யாராவது திட்டினால் அதை பெரிதாக எடுத்துக்கொள்ள மாட்டார்கள். அதே நேரம் யானையைப் போல மனதில் வைத்துக்கொண்டு மறக்கமாட்டார்கள். இவர்களிடம் ஞாபகசக்தி அதிகம். இவர்களுக்கு ஒரே ஒரு அறிவுரையை சொல்லியாக வேண்டும். இவர்களுக்கு யாரையாவது பிடித்துவிட்டால் அவர்களுடன் மிக அதிகமான நட்பு கொண்டுவிடுவார்கள். அதே நேரம் அவர்களால் இடையூறு ஏற்பட்டால் வாழ்க்கையே முடிந்து விட்டது போல விரக்தியின் உச்சத்திற்கு சென்றுவிடுவார்கள். இவ்வாறு செய்யாமல் நண்பர்களை பொறுத்தவரை அளவோடு இருந்து கொண்டால் வாழ்க்கையில் முன்னேறுவதை யாராலும் தடுக்க முடியாது. ஆடி மாதத்தில் பிறந்த பெண்களால் பெற்றோர்கள் மகிழ்ச்சி குறைந்தே இருப்பார்கள். எனவே இந்த மாதத்தில் பிறந்த பெண்கள் பெற்றவர்கள் மனம் கோணாமல் நடக்க முயற்சி செய்தால், வாழ்க்கையில் மிக வேகமாக முன்னேறி விடுவார்கள்.

## ஆவணி (ஆக. 15 – செப். 15)

ஆவணியில் பிறந்தவர்கள் சுதந்திரமான தொழிலில் இருக்க விரும்புவார்கள். பெருந்தன்மையான குணம் கொண்ட இவர்கள் புகழோடு வாழ காரியங்களை சாதிப்பவர்களாக இருப்பார்கள். எதையும் உடனடியாக செய்து முடித்துவிட வேண்டும் என்ற குணமுடையவர்கள். இதன் காரணமாக இவர்களிடம் பிடிவாத குணமும் இயற்கையாகவே அமைந்திருக்கும். இவர்கள் செய்வது மட்டுமே சரி, மற்றவர்கள் செய்வதெல்லாம் தவறு என்ற எண்ணம் படைத்தவர்களாக இருப்பார்கள். இதனால் மற்றவர்களின் பழிச்சொல்லுக்கு ஆளாவார்கள். இந்த மாதத்தில் பிறந்த கடைக்குட்டி குழந்தைகளின் பேச்சுக்கு குடும்பத்தில் மதிப்பு இருக்கும். இந்த மாதத்தில் பிறந்தவர்கள் தங்கள் ஜாதகத்தை பார்த்து இவர்கள் பிறந்த சிம்ம ஸ்தானத்தில் இருந்து சூரியனின் இருப்பைப் பொறுத்து எந்த அளவுக்கு கவுரவமாக வாழலாம் என்பது பற்றி தெரிந்து கொள்ளலாம். இந்த மாதத்தில் பிறந்தவர்கள் வைகாசி மாதத்தில் பிறந்தவர்களை திருமணம் செய்துகொண்டால் பெரும் செல்வந்தர்களாக மாறுவார்கள். ஏனெனில் இந்த மாதங்களில் பிறந்தவர்களின் கொள்கைகள் ஒரே மாதிரியாக இருக்கும். இவர்களிடம் நிதான புத்தி இருக்கும் அளவிற்கு அவசரமும் இருக்கும் என்பதால் சில காரியங்களில் தடுமாற்றம் ஏற்படும். எனவே அவசர குணத்தை மட்டும் விட்டுவிட்டால் நல்லது. இவர்களிடம் சிக்கனம் அதிகம். அதேநேரம் வீட்டிற்கு வந்தவர்களை நல்லபடியாக உபசரிப்பார்கள். இவர்களின் உபசரிப்பை பொறுத்தே உறவினர்களும் நண்பர்களும் இவர்கள் விரிக்கும் வலையில் விழுந்து விடுவார்கள். இவர்களுக்கு கடன் வாங்குவது பிடிக்காது. அதுபோல கடன் கொடுக்கவும் பிடிக்காது. யாரிடமாவது கடன் வாங்கும் நிலைமை ஏற்பட்டால் அதற்கு பதிலாக ஏதாவது கடன் கொடுத்த நபருக்கு உபகாரம் செய்துவிட முயற்சி செய்வார்கள். அதிகாரம் செய்யும் சுபாவம் இவர்களிடம் அதிகம். இவர்களுக்கு ஏற்ற மனைவி அமைவது மிகவும் கடினம். இதன் காரணமாக வாழ்க்கையில் தோல்வி ஏற்பட்டதாக கருதி மனம் உடைந்து போவார்கள். எனவே திருமணத்தின்போது தகுந்த மணமகளையோ, மணமகனையோ தேடிக்கொள்வது நல்லது. ஆரம்பகாலத்தில் நாத்திகராக இருக்கும் இவர்கள் காலப்போக்கில் மிகப்பெரிய ஆத்திகராக மாறிவிடும் சூழல் ஏற்படும்.

## புரட்டாசி (செப். 15 – அக்.15)

புரட்டாசி மாதம் பிறந்தவர்கள் பெரும் செல்வத்துடன் வாழ பிறந்தவர்கள். இவர்கள் முதல் போடாமலே சம்பாதிக்கும் வலிமை படைத்தவர்கள். இவர்களின் எதிர்பாராத முன்னேற்றத்தால் மற்றவர்கள் இவர்களைக் கண்டு பொறாமைப்படுவதுண்டு. இவர்களுக்கு தொழில் ரீதியாக பின்னால் என்ன நடக்கும் என்பதை கிரகிக்கும் சக்தி உண்டு. எனவே தொழில் மற்றும் வியாபாரத்தில் இவர்களை வெற்றிகொள்ள யாராலும் முடியாது. கல்வியிலும் இவர்களுக்கு முன்னேற்றம் உண்டு. அறிவியல் துறையில் ஈடுபட்டால் இவர்கள் முன்னேற்றம் காண்பார்கள். புத்தகம் படிப்பதில் இவர்களுக்கு விருப்பம் அதிகமாக இருக்கும். யாராவது தவறு செய்தால் அவர்களை தட்டிக் கேட்கும் குணம் இவர்களிடம் உண்டு. அத்துடன் திரும்பவும் அந்த தவறை செய்யாமல் இவர்கள் பார்த்துக் கொள்வார்கள். இயற்கை எழில் மிகுந்த இடங்களுக்கு சென்று வருவதிலும் இவர்களுக்கு விருப்பம் அதிகம். எப்போதும் சுறுசுறுப்பாக இருக்கும் இவர்களிடம் சில குறைகளும் உண்டு. இயற்கையாகவே இந்த மாதத்தில் பிறந்தவர்களுக்கு புத்திசாலித்தனம் அதிகம் இருந்தும்கூட ஒரு லட்சியத்தை மேற்கொண்டு அதை நிறைவேற்ற வேண்டுமென நினைக்கமாட்டார்கள். இவர்களுக்குரிய திறமை இவர்களுக்கே தெரியாமல் போய்விடுவது தான் பெரிய குறையாகும். இவர்கள் சந்தேக மனப்பான்மை மிக்கவர்களாக இருப்பார்கள். இப்போதைக்கு கிடைத்தது போதும் என்ற எண்ணமே அதிகமாக இருக்கும். எனவே பின்னால் வரப்போகும் பெரிய லாபத்தை விட்டு விடுவார்கள். இதையெல்லாம் தவிர்த்து ஒரு லட்சியத்துடன் வாழ்ந்தால் இந்த மாதத்தில் பிறந்தவர்களின் எதிர்காலம் பிரகாசமாக இருக்கும். இவர்களுக்கு கண்ட கண்ட உணவுப் பொருட்களை சாப்பிடுவதில் விருப்பம் அதிகம். இதைத் தவிர்த்து சத்துள்ள உணவை அளவோடு சாப்பிட்டால் இவர்களது ஆரோக்கியம் நன்றாக இருக்கும். இந்த மாதத்தில் பிறந்த பெண்களை கணவன்மாருக்கு மிகவும் பிடிக்கும். ஆனால் இவர்கள் தங்கள் கணவன் வீட்டு வேலை உட்பட அனைத்தும் செய்ய வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்களாக இருப்பார்கள். இவர்களுக்கு பிறக்கும் குழந்தைகளுக்கும் குறும்புத்தனம் அதிகமாக இருக்கும். இந்த மாதத்தில் பிறந்த பெண்களில் பலருக்கு செவ்வாய் தோஷம் இருக்கும். எனவே தக்க பரிகாரம் செய்து இவர்களை திருமணம் செய்து கொடுக்கலாம்.

## ஐப்பசி (அக்.15 – நவ.15)

ஐப்பசி மாதத்தில் பிறந்த ஆண்களும், பெண்களும் எந்த காரியத்திலும் வல்லவர்கள். இந்த மாதத்தில்தான் ராஜராஜ சோழன் பிறந்தான். அவர் கட்டிய தஞ்சை கோயில் காலத்தால் அழியாத ஒன்று. அவரைப் போலவே இந்த மாதத்தில் பிறந்தவர்கள் பெரிய திட்டமாகவே போடுவார்கள். இதனாலேயே இவர்கள் அரசியல்வாதிகளாக ஆவதற்கு தகுதி கொண்டவர்கள். இவர்களைப் பொறுத்தவரை வாழ்க்கைக்குத் தேவையான அனைத்து பொருட்களையும் சேர்த்துக் கொள்வதில் ஆர்வம் இருக்கும். பெண்களிடம் பழகுவதில் இவர்களைப் போல் வல்லவர்களை காணமுடியாது. ஐப்பசி மாதத்தில் பிறந்த ஆண்களின் நட்பை பெண்களும் விரும்புவார்கள். இவர்களிடம் பொறுமை அதிகம். உழைத்துப் பிழைக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள். மற்றவர்களுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணமும் உண்டு. இவர்களில் சைவத்தை ஏற்றுக் கொண்டவர்கள்கூட அசைவம் சாப்பிட வேண்டும் என விரும்புவார்கள். பிறரது தேவையற்ற விஷயங்களில் தலையிடுவதில் இவர்கள் ஆர்வம் காட்ட மாட்டார்கள். இவர்களிடம் உணர்ச்சிவசப்படும் பழக்கம் அதிகம். பிறர் முன்னிலையில் கவுரவமாக வாழ வேண்டும் என நினைப்பார்கள். இவர்கள் மனைவிக்கு பயப்படமாட்டார்கள். இந்த மாதத்தில் பிறந்தவர்களுக்கு மூத்த சகோதரர்கள் இருப்பது அபூர்வமான ஒன்றாகும். நீதித்துறையில் நுழைந்தால் இவர்கள் ஜொலிப்பார்கள். இந்த மாதத்தில் பிறந்த பெண்கள் எந்த வேலையையும் தாமதமாகவே செய்வார்கள். தெய்வபக்தி அதிகமாக இருந்தாலும் இவர்களிடம் கர்வமும் அதிகமாக இருக்கும். கல்லூரிக்கு சென்று படிக்காவிட்டாலும் சாதாரண கல்வி அறிவு உள்ளவர்கள்கூட ஏதாவது வேலை செய்து வாழ்க்கையை நடத்தவேண்டும் என எண்ணுவார்கள். இந்த மாதத்தில் பிறந்த பெண்களுக்கு நகைகள், உடைகள் மீது ஆர்வம் அதிகம். ஆனால் இவர்களுக்கு பிறக்கும் குழந்தைகளால் வாழ்நாள் முழுவதும் சிரமம் இருக்கும். இந்த மாதத்தில் பிறந்த பெண்களுக்கு சிறுவயதிலேயே திருமணம் நடந்துவிடும். அவ்வாறு நடக்காவிட்டால் மிகவும் தாமதமாகிவிடும்

## கார்த்திகை (நவ.15 – டிச.15)

கார்த்திகை மாதத்தில் பிறந்தவர்கள் பயந்த சுபாவம் உடையவர்களாக இருப்பார்கள். ஆனால் அந்த பயத்தைப் போக்கி துடிப்புள்ளவர்களாக விளங்க இவர்கள் திருவண்ணாமலையில் வீற்றிருக்கும் அண்ணாமலையாரை வணங்க வேண்டும். இவர்கள் வாழ்க்கையில் கிடைத்த அனுபவங்களைக் கொண்டு எதிர்காலத்தை வகுத்துக் கொள்ளும் வல்லமை உடையவர்கள். எனவே இவர்கள் செய்யும் செயல்கள் நல்லதாகவே அமையும். ஜோதிடம் கற்றுக்கொள்ளும் தகுதி இவர்களிடம் உண்டு. இந்த மாதத்தில் பிறந்த குழந்தைகளின் காதுகளை டாக்டரிடம் பரிசோதித்துக் கொள்வது நல்லது. கார்த்திகை இடியும் மின்னலும் உடைய மாதம் ஆதலால் இந்த சத்தத்தைக் கேட்டு குழந்தைகளின் காதுகள் பாதிக்கப்படலாம் என கூறுவார்கள். இந்த மாதத்தில் பிறந்தவர்கள் இளமையிலேயே பல சோதனைகளை சந்திப்பார்கள். அந்த சோதனைகளால் ஆத்திரம் ஏற்பட்டு செய்யக்கூடாத செயல்களை செய்து விடுவதும் உண்டு. எனவே பொறுமையுடன் இருப்பது மிகவும் நல்லது. இவர்கள் இயற்கையிலேயே தாகம் உடையவர்களாக இருப்பார்கள். ஆத்திரக்காரர்களாக இருப்பதால் இவர்கள் தங்கள் தவறுக்கு மன்னிப்பு கேட்டு அடிக்கடி கோயிலுக்கு செல்வார்கள். இப்படியே சென்றுகொண்டிருக்கும் இவர்கள் பெரும் பக்தர்களாக மாறி ஞான மார்க்கத்திற்கே சென்றுவிடுவார்கள். இந்த மாதத்தில் பிறந்த பெண்களின் நிலை சிறப்பாக இருக்கும். முருகனை வளர்த்த கார்த்திகை பெண்களுக்குரிய மாதம் இது. எனவே முருகனை இந்த மாதத்தில் பிறந்த பெண்கள் வணங்கிவந்தால் சகல சவுபாக்கியங்களுடன் விளங்குவார்கள். இவர்கள் குழந்தையைப் போல மற்றவர்களிடம் பழகுவார்கள். இந்த மாதத்தில் பிறந்த பெண்களை திருமணம் செய்துகொள்ளும் ஆண்களுக்கு சகல பாக்கியங்களும் உண்டாகும். இந்த பெண்கள் பெரியவர்களிடம் மரியாதையாக நடப்பார்கள். விரதங்கள், தானம், தர்மம் செய்வதில் வல்லவர்கள். இந்த பெண்களுக்கு எதிரிகள் இருக்க வாய்ப்பில்லை. இவர்கள் ஏராளமாக செலவு செய்வார்கள். இதனால் கணவன் மனைவி இடையே சிறு மனஸ்தாபங்கள் வரலாம். இதைத் தவிர்த்து விட்டால் இந்தப் பெண்களை அசைக்க யாராலும் முடியாது. இவர்களுக்கு அரசு துறைகளில் வேலை கிடைக்கும் வாய்ப்பு அதிகம். லாட்டரி விஷயத்தில் ஆர்வம் கூடுதலாக இருக்கும். இதையும் இவர்கள் தவிர்க்க வேண்டும்.

## மார்கழி (டிச. 15 – ஜன.15)

குளிர்ந்த மாதமான மார்கழியில் பிறந்தவர்கள் எந்த விஷயத்திலும் தனித்தன்மையுடன் இருக்க வேண்டும் என விரும்புபவர்கள். ஒரு காரியத்தை துவங்கினால் அதை முடிக்காமல் தூங்க மாட்டார்கள். இவர்களுக்கு அரசியல், ஆன்மிகம், தத்துவம், அரசு பணிகளில் நிர்வாகம் போன்ற உயர்பணிகள் ஏற்றவை. இதில் ஈடுபட்டால் இவர்களால் செல்வத்தை குவிக்கமுடியும். ஆடம்பரத்தில் இவர்கள் விருப்பம் கொண்டவர்கள். சம்பாத்தியம் குறைவாக இருந்தாலும் அதிகமாக செலவழிக்க வேண்டும் என விரும்புவார்கள். இதன் காரணமாக இவர்கள் வாழ்க்கையின் பின்பகுதியில் சிரமப்படுவார்கள். எனவே இவர்கள் இந்த குணத்தை மாற்றிக்கொண்டு எதிர்காலத்தைப் பற்றி யோசித்து நடந்து கொள்ள வேண்டும். இவர்கள் ஒரு சைக்கிளில் சென்றால்கூட வேகமாக செல்லவேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள். அதே நேரம் பெரிய பிரச்னைகளை சந்திக்க நேர்ந்தால் அப்படியே இடிந்து போவார்கள்.

இந்த நேரத்தில் இறைவனை வணங்கி அமைதியாக இருக்க கற்றுக்கொள்ள வேண்டும். சிறந்த எழுத்தாளர்களாகவும் இவர்கள் இருக்க வாய்ப்பு இருக்கிறது. இவர்கள் முக்கியமான எதைப்பற்றியாவது எழுதினால் அது உலகின் தலைவிதியையே மாற்றும் தன்மை கொண்டதாக இருக்கும். இந்த மாதத்தில் பிறந்த பெண்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். இவர்களுக்கு கெட்ட சிநேகிதங்கள் ஏற்பட வாய்ப்புகள் அதிகம். கெட்டவர்களுடன் சேர்ந்து மோசமான உணர்ச்சிகளுக்கு அடிமைப்படும் வாய்ப்பு அதிகம். இதற்காக பின்னால் மிகவும் வருத்தப்படுவார்கள். அதே நேரம் படிப்பில் மிகுந்த கவனத்துடன் இருப்பார்கள். இவர்களுக்கு திருமணத்தில் அதிக விருப்பம் இருக்காது. அதேநேரம் ஆண்கள் பெண் நண்பர்களுடனும், பெண்கள் ஆண் நண்பர்களுடனும் வாழ்வதற்கு பிரியப்படுவார்கள். மொத்தத்தில் சுதந்திரமான வாழ்க்கையை இந்த மாதத்தில் பிறந்த பெண்கள் விரும்புவர். எனவே பொருத்தமான வாழ்க்கை துணையை தேடிக்கொண்டால் வாழ்க்கை இனிமையாக அமையும்.

ரசிகன் டூ முதல்வரின் தனிச் செயலாளர்!

# ஜெகதீஷ் பழனிசாமிக்கு முக்கியப் பொறுப்பு வழங்கி கௌரவித்த முதல்வர் விஜய்!

**சென்னை, ஜூன் 24–**

தமிழகச் சட்டமன்றத் தேர்தலில் அமோக வெற்றி பெற்றுத் தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றுள்ள ஜோசப் விஜய், தனது தனிச் செயலாளராக (Private Secretary) நீண்டகால நம்பிக்கைக்குரியவரான 'தி ரூட்' (The Route) நிறுவனத்தின் அதிபர் ஜெகதீஷ் பழனிசாமியை நியமித்துள்ளார்.



### 18 ஆண்டு விசுவாசம் உருகிய ஜெகதீஷ்

தனது புதிய பொறுப்பு குறித்து சமூக வலைதளத்தில் நெகிழ்ச்சியுடன் பதிவிட்டுள்ள ஜெகதீஷ் பழனிசாமி, "18 ஆண்டுகளுக்கு முன்பு, உங்களுடன் ஒரு புகைப்படம் எடுத்துக்கொள்வதற்காக நீண்ட வரிசையில் காத்திருந்த தீவிர ரசிகனாக நான் இருந்தேன். இன்று, மாநில முதலமைச்சரின் தனிச் செயலாளராக உங்கள் அருகில் நிற்கும் இந்தத் தருணம், என் வாழ்க்கை முழுமையடைந்ததை உணர்த்துகிறது. என் கடவுளுக்கு இனிய பிறந்தநாள் நல்வாழ்த்துகள் தளபதி விஜய் அண்ணா" என்று குறிப்பிட்டுள்ளார்.

### யார் இந்த ஜெகதீஷ் பழனிசாமி?

திரைத்துறையில் 15 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவம் கொண்ட ஜெகதீஷ், விஜய்யின் மேலாளராகவும், அவரது நிழலாகவும் வலம் வந்தவர்.

### திரைப்படத் தயாரிப்பு

2020-ல் 'தி ரூட்' என்ற நிறுவனத்தைத் தொடங்கி, விஜய் நடித்த மெகா ஹிட் திரைப்படங்களான 'மாஸ்டர்' மற்றும் 'லியோ' ஆகிய படங்களின் இணைத் தயாரிப்பாளராகப் பணியாற்றினார்.

டிஜிட்டல் வார் ரூம்: தவெக கட்சி தொடங்கப்பட்ட இரண்டரை ஆண்டுகளில் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்ததற்குப் பின்னால், ஜெகதீஷ் அமைத்த நவீன 'டிஜிட்டல் வார் ரூம்' முக்கியக் காரணமாகும்.

### வெற்றியைத் தீர்மானித்த 'அல்காரிதம்' பிரசாரம்:

தேர்தல் காலத்தில் தவெக-வின் ஐடி விங் மற்றும் சோசியல் மீடியா பக்கங்களை ஜெகதீஷின் குழுவே முழுமையாகக் கையாண்டது. தமிழகம் முழுவதிலும் உள்ள பல லட்சக்கணக்கான ரசிகர்களின் தரவுகளை (Data) துல்லியமாகச் சேகரித்து, சமூக வலைதளங்களின் அல்காரிதங்களைச் சாதகமாகப் பயன்படுத்தி, டிஜிட்டல் ஊடகங்களில் தவெக-வுக்கு ஆதரவாகப் பெரும் அரசியல் அலையை உருவாக்கினார். இந்த நவீன உத்தியே நடுநிலை வாக்காளர்களை ஈர்த்து, விஜய்யை அரியணையில் ஏற்றியுள்ளது.

ஒரு சாதாரண ரசிகனாகத் தொடங்கி, இன்று ஒரு மாநில முதலமைச்சரின் வலது கரமாக உயர்ந்துள்ள ஜெகதீஷ் பழனிசாமியின் இந்த உழைப்பும் விசுவாசமும் ஒட்டுமொத்த அரசியல் மற்றும் திரைத்துறையினரை வியப்பில் ஆழ்த்தியுள்ளது. இனி கோட்டையின் நிர்வாகத்திலும் இவரது மேலாண்மை உத்திகள் எதிரொலிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# 'கலைஞர் சர்வதேச மாநாட்டு மையம்' புதிய சட்டமன்றமாக மாறுகிறதா?

**ஜார்ஜ் கோட்டையின் இடநெருக்கடிக்கு முற்றுப்புள்ளி வைக்க முதல்வர் விஜய் திட்டம்**

**சென்னை, ஜூன் 24–**

சென்னையில் நிலவி வரும் கடுமையான போக்குவரத்து மற்றும் இடநெருக்கடிக்குத் தீர்வு காணும் வகையில், கிழக்கு கடற்கரைச் சாலையில் (ECR) கட்டப்பட்டு வரும் அதிநவீன 'கலைஞர் சர்வதேச மாநாட்டு மையத்திற்கு' தமிழக சட்டமன்றக் கூட்டத்தொடரை மாற்றுவது குறித்து அரசு தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது.



### கோட்டையில் இடநெருக்கடி

தற்போது சென்னை ஜார்ஜ் கோட்டை வளாகத்தில் தமிழக சட்டமன்றமும், தலைமைச் செயலகமும் இயங்கி வருகின்றன. வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த வளாகத்தில் கடுமையான இடநெருக்கடி நிலவி வருகிறது. குறிப்பாக அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் (MLAs), அரசு உயர் அதிகாரிகள் மற்றும் செய்தியாளர்களின் வாகனங்களை நிறுத்துவதற்குப் போதிய இடவசதி இல்லாமல் அன்றாடம் பெரும் சிரமம் ஏற்பட்டு வருகிறது.

### கடந்த கால முயற்சிகள்

இந்த இடநெருக்கடிப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில், கடந்த 2006-2011 திமுக ஆட்சிக்காலத்தில் அண்ணா சாலையில் புதிய தலைமைச் செயலகக் கட்டிடம் பிரம்மாண்டமாகக் கட்டப்பட்டது. இருப்பினும், 2011இல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு அதிமுக அரசு பொறுப்பேற்றவுடன், அக்கட்டிடம் அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையாக மாற்றப்பட்டது. இதனால் மீண்டும் ஜார்ஜ் கோட்டைக்கே சட்டமன்றம் திரும்பியது. பின்னர், கொரோனா பேரிடர் காலத்தில் மட்டும் கலைவாணர் அரங்கிற்குச் சட்டமன்றக் கூட்டத்தொடர் தற்காலிகமாக மாற்றப்பட்டு நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

### முட்டுக்காடு மையத்தின் பின்னணி

சென்னை முட்டுக்காட்டில் சுமார் 535 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 'கலைஞர் சர்வதேச மாநாட்டு மையம்' அமைப்பதற்கான கட்டுமானப் பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன. உலகத்தரம் வாய்ந்த இந்த மையத்தில் 5,000 பேர் அமரக்கூடிய பிரம்மாண்ட மாநாட்டு அரங்கும், ஒரே நேரத்தில் 10,000 பார்வையாளர்களைக் கொள்ளக்கூடிய மாபெரும் கண்காட்சி அரங்கும் அமைக்கப்பட்டு வருகின்றன. இந்த சர்வதேச மாநாட்டு மையத்தின் ஒட்டுமொத்த கட்டுமானப் பணிகளும் நடப்பு டிசம்பர் மாதத்திற்குள் முழுமையாக நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### ஜனவரியில் ஆளுநர் உரை?

கோட்டை வளாகத்தின் நெரிசலைக் குறைக்கவும், முதலமைச்சர், அமைச்சர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் எவ்வித போக்குவரத்துப் பாதிப்பும் இன்றி எளிதாக வந்து செல்லவும் இந்த புதிய மையத்தைப் பயன்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்பு, பொதுப்பணித்துறை அமைச்சர் ஆதவ் அர்ஜூனா முட்டுக்காடு கட்டுமானப் பகுதிக்கு நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார். பணிகளின் தரத்தைப் பார்வையிட்ட அவர், நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் பணிகளை விரைந்து முடிக்குமாறு அதிகாரிகளுக்கு அதிரடி உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளார்.

முதலமைச்சர் விஜய்யின் இறுதி முடிவைப் பொறுத்தே இக்கட்டிடத்தில் சட்டமன்றக் கூட்டத்தொடரை நடத்துவது உறுதி செய்யப்படும். இருப்பினும், பொதுப்பணித்துறை உள்வட்டாரங்கள் அளிக்கும் தகவலின்படி, அடுத்த ஆண்டு (2027) ஜனவரி மாதம் நடைபெறவுள்ள ஆளுநர் உரை இந்த புதிய கலைஞர் சர்வதேச மாநாட்டு மைய வளாகத்தில் நடைபெற அதிக வாய்ப்புள்ளதாகத் தெரிகிறது. இதுகுறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

15 ஆண்டு உழைப்பில் உருவான ஆலயம்

# திருச்சி பாணியில் கர்நாடகாவில் சமயபுரம் மாரியம்மன் கோயில்: நாளை மகா கும்பாபிஷேகம்!

**9 நிலை ராஜகோபுரம், 38 பிரம்மாண்ட கருங்கல் தூண்கள்**

**திருச்சி, ஜூன் 24–**

தமிழகத்தின் புகழ்பெற்ற திருச்சி சமயபுரம் மாரியம்மன் கோயிலைப் போன்றே, கர்நாடக மாநிலம் ஸ்ரீரங்கபட்டணம் அருகே காவிரி நதிக்கரையில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள சமயபுரம் மகா மாரியம்மன் கோயிலின் மகா கும்பாபிஷேகம் நாளை (ஜூன் 25, வியாழக்கிழமை) மிக விமரிசையாக நடைபெறவுள்ளது.

### 15 ஆண்டுக்கால உழைப்பு

ஸ்ரீரங்கபட்டணம் பாபுராயனகொப்புலு பகுதியில் காவிரி மற்றும் லோகபாவனி நதிகள் சங்கமிக்கும் இடத்தில், ஸ்ரீரங்கநாதர் கோயில் மற்றும் காசி விஸ்வநாதர் கோயிலுக்கு அருகில் இக்கோயில் தத்ரூபமாக அமைக்கப்பட்டுள்ளது. கைலாச ஆசிரம ஸ்தாபகர் ஸ்ரீ திருச்சி மகா சுவாமிகளின் வழிகாட்டுதலின்படி, குருநாதர் ஸ்ரீ சுரேஷ்வர ஆச்சார்யா இந்த ஆன்மிகப் பணியை முன்னெடுத்துள்ளார்.

கோயில் நிர்வாகிகளில் ஒருவரான ஸ்ரீகாந்த் சண்முகம் இதுகுறித்து கூறுகையில், "முழுக்க முழுக்க ஆகம விதிகளின்படி, திராவிட கட்டடக்கலை நுட்பத்தில் கருங்கற்களைக் கொண்டு இக்கோயில் கட்டப்பட்டுள்ளது. சுமார் 3.5 ஏக்கர் நிலப்பரப்பில், 75,000 சதுர அடி பரப்பளவில் கடந்த 15 ஆண்டுகளாக நடைபெற்று வந்த திருப்பணிகள் தற்போது நிறைவடைந்துள்ளன. இக்கோயிலில் 2 பிரகாரங்கள், 50 தூண்கள், 5 பிரம்மாண்ட கோபுரங்கள் மற்றும் 9 நிலைகளைக் கொண்ட பிரம்மாண்ட ராஜகோபுரம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த ராஜகோபுரம் இப்பகுதியிலேயே மிக உயரமானதாகும்" என்றார்.

### கருவறைச் சிறப்புகள்

மூலவர் அம்மன் எழுந்தருளியிருக்கும் கருவறையின் உள்பிரகாரம், நுணுக்கமான வேலைப்பாடுகளுடன் கூடிய கருங்கற்களால் நேர்த்தியாகச் செதுக்கப்பட்டுள்ளது. அம்மனைச் சுற்றி அஷ்ட மாரியம்மன்கள், அஷ்ட மகா துர்கைகள், அஷ்ட துர்கைகள் மற்றும் அஷ்ட லட்சுமிகளின் சிற்பங்கள் செதுக்கப்பட்ட 38 பிரம்மாண்டமான கருங்கல் தூண்கள் அமையப் பெற்றுள்ளன. கோபுரத்தின் இருபுறமும் காளி மற்றும் மகிஷாசுரமர்த்தினி சிலைகள் காவல் தெய்வங்களாக நிலைநிறுத்தப்பட்டுள்ளன.

### இரண்டாம் கட்டத் திட்டம்

தொடர்ந்து இக்கோயிலில் 'தேவி மண்டபம்', அன்னதானத்திற்கான 'அன்னபூரணி மண்டபம்', 'குருகுலம்', 'கோசாலை', சுவாமிஜி தங்குவதற்குக் 'குடில்' மற்றும் சாதுக்கள் தங்குவதற்கான இருப்பிடங்கள் ஆகியவை இரண்டாம் கட்டத் திட்டத்தில் அமைக்கப்படவுள்ளன.

### நாளை குடமுழுக்கு

நாளை (ஜூன் 25) காலை, ஸ்ரீ திருச்சி ஞானதேசிக மகா சுவாமிகளின் ஆசியுடன், ஸ்ரீ ஜெயேந்திரபுரி மகா சுவாமி தலைமையில், ஸ்ரீ சதாசிவபுரி பகவத் பாதாச்சார்ய சுவாமி மற்றும் ஸ்ரீ சுரேஷ்வர ஆச்சார்யாவின் சங்கல்பத்தின்படி மகா கும்பாபிஷேகம் நடைபெறுகிறது. அன்றைய தினம் மாலை அம்மனின் புஷ்ப பல்லக்கு புறப்பாடும் நடைபெறவுள்ளது.

விழா குறித்த கூடுதல் விவரங்களை https://srisamayapuramashrama.com என்ற இணையதளத்தில் அறியலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பசுவின் சிறுநீரில் வைரஸ்களை அழிக்கும் திறன்! ஐஐடி ரூர்க்கி ஆய்வால் இணையத்தில் வெடித்த விவாதம்

**டேராடூன், ஜூன் 24–**

பசுக்களின் சிறுநீரில் இருந்து தயாரிக்கப்படும் 'கோமூத்ர ஆர்க்' எனப்படும் வடிநீர், வைரஸ்களுக்கு எதிராகச் செயல்படும் திறன் கொண்டது என்று ஐஐடி ரூர்க்கி (IIT Roorkee) கல்வி நிறுவனம் நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது. இந்த ஆய்வு முடிவு தற்போது சமூக வலைத்தளங்களில் மிகப்பெரிய விவாதப் பொருளாக மாறியுள்ளது.

### 99% வரை கட்டுப்பாடு

ஐஐடி ரூர்க்கியின் உயிரியல் பேராசிரியர் ஷைலி தோமர் தலைமையிலான குழுவினர் இந்த ஆய்வை மேற்கொண்டுள்ளனர். இந்த கோமூத்ர ஆர்க் வடிநீர், மனிதர்களைத் தாக்கும் 'சிக்கன்குனியா' வைரஸை அழிக்கும் ஆற்றல் கொண்டது என்பது ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. இந்த வடிநீரில் உள்ள சில குறிப்பிட்ட வேதிப்பொருட்கள் வைரஸின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதுடன், அதன் தாக்கத்தை 90 சதவீதத்திற்கும் மேலாகக் குறைப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இதிலிருந்து மேம்படுத்தப்பட்ட ஒரு இயற்கை கலவை வைரஸ் பாதிப்பை 99.85 சதவீதம் வரை கட்டுப்படுத்துவது ஆய்வில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆய்வு முடிவுகள் 'ஏசிஎஸ் அக்ரிகல்ச்சுரல் சயின்ஸ் - டெக்னாலஜி' (ACS Agricultural Science - Technology) என்ற சர்வதேச அறிவியல் இதழிலும் அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட்டுள்ளன.

### இணையத்தில் கருத்துகள்:

ஐஐடி ரூர்க்கி இந்த ஆய்வு முடிவைச் சமூக வலைத்தளங்களில் பகிர்ந்ததைத் தொடர்ந்து, நெட்டிசன்கள் இடையே விவாதம் அனல் பறக்கிறது.

### ஆதரவு தரப்பு:

இந்தியாவின் பாரம்பரிய மருத்துவ முறைகளை நவீன அறிவியலின் துணையோடு ஆராய்வது வரவேற்கத்தக்கது என்று ஒரு தரப்பினர் கூறுகின்றனர். முன்னோர்களின் அறிவை மூடநம்பிக்கை என்று ஒதுக்காமல், அறிவியல் பூர்வமாக நிரூபிப்பது நாட்டுக்குப் பெருமை என்று அவர்கள் வாதிடுகின்றனர்.

### எதிர்ப்பு தரப்பு:

மற்றொரு தரப்பினர் இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். ஐஐடி போன்ற உயர்மட்ட கல்வி நிறுவனங்கள் இதுபோன்ற ஆய்வுகளில் ஈடுபடுவது சர்வதேச அளவில் இந்தியாவின் அறிவியல் நற்பெயருக்குக் களங்கம் விளைவிக்கும் என்றும், புற்றுநோய் போன்ற கொடிய நோய்களுக்கான ஆராய்ச்சிக்குச் செலவிட வேண்டிய நிதியை இதற்குப் பயன்படுத்துவது தேவையற்றது என்றும் விமர்சிக்கிறார்கள்.

### மத்திய அரசின் திட்டம்:

இந்த ஆராய்ச்சி திடீரெனத் தொடங்கப்பட்டது அல்ல என்று கல்வி நிறுவன வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. மத்திய அரசின் 'சூத்ரா-பிக்' (SUTRA-PIC) என்ற திட்டத்தின் ஒரு பகுதியாகவே இது மேற்கொள்ளப்பட்டுள்ளது. கடந்த 2020ஆம் ஆண்டு சுமார் 98 கோடி ரூபாய் பட்ஜெட்டில் தொடங்கப்பட்ட இந்தத் திட்டம், நாட்டுப் பசுக்களின் பொருட்கள் மூலம் சுகாதாரம், விவசாயம் மற்றும் ஊட்டச்சத்து துறைகளில் உள்ள நன்மைகளை ஆராய்வதை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.




# நேஷ்னல் ஜர்னலிஸ்ட்ஸ் யூனியன்

Under the Trade Union Act of 1926 and governed by the Central Trade Union Regulations of 1938

9360005566 www.nju1926.com

*Voice of Journalists and Journalism*








## அன்புடைய செய்தியாளர்களே...!

எத்திசையும் எந்நிகழ்வும்
எள்ளளவும் மாறாது எடுத்துரைக்கும்
எம் அருமை எழுத்துலக
சொந்தங்களுக்காக...!
நீதியையும், நேர்மையையும்
இருவிழியாய் காத்துநின்று
நான்காம் தூணுக்கு நற்பெயரை
நல்கிடவே நாள்தோறும் உழைத்திடும்
நம் எழுத்து சுதந்திரக்காற்றை சுவாசித்திட
நம் வாழ்வுயர அயராது பாடுபடும்...!



**நே.ஜ.யூ. தலைமையில்...! ஓரணியில் நின்று...!**

நம் சுதந்திரத்தை காத்திட
உரிமைகளை பெற்றிட...!
இறையாண்மையை வென்றெடுக்க
ஒன்றுபடுவோம்...!

தொழிற்சங்க விதியின்படி
அரசு அங்கீகாரம் பெற்ற
நேஷ்னல் ஜர்னலிஸ்ட்ஸ் யூனியனின்
ஓர் அங்கத்தினராக!

பத்திரிகையாளர்களின் பாதுகாவலர்

டாக்டர் **கா.குமார்** அவர்கள்

தலைவர்-நேஷ்னல் ஜர்னலிஸ்ட்ஸ் யூனியன்
எக்ஸ்கியூடிவ் எடிட்டர்-காலச்சக்கரம் நாளிதழ்,
இயக்குநர்-காலச்சக்கரம் அச்சகம்
பவுண்டர் - வெல்கம் பவுண்டேஷன்

## அன்புடன் அழைக்கின்றோம்

Dr R.**தாட்சாயிணி** M.Com., ICWA(Int), M.B.A., M.Phil., Ph.D.,
மாநில பொதுச்செயலாளர்
9360006677



ஜி.கே.ராஜா
மாநில இணைச்செயலாளர்
9659195656